# காவல் நீதிக்கான குரல்

# Voices for Custodial Justice



# ஒளிராத இந்தியா மாறுவதற்கான தருணம்

**– ரத்னா கபூர்**

தில்லியில் அந்தப் பெண் கொடூரமான முறையில் பாலியல் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டது நமது சமுதாயத்தில் உள்ள அழிவுப்பூர்வமான ஆணாதிக்கக் கலாச்சாரத்தையும், சமுதாயத்தில் வன்புணர்ச்சியும், பாலியல் வன்முறையும் எந்த அளவிற்கு ஊடுருவிப் பரவிவுள்ளன என்பதையும் முன்னுக்குக் கொண்டுவந்து அரசியல் விவாதத்தின் மையப் பொருளாக்கியுள்ளன. இத்தகைய வன்முறைகள் காவல்துறையின் மகளிர் பிரிவுகள் அல்லது பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான அரசுத் துறைகள் மட்டுமே கையாள வேண்டிய ஒரு சமூகப் பிரச்சனையாக சுருக்கப்பட்டுவிட முடியாது. நமது சுய தகுதிக்கும், ஒரு தேசம் என்ற முறையில் நமது ஒருமைப்பாட்டிற்கும் இந்த வன்முறை ஒழிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

**தில்லியின் அந்த இளம் பெண்ணும் வேறு பல பெண்களும் அனுபவித்துள்ள கொடூரமான வன்முறைகள் குறித்து நாம் ஆழ்ந்த வேதனைக்கு உள்ளாக வேண்டிய நேரம் மட்டுமல்ல இது, மாறாக மாற்றத்திற்கான ஒரு தருணமாக இதை நாம் காணவேண்டிய நேரம் வந்திருக்கிறது.**

போராட்டம் நடத்தியவர்கள்மீது காவல்துறையினர் தொடுத்த தாக்குதல்களும், எண்ணற்ற அரசியல்வாதிகள் வெளியிட்ட வெறுக்கத்தக்க கருத்துகளும் இவர்களிடமிருந்து இத்தகைய வன்முறைகளை ஒழித்துக்கட்டுவதற்கான ஒரு அறிவுப்பூர்வமான திட்டம் உருவாகும் என்ற நம்பிக்கையைக் கொஞ்சமும் ஏற்படுத்தவில்லை. பெண்களுக்கு அதிகாரம் வழங்குவது பற்றி பசப்பு மொழி பேசுவோர் உள்ளிட்ட நாடாளுமன்றவாதிகள், அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளின் வாயிலிருந்து விழுகிற இப்படிப்பட்ட ஆழ்ந்த பாலியல் பாகுபாடு சார்ந்த வன்மம் மிகுந்த கருத்துகளுக்கு ஒரே ஒரு வருத்தம் தெரிவிப்பது மட்டும் போதுமானது என்று கருதப்படுவதானது, பெண்களுக்கு எதிரான இப்படிப்பட்ட கண்டனத்திற்குரிய அணுகுமுறைகள் எந்த அளவுக்கு சாதாரணமாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன என்பதையும் அந்த அணுகுமுறைகள் ஒரு தொற்று நோயாகப் பரவியிருப்பதையும்தான் காட்டுகின்றன. அரசியல் அமைப்பைச் சார்ந்தவர்கள் எந்த அளவிற்கு இந்த நாட்டின் இளைஞர்களிடமிருந்தும் குடிமக்களிடமிருந்தும் துண்டிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்பதையும், இதில் செயல்படுவோர் தங்களை சுய ஆய்வு அல்லது சுய விமர்சனத்திற்கு அப்பாற்பட்ட தேவதைகள் போல் நினைத்துக் கொள்கிறார்கள் என்பதைத்தான் இப்படிப்பட்ட கருத்துகளும் நடத்தைகளும் சுட்டிக்காட்டுகின்றன. அரசியல் தளத்தில் பொதுவான பொறுப்புகளில் இருப்பவர்கள் கூறும் கருத்துகளில், நமது சமுதாயத்தில் ஒரு ஆரோக்கியமான, மரியாதைக்குரிய பாலின நிலையை உருவாக்க முடியும் என்பது குறித்து கொஞ்சமும் சொல்லப்படுவதில்லை.

பாலின ரீதியான அல்லது மதரீதியான சிறுபான்மையினர், சிறுவர்கள், சிறுமிகள், பெண்கள் என யாராக இருந்தாலும் அவர்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் நம்மை கலங்க வைக்கிற சூழலுக்கு நாம் சென்றாக வேண்டிய அவசியம் உள்ளது. அந்த நிலைக்கு நாம் எவ்வாறு செல்லப்போகிறோம் என்பதுதான் கேள்வி. மேலும் மேலும் கடுமையான சட்டங்களையும் தண்டனைகளையும் கொண்டுவராமல் நாம் தீர்வுகளை எட்டிவிட முடியாது. ஏனென்றால், இந்த சட்டங்களை செயல்படுத்தும் நிலையில் இருக்கிறவர்கள் தங்களது நிலைபாடுகள் குறித்தோ, மனப்பாங்குகள் குறித்தோ விசாரணைக்கு உட்படுத்த வேண்டிய தேவை இல்லை என்று கருதுகிறார்கள். தில்லியின் அந்த இளம் பெண்ணும் வேறு பல பெண்களும் அனுபவித்துள்ள கொடூரமான வன்முறைகள் குறித்து நாம் ஆழ்ந்த வேதனைக்கு உள்ளாக வேண்டிய நேரம் மட்டுமல்ல இது, மாறாக மாற்றத்திற்கான ஒரு தருணமாக இதை நாம் காணவேண்டிய நேரம் வந்திருக்கிறது. அதே நேரத்தில் இந்த எதிர்ப்புப் போராட்டங்களுக்கான எதிர்வினைகள் என்பவை ஆண்களுக்கு எதிரான பிரச்சாரமாகவோ, வெறும் தணிக்கை நடவடிக்கைகளாகவோ மூச்சுத் திணற வைக்கும் வகையில் ஆடை அணியவும் அவ்வாறு நடந்து கொள்ளவும் போதிப்பதாகவோ பழமைவாத பாலியல் நெறிமுறைகளாகவோ சுருங்கிவிடக்கூடாது. அல்லது, சட்டம் கொண்டுவருவதும், கடுமையான நடவடிக்கைகளும் மட்டுமே இத்தகைய வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் என்றும் நாம் நம்பிவிடக் கூடாது. சில பெண்கள் மற்றவர்களைவிட கூடுதல் பாதுகாப்புக்கு உரியவர்கள், சிலர் மற்றவர்களைவிட வன்புணர்ச்சிக்கு

இலக்காகக் கூடியவர்கள் அல்ல என்ற அற்பத்தனமான சிந்தனைகளை இனியும் நாம் ஏற்கக் கூடாது. பணித்தலங்களிலும், அதேபோல் வீடுகளிலும் பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்த வேண்டுமென்றால் நாம் பாலியல் (செக்ஸ்) என்பதை இலக்காக வைக்காமல் பாலியல் கோட்பாடு (செக்ஸிஸம்) என்பதையே இலக்காக வைத்து விவாதிக்க வேண்டும். ஒருவருக்கு ஒருவர் உடன்பட்டு உறவுகொள்கிற ஓரின பாலியல் உறவு குற்றமாகவும், இருபாலினத்தவர் திருமணம் செய்துகொண்டபின் நடக்கக்கூடிய வன்புணர்ச்சி மன்னிக்கத்தக்கதாகவும் இருக்கிற நிலைமையை நாம் இனியும் ஏற்கக்கூடாது. இப்படிப்பட்ட சமத்துவமின்மைகள் மனித உரிமை மதிப்பீட்டில் எந்த இடத்திலும் வைக்கத்தக்கவை அல்ல. ''சட்டப்பூர்வ வன்புணர்ச்சி'' என்ற போலித்தனத்தின் கீழ் அல்லது ''இந்திய கலாச்சார மாண்புகள்'' என்ற பிரம்மையின் கீழ் மறைக்கத்தக்கவை அல்ல.

## வன்புணர்ச்சி வழக்குகள் இழுத்தடிக்கப்படுவதற்கு அனுமதிக்கிற அல்லது குற்றவாளிகளை விடுவிப்பதற்காக லஞ்சம் வாங்குகிற நீதிபதிகள்; தங்களது மகன்கள் அராஜகமான முறையில் ஆணாதிக்கத்தை வெளிப்படுத்துகிறபோது அதை ஊக்குவிக்கிற, சில நேரங்களில் அதைப் பாராட்டவும் செய்கிற பெற்றோர்கள்

குற்றப் பின்னணி உள்ளவர்களை வேட்பாளராக நிறுத்தவும், அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக பதவி ஏற்கவும் அனுமதிப்பதன் மூலம் வன்முறைக் கலாச்சாரத்தை ஊக்குவிக்கிற நமது அரசியல்வாதிகள் மக்களுக்கு பதில் அளிக்கக் கடமைப்பட்டவர்களாக ஆக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளது; அதே நேரத்தில் பிரச்சனை அதோடு முடிந்துவிடவில்லை. வன்புணர்ச்சி வழக்குகள் இழுத்தடிக்கப்படுவதற்கு அனுமதிக்கிற அல்லது குற்றவாளிகளை விடுவிப்பதற்காக லஞ்சம் வாங்குகிற நீதிபதிகள்; தங்களது மகன்கள் அராஜகமான முறையில் ஆணாதிக்கத்தை வெளிப்படுத்துகிறபோது அதை ஊக்குவிக்கிற, சில நேரங்களில் அதைப் பாராட்டவும் செய்கிற பெற்றோர்கள்; தங்களது மனைவிமார்களை அவமதிக்கிற, பெண்கள் மரியாதையோடு நடத்தப்பட வேண்டியவர்கள், அவர்களது மனிதத்துவம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற சிந்தனைகளுக்கு மாறாக அவர்கள் வெறும் உடைமைப் பொருளாக நடத்தப்பட வேண்டியவர்களே என தங்களது மகன்களுக்கும் மகள்களுக்கும் போதிக்கிற கணவன்மார்கள் ஆகிய அனைவருமே இந்த வன்முறைக் கலாச்சாரத்தில் சம்மந்தப்பட்டவர்கள்தான். அரசு எந்திரத்தில் அங்கம் வகிக்கிறவர்களாக அல்லது தனிப்பட்ட நபர்களாக ஆண்கள், சமுதாயத்தின் பாதுகாப்பற்ற பகுதியினருக்கு எதிராக தங்களது அதிகாரத்தை வெளிப்படுத்தும் ஒரு நடைமுறையாக வன்புணர்ச்சியில் ஈடுபடுகிறார்கள் என்பது அனுபவப்பூர்வமான உண்மை. இருந்தபோதிலும், வன்புணர்ச்சி வழக்குகளில் மிகக் குறைவானவர்களே குற்றவாளிகளாக தண்டனை பெறுகிறார்கள் என்பது, வன்புணர்ச்சி நடந்ததாக பெண்கள் பொய் சொல்கிறார்கள், அவர்களுக்கு என்ன நடந்ததோ அது சாதாரணமான பாலியல் குற்றம் சம்மந்தமானதுதான் என்ற செய்தியைத்தான் பரப்புகிறது.

இந்த நிகழ்ச்சி போக்குகளை வெறும் ''துரதிஷ்டவசமான நிகழ்வுகள்'', ''தவறான புரிதல்களின்'' விளைவுகள், அல்லது ஒழிக்கப்பட வேண்டிய ஒரு ''தொந்தரவு'' என்று மட்டும் பார்க்கக் கூடாது. நமது தார்மீக உணர்வுகளை உறுத்த வேண்டிய இந்த நிகழ்வுகள் தொடர்பாக நாம் எந்த அளவிற்கு மரத்துப் போய்விட்டோம், உணர்வற்றவர்களாகிவிட்டோம் என்பதைத்தான் இத்தகைய சித்தறிப்புகள் வெளிப்படுத்துகின்றன. அனைத்து பெண்கள், இந்த வண்ணம் மிகுந்த அழிப்பூர்வ ஆணாதிக்கப் போக்கிற்கு இரையாகக் கூடிய அனைத்து ஒதுக்கப்பட்ட பிரிவினர் இவர்களது உடல் சார்ந்த மற்றும் பாலினம் சார்ந்த முழுமைத் தன்மையை நாம் மதிக்கத் தயாராகிறவரையில், நம்மை ஒரு நவீனமான அல்லது ஒரு நாகரீகமான தேசம் – அரசு என்று சொல்லிக் கொள்வதற்கான தகுதி, அல்லது ''ஈடு இணையற்ற இந்தியா'' என்று முழங்குவதற்கான தகுதி நமக்கு இல்லை. நமது மனித நேயத்தையும் கருணை உணர்வையும் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, வன்முறைக் கொடூரங்களைக் கண்டுகொள்ளாத போக்கை வளர்த்துக்கொள்வோமென்றால், என்னதான் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருந்தாலும், அந்நிய நேரடி முதலீடுகள் எந்த அளவிற்கு வந்து பாய்ந்தாலும் அதற்கெல்லாம் மதிப்பு இருக்கிறதா என்ன ?

(ரத்னா கபூர், ஜின்டால் குளோபல் சட்டக் கல்லூரியில் சட்டப் பேராசிரியராக உள்ளார்.)

**ஆதாரம்: The Hindu, December 30, 2012**

# லல்லி தேவிக்காக எரியவில்லை எந்த மெழுகுவர்த்தியும்

– பத்ரி நாராயண்

சோகமான மரணத்தைத் தழுவிய அந்த 23 வயதுப் பெண், அதற்கு முன் கொடூரமான முறையில் கும்பலாக வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டதற்கு எதிராகக் கண்டனக் குரல்கள் எழுந்தன என்றாலும், தலித் பெண்கள் தினந்தோறும் வன்புணர்ச்சிக்கும் தாக்குதல்களுக்கும் இலக்காவது பற்றி என்ன சொல்வது ?

விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டவர்களின் குரல்களை யார் கேட்பார் ? இங்கே விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள் என்கிறபோது, தலைநகரத்தில் வசிக்காதவர்கள், நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தைச் சேராதவர்கள், தொலைக்காட்சி கேமராக்களின் கண்ணில் படாதவர்கள் என்று அர்த்தம். விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள், தங்களுடைய கதைகளைக் கேட்பதற்கு யாரும் இல்லை என்பதால் வாய்மூடி மவுனமாக இருப்பவர்கள் என்று அர்த்தம்.

23 வயதுப் பெண் கொடூரமான முறையில் கும்பலாக வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டதை எதிர்த்து தில்லி குடிமக்கள் சரியான முறையிலேயே தங்களது குரல்களை எழுப்பினார்கள். ஆனால், புள்ளிவிவரத்தோடு நிறுவப்பட்டுள்ள மற்ற உண்மைகளின் கதி என்ன ? வன்புணர்ச்சியும் தாக்குதல்களும் தலித் பெண்களுக்கு அன்றாட நிகழ்வுகளாக இருப்பதை என்னவென்று சொல்வது ? தலித்துகளுக்கு எதிரான குற்றச் செயல்கள் பெரும்பாலானவை பதிவு செய்யப்படாமலே போகின்றன; காரணம் என்னவென்றால் காவல்துறையினரும், கிராம மன்றங்களும், அரசாங்க அதிகாரிகளும் இந்து மத, சாதிய அமைப்பின் பாகுபாடுகளைப் பிரதிபலிப்பவர்களாகவே இருக்கிறார்கள். பழிவாங்கப்படலாம், காவல்துறையின் ஆத்திரத்திற்கு உள்ளாகலாம் என்ற அச்சங்களின் காரணமாகவும், லஞ்சம் வழங்க முடியாததன் காரணமாகவும் அவர்களுக்கு எதிரான குற்றங்கள் வெளிப்படுத்தப்படாமலே போகின்றன.

வலுவான கூட்டணியாக உள்ள நில உடைமையாளர்கள், ஆதிக்கச்சாதி கிராமத்தினர், காவல்துறை அதிகாரிகள் ஆகியோரால் தலித் பெண்கள் மீது நடத்தப்படும் பாலியல் தாக்குதல்களின் எண்ணிக்கை “அசாதாரணமான அளவுக்கு அதிகமாக இருக்கிறது” என்று உலகப் பொது மன்னிப்பு நிறுவனத்தின் 2001ம் ஆண்டிற்கான அறிக்கை தெரிவிக்கிறது. 5 சதவீத தாக்குதல்கள் மட்டுமே பதிவு செய்யப்படுகின்றன, 30 சதவீத வன்புணர்ச்சிப் புகார்கள் போலியானவை என தள்ளுபடி செய்யப்படுகின்றன என்று அந்த ஆய்வு மதிப்பிட்டுள்ளது. காவல்துறையினர் வழக்கமாகவே லஞ்சம் கேட்கிறார்கள், சாட்சிகளை பயமுறுத்துகிறார்கள், ஆதாரங்களை மூடி மறைக்கிறார்கள், பெண்களின் கணவன்மார்களை அடிக்கிறார்கள் என்றும் அந்த ஆய்வறிக்கை கூறுகிறது. வன்புணர்ச்சிக்கு உள்ளானவர்கள் கொலை செய்யப்பட்டாலும் கூட குற்றவாளிகள் தண்டனையின்றித் தப்பிக்கிறார்கள்.

படையாட்கள் போல செயல்படுகிற கண்காணிப்புக் குழுக்களைச் சேர்ந்தவர்கள், உள்ளூர் காவல்துறையினரின் உதவியோடு கிராமங்களில் தாக்குதல் தொடுப்பது, தலித் வீடுகளுக்குத் தீ வைப்பது, பெண்களை வன்புணர்ச்சி செய்வது என்று தொடுக்கிற சாதியப் போரின் ஒரு பகுதியாகவே பெண்கள் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்படுவதும் தாக்கப்படுவதும் பெருமளவிற்கு நிகழ்கின்றன.

ஆதிக்கச்சாதி ஆண்கள் சாதிய நிலைகளில் அடிப்படையிலேயே தலித் மற்றும் தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த பெண்களை பாலியல் ரீதியாக ஆளுமை கொள்கிறார்கள் என்று சட்டப்பூர்வ பதிவுகளும், ஊடகச் செய்திகளும், தனிப்பட்ட வாக்குமூலங்களும் வெளிப்படுத்துகின்றன. பின்வரும் சம்பவத்தைப் பார்ப்போம்: அலஹாபாத் நகரிலிருந்து சுமார் 30 கி.மீ. தொலைவில் உள்ள தார்வாய் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ஷீத்தல்பூர் திகாரி கிராமத்தில் அண்மையில் நடந்த சம்பவம் இது. 45 வயதுள்ள லல்லி தேவி தனக்கு இந்திரா ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிலத்தில் வீடு கட்டிக் கொண்டிருந்தார். அப்போது உள்ளூர் வட்டிக் கடைக்காரர் வேறு சில செல்வாக்குள்ள நபர்களோடு அங்கே வந்து அந்த வீட்டை இடித்துத் தள்ளினார். அவர்களோடு லல்லி காரணம் கேட்டு வாதாடிக்கொண்டிருந்தபோது அவரது கணவர் குலாப், 12 வயது மகன் இருவரும் அந்த குண்டர்களால் ஈவு இரக்கமின்றி அடித்து உதைக்கப்பட்டனர். லல்லி தேவி படுத்துறங்கவும் சமையல் செய்யவும் பயன்படுத்தி வந்த குடிசை தரைமட்டமாக்கப்பட்டது. இன்றும் கூட லல்லியின் உடலில் அந்த பிராமணிய வன்முறையின் வடுக்கள் இருக்கின்றன. ஆனால், காவல்துறையினர் லல்லியை 24 மணி நேரம் காவலில் வைத்திருந்ததோடு, எந்த ஒரு வன்முறையும் நிகழவில்லை என்று கூறினர்.

**மோசமான பாதிப்புக்கு உள்ளாகிறவர்கள்**

பாலியல் வன்முறையால் மோசமாக பாதிக்கப்படுகிறவர்கள் தலித் பெண்கள்தான். ஏனென்றால் அவர்கள் மூன்று நிலைகளில் ஒடுக்குமுறையைச் சந்திக்கிறார்கள்–சாதி, வர்க்கம், பாலினம். லல்லி தேவியும் ஒரு தலித், ஒரு பெண், ஒரு உழைக்கும் வர்க்கத் தொழிலாளி என்ற முறையில்தான் வன்கொடுமைகளை எதிர்கொண்டார். தலித் பெண்கள் பாலியல் ஒடுக்குமுறைக்கும் பொருளாதாரச் சுரண்டலுக்கும் சமூக – கலாச்சார அடிமைத்தனத்திற்கும் உள்ளாகிறார்கள். ஆனால் நாட்டின் நீதி அமைப்பு அவர்களை எப்போதுமே கைவிடுகிறது.

1989ல் வி.பி. சிங் பிரதமராக பொறுப்பேற்ற உடனேயே, அவரது தொகுதியாகிய உத்தர பிரதேச மாநிலத்தின் ஃபதேபூர் பகுதியில் தன்ராஜ் என்ற ஒரு தலித், அவர் வேலை செய்து வந்த வயல்களின் உடைமையாளர்களான சில தாகூர்களால் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டார். தன்ராஜ் தனது மனைவியை ஒரு இரவு தங்களோடு இருக்க அனுப்பி வைக்க வேண்டும் என்று நிலவுடைமையாளர்கள் கட்டளையிட்டு இருந்தனர். அந்தக் கட்டளையை அவர் மீறியதால் வீட்டிலிருந்து வெளியே இழுத்துவரப்பட்டு உயிரோடு கொளுத்தப்பட்டார். ஒடுக்கப்பட்ட சமூகங்களின் ரட்சகராக தன்னை முன்னிருத்திய வி.பி. சிங் உடனடியாக அந்த இடத்திற்கு விரைந்து சென்று, தன்ராஜின் மனைவிக்கு இழப்பீடாக பிரதமர் நல நிதியில் இருந்து ரூ.1,000 வழங்கி ஒரு நிலத்தையும் ஒதுக்கினார். ஆனால், அவருக்கு ஒதுக்கப்பட்ட நிலம் தாகூர்களின் நிலத்தை ஒட்டியே இருந்தது. ஆகவே அந்த நிலத்திற்குள் தன்ராஜ்மனைவியால் செல்லவே முடியவில்லை. பின்னர் நடந்த வழக்கில் தாகூர்கள் குற்றமற்றவர்கள் என்று விடுவிக்கப்பட்டார்கள்.

அலகாபாத் அருகிலுள்ள தாவ்னா என்ற கிராமத்தைச் சேர்ந்தவர் ஷிவ்பாட்டியா என்ற தலித் பெண். கிராமத்தின் ஆதிக்க சாதியினராகிய குர்மி (மிகவும் பிற்படுத்தப்பட்டோர்) பிரிவைச் சேர்ந்த சில சிறுவர்கள் ஷிவ்பாட்டியாவின் நிலத்தில் விளைந்திருந்த காய்கறிகளை சூறையாடினார்கள். அதை அவரது மகன் எதிர்த்தான். இதற்காக ஷிவ்பாட்டியா 1994 ஜனவரி 21 அன்று கிராமத் தெருக்களில் நிர்வாணமாக இழுத்துச் செல்லப்பட்டார். இந்தச் சம்பவம் நடந்தபோது முலாயம் சிங் யாதவ், கன்ஷி ராம் இருவரும் கூட்டணி அமைத்து உத்தரபிரதேச மாநிலத்தில் அரசு அமைத்திருந்தனர். மேற்படி சம்பவம் நாடு தழுவிய அளவில் செய்தியானதைத் தொடர்ந்து, முலாயம் சிங், கன்ஷி ராம் இருவரும் அந்த கிராமத்திற்கு விரைந்து சென்றனர். பாதிக்கப்பட்டவருக்கு நிலமும் பணமும் இழப்பீடாக வழங்கப்பட்டன. குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். அந்தச் சம்பவம் நடந்து 17 ஆண்டுகள் ஓடிவிட்டன. ஆனால், அந்த மாநிலத்தின் முதலமைச்சராக மாயாவதி நான்கு முறை பதவி வகித்தார் என்ற போதிலும் கூட, இன்றளவும் அந்த வழக்கு அமர்வு நீதிமன்றத்தில் காத்துக்கிடக்கிறது. சொல்லப் போனால் ஷிவ்பாட்டியாவுக்கும் நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல வருகிற அவரது உறவினர்களுக்கும் சித்திரவதைகள் அதிகரித்துள்ளன. திரும்பத் திரும்ப நீதிமன்றத்திற்கு வரவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியுள்ள அவர்கள் நடந்த சம்பவத்தை மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

**தன்ராஜ் தனது மனைவியை ஒரு இரவு தங்களோடு இருக்க அனுப்பி வைக்க வேண்டும் என்று நிலவுடைமையாளர்கள் கட்டளையிட்டு இருந்தனர். அந்தக் கட்டளையை அவர் மீறியதால் வீட்டிலிருந்து வெளியே இழுத்துவரப்பட்டு உயிரோடு கொளுத்தப்பட்டார்.**

இன்று அவர்கள் கேட்பதெல்லாம் வழக்கு முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். அதன் மூலம் நீதிமன்றத்திற்கு வரவேண்டிய காரணத்தால் இனியும் தங்களது அன்றாடக் கூலியை இழக்கத் தேவையில்லை என்ற நிலைமை ஏற்பட வேண்டும் என்பதுதான். தலித் பெண்கள் ஊடகங்கள் மற்றும் காவல்துறையின் கண்களுக்கு மட்டுமே தெரியாதவர்களாக இல்லை, நீதிமன்றத்தின் கண்களுக்கும் அவர்கள் தெரிவதில்லை என்பது கண்கூடு. அவர்கள் சம்மந்தப்பட்ட வழக்குகளை முடிவுக்குக் கொண்டுவருவதில் உண்மையான அக்கறையுள்ள நடவடிக்கைகள் ஏதுமில்லை என்பதை இதைத்தான் இது காட்டுகிறது. தில்லியில் ஒரு கும்பலின் வன்புணர்ச்சிக்கு எதிரான பொது மக்கள் ஆவேசம் உண்மையிலேயே முக்கியத்துவம் பெற்றிருக்க வேண்டுமானால் அது பாதிக்கப்பட்ட தலித் பெண்களுக்கும் நீதி கிடைப்பதற்கு இட்டுச் சென்றாக வேண்டும்.

**(பத்ரி நாராயண், அலஹாபாத் பல்கலைக் கழகத்தில் அரசியல் அறிவியல் ஆசிரியராக உள்ளார்)**

**ஆதாரம்: The Hindu, December 30, 2012**

# சட்ட நியாயங்களுக்கு உட்பட மறுக்கும் அடங்காத தன்மையைப் பற்றி...

– வ. கீதா

**சமமில்லாத, வர்க்க மற்றும் பாலின மதிப்பீடுகளை முன்வைப்பதாக, தண்டனைக்கு உட்பட மறுக்கும் அடங்காத தன்மை இருக்கிறது. அதன் எல்லா வடிவங்களிலும் அது அதிகாரத்தைக் கட்டமைப்பதாக இருக்கிறது. அதிகாரத்தை அனுபவிக்கும்போதே அது தண்டனைக்கு அடங்காத தன்மையின் அடையாளங்களோடு மகிழ்வோடு இருக்கிறது. அதனையே அது கவர்ச்சியானதாக, விரும்பக்கூடியதாக மாற்றுகிறது. பாலியல் வன்புணர்ச்சியாளன் ஒரு சாதாரண குடிமகனாகவோ, அல்லது ஒரு அரசின் பாதுகாவலனாகவோ இருக்கலாம். தண்டனைக்கு அடங்காத தன்மை என்பது அதிகாரத்தைக் காட்டுகிற, குறிப்பிட்ட நடைமுறையாக பாலியல் உறவை ஆக்கி அதில் மகிழ்வதாக இருக்கிறது. அதிகாரமும் பாலியல் உறவும் விசித்திரமாக ஒன்றையொன்று தாக்கம் செலுத்துவதாக இருக்கிற தீமையாக இது இருப்பதை புரிந்து கொள்ளவேண்டிய தேவை இருக்கிறது.**

டில்லியில் அந்த இளம் பெண்ணுக்கு நேர்ந்த கொடுமையைப் பற்றியும் அவள் உயிர் பிழைக்க முடியாமல் போன சோகத்தைப் பற்றி தைரியமாக பேச வார்த்தைகளும் இல்லை. மனவலிமையும் இல்லை.

நடந்து முடிந்த அந்த நிகழ்ச்சி காலம் காலமாக நடந்துள்ள இதே மாதிரியான கொடுமைகளை நினைவுக்குக் கொண்டு வந்தது. நாம் தொடர்ச்சியாக எதிர்த்து போராடிக்கொண்டு இருந்தாலும், தொடர்ந்து வாழும் ஆழமான அநீதியை முன்னிறுத்துவதாக இருந்தது. மற்றவர்களைப் போலவே நானும் கோபப்பட்டேன், வருத்தம் தோய்ந்த கோபமாக அது இருப்பதை உணர்ந்தேன். பாலியல் வன்முறையாளர்களின் செயல்களை நினைத்து கோபம். நமது அரசு நாம் நினைத்த முறையில் செயல்பட மறுத்துவிட்டதை நினைத்து கோபம். அதன் இயலாமையை நினைத்தும் கோபம். இவை மட்டுமல்லாமல் எனக்கு வேறு ஒரு விஷயத்திலும் கோபம் வந்தது. நமது அரசு நெருக்கடியில் உள்ள போதிலும். இந்த அரசை மக்கள் எதிர்க்கும்போது மேலும் மேலும் அவர்களுக்கு எதிராக வன்முறையை ஏவிவிடுகிறது. தான் என்ன செய்தாலும் தன்னைக் கேட்பாரில்லை, தான் எந்தவித சட்ட நியாயங்களுக்கும் கட்டுப்பட வேண்டியதில்லை என்பதிலும் அரசு கவனமாக இருக்கிறது. இந்த குடியரசின் ஜனநாயகத்துக்காக நமது உழைப்பை நாம் செலுத்தி, அரசுக்கு தவிர்க்க முடியாமல் கட்டுப்பட்டவராக இன்னமும் தொடர்ந்து நம்பிக்கையோடு, விசுவாசத்தோடு அரசின் வாழ்நாளைப் புதுப்பிக்கிறோம். ஆனால், அரசோ இறுமாப்புடன் தன் போக்கில் செயல்பட்டு கட்டுப்பாடற்ற சட்ட நியாயங்களின் அடங்காத் தனத்திற்கு உள்ளே அரசு மேலும் பின்வாங்கி செல்கிறது. அதிகாரத்திற்குள் தன்னை நிலைநிறுத்தி வருகிறது.

**சாதி நியாயங்களுக்கு நம்மில் பலரும் துணை போகிறோம். ஒருவரையொருவர் வெறுத்துக்கொள்ளவும், நமது உழைப்பாளி மக்களையும் விளிம்புநிலை மக்களையும் அவமதிக்கிற அளவுக்கும் நம்மை இட்டுச்செல்கிறது.**

உள்ளூர் போலீஸ்காரர் முதல் நகரத்தின் காவல்துறை தலைமையகம் வரையும், நகராட்சி கவுன்சிலர் முதல் மத்திய அமைச்சர்கள் வரையும், அரசின் அனைத்து மட்டங்களில் உள்ளவர்களின் அதிகாரத்துக்கும், கட்டளைத்திறனுக்கும் இந்த நாட்டில் பாதுகாப்பு அளிக்கப்பட்டு உள்ளது. தலித்துகளையும், ஆதிவாசிகளையும் தாக்குவதையும் அவர்களை அழித்துவிடுவதையும் தமது உரிமையாகக் கொண்டு செயல்படும் ஆதிக்க சாதிகளும் அது மட்டும் இல்லாமல் சமத்துவமில்லாத, வர்க்க பாலின ஏற்பாடுகளும் யாருக்கும் எந்தவித சட்டத்திற்கும், அதிகாரத்திற்கும் கட்டுப்பட மறுத்து இதே ஆணவத்துடன் தம்மை நிலைநிறுத்திக்கொண்டுள்ளன.

தண்டனைக்கும், சட்ட நியதிகளுக்கும் உட்பட மறுக்கும் அடங்காத் தன்மை என்பது அதன் எல்லா வடிவங்களிலும் அதிகாரத்தைக் கட்டமைப்பதாக இருக்கிறது. அதிகாரத்தை அனுபவிப்பவர் மகிழ்வோடு செயல்படுகின்றனர். அதனைக் கைக்கொள்வோருக்கு அது கவர்ச்சியானதாக, விரும்பக்கூடியதாக அமைந்துவிடுகிறது.

இந்த நாட்டின் ஏழைகளும் விளிம்பு நிலை மக்களும் இதைப்பற்றி நன்றாகத் தெரிந்து வைத்துள்ளனர். பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர்

(வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் 1989ன்படி விசாரிக்க வேண்டிய குற்றங்களைப் பற்றி 2012ம் வருடத்தின் ஆரம்பத்தில் நடந்த ஒரு பொது விசாரணையில் நானும் பங்கேற்று இருந்தேன். காவல்துறையால் சித்ரவதை செய்யப்பட்ட, இருளர் சமூகத்தைச் சேர்ந்த நடுத்தர வயதுள்ள ஒருவர் அந்த விசாரணையில் கலந்துகொண்டு பேசினார். அடக்கமான ஆனால் கேள்விக்குட்படுத்தும் தொனியில், தனக்கு நேர்ந்த பாதிப்பின் விபரங்களை விவரித்தார். தன்னை விசாரித்த மூத்த ஆய்வாளர் சலனமின்றி, மெத்தனமாக தன்னை விசாரித்த முறை, சர்வசாதாரணமாக தன்னைச் சித்ரவதை செய்தது, தான் அதனை எதிர்க்க முற்பட்டது, கேள்வி கேட்டது ஆகியவற்றை அமைதியாகவும், கவலையுடன் விவரித்தார். இப்படியெல்லாம் நடக்குமா என்று அவர் கேட்காமல் கேட்டார். அந்த காவல்துறை ஆய்வாளர் தான் செய்தது தவறு என்று ஒருநாள் உணரமாட்டாரா என நம்பக் கேட்டு, அவர் தனது வாக்குமூலத்தை முடித்துக்கொண்டார். அவரது இந்த நம்பிக்கைக்குத் தகுதியற்ற அரசின் மீது நம்பிக்கை வைத்த ஒரு குடிமகனின் நியாயமாக அவரது வாக்குமூலம் அமைந்தது. ஆனால், அந்த ஒரு காரணத்துக்காக மட்டும் நான் அந்த சாட்சியத்தை நினைவு கூறவில்லை. அதற்கும் மேலாக பல விஷயங்களை அது வெளிப்படுத்துகிறது. சட்டத்துக்கோ, நியாயத்துக்கோ, தண்டனைக்கோ ஆட்படாத சாதி சமூகத்தின் அன்றாட நிலையை அது பதிவு செய்தது.

**ஒரு பெண்ணின் விருப்பத்துக்கு மாறாகவும், தவிர்க்கமுடியாத கடமை என்ற அடிப்படையிலும் அவரை திருமணத்துக்கும் பாலுறவுக்கும் உட்படுத்துதல் என்பது இன்னமும் சகஜமாக இன்றும் நடக்கிறது.**

இந்த சாதி நியாயங்களுக்கு நம்மில் பலரும் துணை போகிறோம். ஒருவரையொருவர் வெறுத்துக்கொள்ளவும், நமது உழைப்பாளி மக்களையும் விளிம்புநிலை மக்களையும் அவமதிக்கிற அளவுக்கும் இது நம்மை இட்டுச்செல்கிறது. அநீதியான அதிகாரம் என்பது அரசிடம் மட்டுமில்லை, சிவில் சமுதாயத்திடமும் இத்தகைய அதிகாரம் படிந்துள்ளது என்பதுதான் உண்மை. எனவே, நாமும் இதற்கெல்லாம் உடந்தையாக இருக்கிறாம் என்ற உணர்வோடு டில்லியில் நடந்த பாலியல் பலாத்காரத்தைக் கேள்வி கேட்க வேண்டிய தேவை இருக்கிறது. சில கேள்விகளை நான் கேட்கப் போகிறேன். இந்த கேள்விகளோ அல்லது எனது விளக்கங்களோ கோர்வையான வாதமாக அமையும் என்று நான் உறுதியாக சொல்ல முடியாது. ஆனால், நமது சில விவாதங்களை புதிய திசைகளில் திருப்பிவிடும் என நான் நம்புகிறேன்.

### சட்ட நியாயங்களுக்கு உட்பட மறுக்கும் அடங்காத தன்மையின் அன்றாட நடைமுறை

கொடுமையான, அதே நேரத்தில் அன்றாடம் நடக்கக்கூடிய சில செயல்களின் தன்மைகளில் இருந்து எனது வாதங்களை நான் தொடங்க விரும்புகிறேன். பெண்களை வார்த்தைகளால் அசிங்கப்படுத்துவது, ஆபாச உடல் சைகைகள், பாலியல் மிரட்டல்கள் ஆகியவற்றை ஒவ்வொரு நாளும் பொதுவில் புழங்குகையில் நாம் அனுபவிக்கிறோம். அவமதிக்கக்கூடிய பேச்சுகளையும், விருப்பமற்ற உடலுறவையும், பாலியல் சித்ரவதையையும் நமது வீடுகளில் அனுபவிக்கிறோம். இந்த இரண்டு உதாரணங்களிலும், பதட்டமான, கோபமான, பொறுமையில்லாததாக, வெறுப்பானதாக மௌனம் குடிகொண்டு அந்தச் செயல்களின் தன்மையை மூடி மறைத்துவிடுகிறது. இது பாலியல் ரீதியான வன்முறை, எனவே அசிங்கமானது என்று பெண்கள் நினைப்பது ஒரு காரணம். அது மட்டும் அல்லாமல் வன்முறையாளர் தனது செயல்களை ரகசியமாக செய்வதும் அந்த ரகசியத்தன்மையை தன்னால் பாதிக்கப்படுவோர்கள் மேல் சுமத்துவதும் இந்த மௌனத்திற்கான மற்றொரு காரணம் ஆகிறது. குடும்பத்தில் நடக்கும் பாலியல் வன்முறையைப் பொறுத்தவரையில் “புகார் செய்யக்கூடாது, யாருக்கும் சொல்லக்கூடாது, சொன்னால் உன் நிலைமைதான் மோசமாக போகும்” என்று அப்பாக்கள், அண்ணன்–தம்பிகள், மாமாக்கள் மற்றும் சித்தப்பா, பெரியப்பாக்கள் உள்ளிட்ட அனைத்து பெரியவர்களும் தங்களுக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி தாங்கள் செய்யும் பாலியல் வன்முறையை மூடிமறைப்பதும், கேள்வி கேட்டால் பாதிக்கப்பட்டவருக்குத்தான் பிரச்சனை அதிகமாகும் என்று அவர்களை குற்ற உணர்வுடன் இருக்கச் செய்கின்றனர். அதனால் பாதிக்கப்பட்டவர், தான் தண்டிக்க தகுந்தவரே என உணர வைக்கப்படுகிறார்.

பொது இடத்தில் இந்த வன்முறை நடக்கும்போது அது ஒரு பஸ் அல்லது மார்க்கெட் அல்லது காவல்நிலையமாக இருக்கலாம் – அங்கே ரகசியத்தன்மை என்பது வித்தியாசமான முறையில் இருக்கிறது. வன்முறையாளர், தான் செய்வது முறைகேடானது, தவறானது, இழிவானது என்பதை தெரிந்தே அதில் ஈடுபடுகிறார். அதே நேரத்தில் தான் இவ்வாறு செய்வதில் பிரச்சனை ஏதும் இல்லை என்ற இறுமாப்பில் தன் நிலையில் தனக்கு வாய்த்துள்ள அதிகாரத்தை அது குறைந்தபட்சமாக இருந்த போதிலும் அதில் வெறி கலந்த உற்சாகத்தோடு ஈடுபடுகிறார். செய்யக்கூடாதவற்றை செய்யக்கூடியதில் உள்ள இந்த

வெறி கலந்த உற்சாகம்தான் சட்ட நியாயங்களுக்கு கட்டுப்படாத மனநிலைக்கு ஆதாரமாக இருக்கிறது. தலித் பெண்களின் உடல்களை பொருட்டாகவே மதிக்காத (ஆதிக்க சாதி ஆண்கள் தலித் பெண்கள் மீது ஏவப்படும் வழக்கமான வார்த்தைரீதியான அவமதிப்பு என்பது அவர்களின் கருப்பைகளையும் அவர்களின் பிறப்புறுப்புகளையும் நோக்கி இருக்கிறது) ஆதிக்க சாதி ஆண்கள் தலித் பெண்களை பலாத்காரப்படுத்துவது தங்களது உரிமை என்றுக் கொள்வதும் இத்தகைய மனநிலையின் வெளிப்பாடுதான்.

**பாலியல் வன்முறை என்பது அசாதாரனமானது என்றாலும் கூட அன்றாடம் நிகழும் பல செயல்களுடன் தொடர்புடையதாக இருந்தது. தெருமுனையில் நின்றுகொண்டு பெண்களின் உடல்களுக்கு மார்க் போடுவது, பலவாறாக வர்ணிப்பது, ஒரு மனுஷியை பார்வையால் அளப்பது, அவளை பயமுறுத்தும் நோக்கத்தோடு பின் தொடர்வது, அவளை சந்தேகத்தின் பேரில் கண்காணிப்பது – இவை அனைத்துமே ஏதோ ஒரு வகையில் பாலியல் வன்முறையோடு தொடர்புடையனவே.**

2002ல் குஜராத்தில் இஸ்லாமிய பெண்களின் உடல்களின் மீது ஏவப்பட்ட வெறுப்புணர்வும் இத்தகையதே. துண்டுப் பிரசுரங்கள், கோஷங்கள் மற்றும் இதர வடிவங்களில் பரப்பப்பட்ட வெறுப்புணர்வோடு பயங்கரமான வன்முறையும் சேர்ந்துகொண்டது. எதை அசிங்கமானதாக, குற்றமாகக் கருதுகிறதோ அதையே தேடிச் செல்லும் இந்த மனநிலை, தலித்துகளையும் பிற ஒதுக்கப்பட்டவர்களையும் தண்டிப்பதை ஒரு கேளிக்கையாகக் கொண்டு செயல்படுகிறது. அரசைப் பொறுத்தவரை, செய்யக்கூடாதவற்றை, முறையற்றவற்றை செய்வது என்பது ஏறத்தாழ கட்டாயமான விதியாக மாறி உள்ளது. அதன் பணியாட்கள் அத்தகைய செயல்களை விரும்பி, ரசித்து செய்கின்றனர். சிலி நாட்டு எழுத்தாளர் ஏரியல் டார்ப்மான் எழுதிய "**மரணமும் கன்னிப்பெண்ணும்**" நாடகத்தில் டாக்டர். மிராண்டா என்பவர் வருவார். அவர் அரசியல் எதிர்ப்பாளர்கள் மீது ஏவப்பட்ட காவல்துறை வன்முறையை மருத்துவராக இருந்து கண்காணித்து வருவார். அதன்பிறகு அவர் தன்னால் பாதிக்கப்பட்டவர்களை பற்றி ஒப்புதல் வாக்குமூலத்தை வழங்குகையில் இவ்வாறு கூறுவார்.

"நாங்கள் போரில் ஈடுபட்டுள்ளோம் என நான் நினைத்தேன். அவர்கள் ஒரு முழுமையான சர்வாதிகாரத்தை நிறுவ நினைத்தார்கள். ஆனாலும் அவர்களுக்கு ஏதோ ஒரு வடிவத்திலான ஒரு மருத்துவ சிகிச்சையை பெறுவதற்கு உரிமை இருக்கிறது என்று நான் ஆரம்பத்தில் நினைத்தேன். ஆனால், போகப் போக அந்த அறவுணர்வு மறையத் தொடங்கியது. அதுவரையில் அது மறைத்திருந்த ஒருவித வெறி கலந்த உற்சாகம்........ நான் செய்தவற்றின் தன்மையை என்னிடமிருந்தே மறைத்த உற்சாகம் மேலோங்கியது.... நீங்கள் செய்யவே கூடாது என்று சமுதாயம் தடுத்த, எதையெல்லாம் செய்யவே கூடாது என்று அம்மா சொன்னாரோ அவை ஒவ்வொன்றையும் செய்யத் துணிந்தேன். அவளைப்பற்றி, பிற பெண்களோடு இருப்பதைப் பற்றி கனவு காணத் தொடங்கினேன்.

இந்த ஒப்புதல் வாக்குமூலம் என்பது அவரிடமிருந்து பலவந்தமாக பெறப்படுகிறது. அவரால் சித்ரவதை செய்யப்பட்ட பெண் அந்த சித்தரவதையின் தன்மையை உணர்ந்ததால் இந்த வாக்குமூலம் இவ்வாறு அமைந்ததா அல்லது சித்தரவதை செய்தவர் பலவந்தப்பட்டு வாக்குமூலம் அளித்ததால் அவர் இவ்வாறு சொன்னாரா என்பதை நாடகம் தெளிவுபடுத்தவில்லை. பார்வையாளரின் புரிதலுக்கே அதை நாடக ஆசிரியர் விட்டுவிடுகிறார். எது எப்படி இருந்த போதிலும் சித்தரவதை செய்பவர் 'அறம்' என்று நினைப்பவற்றில்தான் அவர் சித்தரவதைக்கான 'நியாயம்' இருப்பது என்பதால் அந்த அறத்தையே நாம் கேள்வி கேட்பவராகிறோம். நந்திதா ஹக்சரின் **"கீலானியை குற்றஞ்சாட்டல், அப்சலுக்கு தூக்கு"** எனும் புத்தகம் 'அறங்களைப்' பற்றி நமக்கு எச்சரிக்கை செய்கிறது. தனது செயல்களுக்கு எந்தவித சட்ட நியாயத்திற்கும் கட்டுப்பட வேண்டியதில்லை என்று கோருகிற அரசு, தொடர்ச்சியான படுமோசமான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. குறிப்பாக அரசின் முக்கிய ஊழியர்களும், அரசுக்கு நெருக்கமான 'குடிமக்களும்' இத்தகைய செயல்களில் ஈடுபடுவதை ஹக்சர் குறிப்பிடுகிறார்.

பாலியல் பலாத்காரத்தைப் பொறுத்தவரை, பாலியல் பலாத்காரம் செய்பவர் ஒரு குடிமகனாகவோ, அரசின் காவலராகவோ இருக்கலாம். அவர் மேற்கொள்ளும் இந்த வன்முறைச் செயலானது 'பாலியல் தன்மை' பெற்றுள்ளதால் அதில் ஈடுபடுபவர் வெறியோடு மட்டுமின்றி ஒருவித 'களிப்போடும்' அதில் ஈடுபடுகிறார். பாலியல் வன்முறைக்கே உரிய பண்பு இது. இதன் தீமையை உள்ளது உள்ளபடியாக புரிந்து கொள்ள வேண்டி உள்ளது.

**பாலியல் வன்முறை**

பாலியல் பலாத்காரம் எப்போதெல்லாம் விசாரணை செய்யப்படுகிறதோ அப்போது அதை பாலுணர்வோடு சம்பந்தப்படுத்தி சிலர் பேசுகிறார்கள். வேறுசிலரோ, பாலுணர்வுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. ஆனால், அதிகாரத்தோடு சம்மந்தம் இருப்பதாக சிலர் பேசுகிறார்கள். பிரச்சனை என்னவென்றால் இவை இரண்டையும் அவ்வளவு எளிதாக நம்மால் பிரித்து பார்க்க முடியாது. ஒரு சமுதாயம் பாலுறவு பற்றி கொண்டுள்ள சராசரி மதிப்பீடுகளே பாலியல் வன்முறையின் தன்மையை தீர்மானிக்கின்றன. எனவே, பிரச்சனையை அணுகும்போது ஒரு சமூகத்தின் இந்த சராசரி மதிப்பீடுகளையும் நாம் கேள்விக்குட்படுத்த வேண்டும். பாலியல் வன்முறை என்பது அசாதாரனமானது என்றாலும் கூட அன்றாடம் நிகழும் பல செயல்களுடன் தொடர்புடையதாக இருந்தது. தெருமுனையில் நின்றுகொண்டு பெண்களின் உடல்களுக்கு மார்க் போடுவது, பலவாறாக வர்ணிப்பது, ஒரு மனுஷியை பார்வையால் அளப்பது, அவளை பயமுறுத்தும் நோக்கத்தோடு பின் தொடர்வது, அவளை சந்தேகத்தின் பேரில் கண்காணிப்பது – இவை அனைத்துமே ஏதோ ஒரு வகையில் பாலியல் வன்முறையோடு தொடர்புடையனவே.

பெண்கள் மட்டுமல்ல, திருநங்கையர்கள் போன்றவர்களையும் இந்தச் சமுதாயம் இப்படித்தான் பார்க்கின்றது. ஆம்பிளைச் சட்டி, பொம்பளைச் சட்டி என்ற அவதூறுகளை அவர்கள் மீது பொழிந்து வன்முறைக்கு உட்படுத்துகின்றது. வீட்டிற்கு வெளியில் இப்படி என்றால், வீட்டிலோ வேறு விதமான பிரச்சனைகள். நமது நாளிதழ்களின் ''மணமக்கள் தேவை'' பகுதிகளை சாதாரணமாக படித்துப் பாருங்கள் அல்லது பொருத்தமான இருவரை இணைத்து வைப்பதில் சிறப்பு திறமை பெற்றுள்ள பல்வேறு இணையத்தளங்களை பார்வையிடுங்கள். பாலியல் மற்றும் திருமண ஜோடிகளை எந்த இலக்கணப்படி ஆய்வு செய்கிறார்கள், அடையாளப்படுத்துகிறார்கள் என்பது நமக்கு நன்றாக விளங்கும்.

மேற்குறிப்பிட்டுள்ள இத்தகைய செயல்கள் ஆண்களின் நடத்தையை வரையறுக்கின்றன. 'ஆண்மைக்கான' தரநிலைகளை உருவாக்குகின்றன. ஆண்களிக்கிடையிலான தோழமையையும் உருவாக்குகிறது. அவர்கள் கூட்டாக இந்த விஷயங்களில் செயல்படுவதும் இதன் காரணத்தால்தான். பெண்கள் இத்தகைய செயல்பாடுகளை வெறுத்தாலும் அவ்வாறு செய்பவர்கள் ''நம்ம ஆட்கள்'' இல்லை நமக்கு பொருத்தமில்லாத ''வேறு ஆட்கள்'' என்று எண்ணி அவற்றைப் பற்றி அதிகம் சிந்திப்பதில்லை. திருநங்கையர்களைப் பொருத்தவரையிலோ அவர்கள் சூழ்நிலைக்கேற்ப யாராகத் தாம் இருக்க விரும்புகிறார்களோ அதைப் பொருத்து இத்தகைய பிரச்சனைகளை முடிந்தவரை சமாளித்து வருகின்றனர். நமக்குள்ள கேள்வி இதுதான். இத்தகைய செயல்களில் ஈடுபடும் இளைஞர்கள் பாசம், காதல், நெருக்கம் என்பவற்றை எவ்வாறு உணர்கிறார்கள் என்பதுதான் அது.

ஒரு பெண்ணுக்கு மார்க் போடுவது எந்தத் தருணத்தில் அவளுக்கு எதிரான வன்முறையாக மாறுகிறது. அத்தகைய மாற்றத்திற்கு தூண்டுகோலாக இருப்பது எது. பெண்களை அளக்கும் ஆண்களின் பார்வையிலேயே பிரச்சனை உள்ளதா, அந்தப் பார்வை வன்மாக ஆகும்போது பிரச்சனையாகிறதா ? சாதி, மத பொருத்தங்களைப் பார்த்து அமையும் திருமணங்கள் எப்பொழுது, எங்கு தடம் மாறி பெண்களுக்கு பாலியல் சித்தரவதை அனுபவமாக மாறிப்போகிறது ? நாம் சரியானது, முறையானது என்று ஏற்றுக்கொள்பவற்றின் நீட்சி தான் அசாதாரணமான வன்மமான செயல்பாடு என்று நாம் சொன்னால் அதில் நியாயம் இருக்குமா ? இது உண்மையானால் நாம் விரும்பி ஏற்றுக்கொள்வதும் நாம் முறையற்றது செய்யக்கூடாதது என்று நினைப்பதும் வேறு வேறுதானாக இல்லாமல் ஒன்றோடு ஒன்று தொடர்புடையனவாக ஆகின்றன. இதை விளக்க உதவும் உதாரணத்தை இந்த நேரம் நாம் யோசிக்கலாம்.

**வன்முறையாளர், தான் செய்வது முறைகேடானது, தவறானது, இழிவானது என்பதை தெரிந்தே அதில் ஈடுபடுகிறார். அதே நேரத்தில் தான் இவ்வாறு செய்வதில் பிரச்சனை ஏதும் இல்லை என்ற இறுமாப்பில் தன் நிலையில் தனக்கு வாய்த்துள்ள அதிகாரத்தை அது குறைந்தபட்சமாக இருந்த போதிலும் அதில் வெறி கலந்த உற்சாகத்தோடு ஈடுபடுகிறார்.**

அன்றாட நடைமுறையில் பாலியல் வன்மத்தைக் குறிக்கக்கூடிய ஒரு உடல் சைகை இருக்கிறதென்றால் அது உடல் உறுப்புகளைத் தொடுதல் ஆகும். ஒரே நேரத்தில் ரகசியமானதாக, வேண்டுமென்றே செய்யப்பட்டதாக, துன்புறுத்துவதாக அது இருக்கிறது – சினிமாவில் ஐட்டம் நம்பர் அல்லது குத்துப்பாட்டு என இந்த வகையைச் சேர்ந்ததுதான் அது. குத்துப்பாட்டை திரைப்படமாக்கும்போது பெண்களின் குறிப்பான உடல் உறுப்புகளான தொப்புள், மார்பகங்கள், பின்பக்கங்களை தாண்டி காமிரா எப்போதும் விலகி தூரமாக போவதே இல்லை. அதை மிகவும் வெளிப்படையாக செய்யும்போது

சுற்றிலும் வெறித்த பார்வையோடு ஆண்கள் இருப்பதையும் அது பதிவு செய்யும். அந்த ஆண்கள் ஏதேனும் ஒரு பெண்ணின் உடல் உறுப்புகளை தொடுவதை எப்போதும் விடாமல் செய்து கொண்டு இருப்பார்கள். ஒரு பஸ்சிலோ அல்லது ஒரு கூட்டத்திலோ ஒரு பெண் தன் உடல் உறுப்புகளை மற்றவர்கள் தொடுவதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதுதான் யதார்த்தமாக இருக்கிறபோது, குத்துப்பாட்டை பொறுத்தவரை அதில் ''கட்டிப்பிடி கட்டிப்பிடிடா'' பாணியிலான ஆட்டத்தின் மையமாக ஆடுகிற பெண் தன்மீது பிற ஆண்கள் காட்டப்படுகிற கவனத்தில் பெரிய சந்தோஷம் அடைந்தவளாகக் காட்டப்படுகிறாள்.

இந்த குத்துப்பாட்டு என்பது ஆண்களின் அன்றாட நடவடிக்கையை 'தவறு' என்ற நிலையில் இருந்து அகற்றி கனவு என்ற நிலைக்கு அது கொண்டுபோகிறது. செய்யக்கூடாததை செய்வதும், அவ்வாறு செய்வதில் ரசனை கொள்வதும் குத்துப்பாட்டு போன்ற செயல்களில் இணைகின்றது. தமிழ்ப் பின்னணியில் இந்த ஐட்டம் நம்பர் அல்லது குத்துப்பாட்டில் சாதி மற்றும் இனத்தின் அடையாளங்கள் பொறுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். பெரும்பாலும் ஆட்டம்போடும் பெண் கவர்ச்சிகரமாக சிவப்பானவளாக இருப்பாள். அவளைச் சுற்றி ஆடுவோர் கருப்பானவர்களாக, விளிம்பு நிலை மக்களாக அவள்மீது விருப்பமும் அதே நேரத்தில் அவளை அவமதிக்கும் வகையில் கையாளுபவர்களாகவும் இருப்பார்கள். அவளது சிவப்பு நிறம் அவளை 'வெளியாளாக', இத்தகைய கருப்பு ஆண்கள் சுலபமாக'அடையமுடியாத' ஆதிக்க சாதி அல்லது வடஇந்தியப் பெண்ணாக, இருப்பதையே குறிக்கிறது. இத்தகைய செயல்பாடு திரைப்படத்தில் பொது வெளியில் நிகழ்த்தப்படும்போது குத்தாட்டம் ஆடுபவரைப் போல் இல்லாமல் பாதிக்கப்படும் பெண் மிரண்டு போய்விடுகிறாள், அல்லது எதிர்ப்புத் தெரிவிக்கிறாள். குத்தாட்டத்தில் வரும் பெண் ரசிக்கப்படுபவராக இருப்பது என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமல்ல. பெண் உடலை துண்டு துண்டாக்கி, அதை பகுதி பகுதியாக நுகரும் வன்மம் தான் அது.

குடும்பத்தின் பின்னணியில் பெண் உடல் வேறு வகையான சிதறலுக்கு ஆளாகிறது. தவறாக நடப்பது என்பது ஒருவகை சிதறல். பாலியல் வன்முறை அல்லது விருப்பமில்லாத செக்ஸ் (பாலுறவு) இரண்டாம் வகை சிதறல். ஒரு பெண்ணின் விருப்பத்துக்கு மாறாகவும், தவிர்க்கமுடியாத கடமை என்ற அடிப்படையிலும் அவரை திருமணத்துக்கும் பாலுறவுக்கும் உட்படுத்துதல் என்பது இன்னமும் சகஜமாக இன்றும் நடக்கிறது. பெண்கள் தங்களால் முடிந்தவரையில் இத்தகைய சூழல்களை சமாளித்து வந்தபோதிலும் ஒரு கட்டத்திற்கு மேல் அவர்களால் தாம்பத்ய வாழ்வில் இன்பம் காண முடிவதில்லை. தாம்பத்யம் என்பதே சுமையாக மாறிவிடுகின்றது. இத்தகைய 'சகஜமான' தாம்பத்யத்தை ஏற்காமல் சாதி கடந்த தாம்பத்யத்தை நோக்கிச் செல்பவர்களின் பாதையோ வேறு விதமானது.

காதலும், ஆசையும் காதலிக்கப்படுகிறவனை நோக்கி பெண்ணை இழுக்கின்றன. சாதியும், குடும்ப அதிகாரமும், 'ஓடிப் போவதால்' மானம் போகும் என்ற பதைபதைப்பும் இந்தச் சூழ்நிலையில் 'ஓடிப் போகுதல்' என்பது மட்டுமே அவளுக்கு பிரச்சனையைத் தீர்ப்பதாக உள்ளது. எது தவறு என்று சமூகத்தால் சுட்டப்படுகிறதோ, எதைச் செய்தாலும் அவள் 'கெட்டுப் போய்விடுவாள்' என்று சமுதாயம் சொல்கிறதோ அதுவே அவளுக்கு 'விடியலாக' அமைந்துவிடுகிறது. சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படாத உறவுகளில் சம பாலுறவு (Homosexuality) என்பது பேசப்படாததாக, பேச முடியாததாக இருப்பதோடு, ரகசியமாக மேற்கொள்ளப்படும் உறவாகவும் உள்ளது. இப்படியாக 'ஓடிப் போகுதல்', 'ரகசியமாக' உறவு வைத்துக்கொள்ளுதல் என்பனவே வித்தியாசமாக வாழ நினைப்பவர்களுக்கு விட்டுவைக்கப்பட்டுள்ளன.

## பாலியல் பலாத்காரம்: சட்ட நியாயங்களுக்கு அடங்காமையின் இறுதியான அடையாளம்:

சமுதாயம் ஏற்காதவற்றை, தவறு என்று சொல்பவற்றை, தடை செய்யப்பட்ட செயல்களை விருப்பத்தோடு, சந்தோஷமாக தொடர்ந்து செய்து கொண்டு இருப்பது என்பதே அதிகாரத்தை நிலை நிறுத்துகிறது. இவ்வகையில் பாலியல் வன்முறை என்பது 'கட்டுப்பாடற்ற', 'தட்டிக்கேட்க முடியாத' செயலாக தன்னை அடையாளப்படுத்திக் கொள்கிறது. இதனால்தான், அது திரும்பத் திரும்ப செய்யப்படுவதாக இருக்கிறது. இந்தக் குற்றங்களை தண்டிக்க வேண்டிய நிலையில் உள்ள காவல்துறையோ ராணுவமும்கூட இதை திரும்பத் திரும்பச் செய்கின்றன. இதைச் செய்வதில் தவறில்லை, இப்படிச் செய்தால் யாரும் நம்மைத் தட்டிக்கேட்க மாட்டார்கள் என்ற மனநிலையின் கட்டுப்பாடற்ற தன்மையைத்தான் இது குறிக்கிறது. சட்ட நியாயங்களுக்குக் கட்டுப்படாத, அதிகார மனநிலையின் மிகத் தீவிரமான வெளிப்பாடு இதுதான். எதற்குமே கட்டுப்படாத இத்தகைய அதிகாரத்தை எதிர்ப்பது என்பது அடிப்படையில் அந்த அதிகாரத்திற்கு ஆதாரமாக உள்ள சராசரி பாலியல் நியதிகளை எதிர்ப்பதில் இருந்துதான் தொடங்க வேண்டும். அரசின் எதேச்சதிகாரத்தை கேள்வி கேட்கும் அதே வேளையில் இதையும் நாம் செய்தாக வேண்டும். உண்மையில் நாம் ஒன்றை திறன்மிக்க முறையில் செய்யாமல் மற்றொன்றையும் செய்ய முடியாது.

**V. Geetha (geethv@gmail.com) is a writer and publisher, and her interests include feminism, caste and education.**

***Source: Economic Political & Weekly***
***Vol - XLVIII No. 02, January 12, 2013***

# கசாபுக்கு தூக்கு

## ஒரு புதிய தொடக்கமா அல்லது இந்தியாவில் மரண தண்டனையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒரு புதிய தொடக்கமா ?

**– ஃப்ராங்க்ளின் இ ஜிம்ரிங், டேவிட் டி ஜான்சன்**

2012 நவம்பர் 21 அன்று முகமது அஜ்மல் கசாப் தூக்கிலிடப்பட்டது, 2008 நவம்பரில் மும்பை நகரம் முற்றுகையிடப்பட்ட கதையின் ஒரு முக்கிய மைல்கல். அதே நேரத்தில் அது இந்தியாவில் மரண தண்டனையில் நவீன வரலாற்றில் ஒரு முக்கிய கட்டமுமாகும். 10 பேர் கொண்ட பாகிஸ்தானிய பயங்கரவாதக் குழு மும்பைக்குள் ஊடுருவி 166 பேரை கொன்று குவித்ததும், கடுமையான காயங்களை ஏற்படுத்தியதும், பெரும் சேதங்களை ஏற்படுத்தியதும் இந்தியாவின் காவல்துறைக்கும் பாதுகாப்புக்கும் ஆழமான சங்கடத்தை ஏற்படுத்தியது.

2 நாட்களாக கோடிக்கணக்கானோர் தொலைக்காட்சியிலும் இணையத் தளங்களிலும் நேரடியாகப் பார்த்துக் கொண்டிருக்க காவலர்களும் பாதுகாப்புப் படையினரும் பகைவர்களை நெருங்க முடியாதவர்களாக இருந்தார்கள். அந்த 10 பேரில் கசாப் மட்டுமே உயிருடன் இருக்க அவர் கைது செய்யப்பட்டு, அந்த பெரும் சதித் திட்டத்தில் அவரது பங்கு குறித்த விசாரணை மேற்கொள்ளப்பட்டது. கீழ்நிலைப் படையாளான கசாப் அந்த பயங்கரவாதத் தாக்குதலுக்கு தலைமை தாங்கியவரோ, அல்லது இந்திய அரசுக்கு ஒரு வல்லமை வாய்ந்த எதிரியோ அல்ல. ஆனால், பாதிக்கப்பட்டோர்களின் துயரத்திற்கும் பழி உணர்வுக்கும், அச்சத்தில் மூழ்கிய குடிமக்களுக்கும், ஆத்திரவசப்பட்டிருந்த அரசுக்கும் கிடைத்த ஒரே குறி, இலக்கு அவர்தான்.

கசாப் மீதான விசாரணை உடனடியாகத் தொடங்கப்பட்டது. முறையீடுகள் வேகமாக தாக்கல் செய்யப்பட்டன. தண்டனையும் விரைவாக நிறைவேற்றப்பட்டது. இவை எல்லாமே, அவரது மோசமான குற்றங்கள் நடந்த நான்கே ஆண்டுகளுக்குள் முடிந்து விட்டன. இந்தியாவின் மரணதண்டனை சார்ந்து வளர்ந்துள்ள சிக்கல் மிகுந்த சட்டமுறையில் இந்த வேகம் முன்னெப்போதும் காணாததாகும். கடந்த 15 ஆண்டுகளில் இந்தியாவில் நீதிமன்றத் தீர்ப்பின்படி கொல்லப்பட்ட இரண்டாவது நபர் கசாப் (முதல் நபர் கொல்கத்தாவில், அவர் குற்றவாளி என நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டு 13 ஆண்டுகள் கழித்து 2004ல் தூக்கிலிடப்பட்டார்).

இதற்கு நேர் மாறான காட்சியாக சீன மக்கள் குடியரசில் ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கானோர் தூக்கிலிடப்படுகிறார்கள். பெரும்பாலான ஆண்டுகளில் இந்தியாவில் ஏன் தூக்கு தண்டனைகள் நிறைவேற்றப்படவில்லை என்றால், யாருக்கும் அந்தத் தண்டனைக்கான தீர்ப்பளிக்கப்படவில்லை என்பதல்ல அதற்குக் காரணம். சொல்லப் போனால் 400க்கும் மேற்பட்டவர்களுக்கு தூக்குத்தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டு அவர்கள் இன்னும் காத்திருக்கிறார்கள். தூக்கு தண்டனை நிறைவேற்றப்படுவதை காலவரையின்றி தள்ளிப்போடுவதற்கு தாமதத்தையும் முடிவு எடுக்க முடியாததையும் பயன்படுத்துகிற ஒரு நிர்வாக ரீதியான கருணை அமைப்புதான் காரணம். ஆனால் அந்தக் கருணை அமைப்பு அஜ்மல் கசாப் விஷயத்தில் செயல்படவில்லை.

இவ்வளவு வேகமாக கசாப் தூக்கிலிடப்பட்டது இந்தியாவில் மரணதண்டனை தொடர்பான 3 கேள்விகளை எழுப்புகிறது. முதல் கேள்வி, இத்தகைய வேகமான, கடுமையான எதிர்வினையை ஏற்படுத்துகிற அளவுக்கு இந்தக் குற்றத்திலும், இந்த குற்றவாளியிடத்திலும் அப்படியென்ன சிறப்புத்தன்மை இருந்தது ? இரண்டாவதாக, மரணதண்டனையை ஒழிப்பது என்பதை நோக்கி இந்தியா சீரான முறையில் முன்னேறிக் கொண்டிருக்கிறபோது கசாபிற்கு அளிக்கப்பட்ட தண்டனை, அந்த முயற்சிகளை சீர்குலைத்து விடுமா ? மூன்றாவதாக, தூக்குத் தண்டனைகளை முறைப்படி நிறுத்திவைப்பதை நோக்கி இந்தியா செல்வதற்கு, கசாபின் தூக்குக்குப் பிந்தைய சூழல் ஒரு நல்ல சந்தர்ப்பமாக அமையுமா ?

மும்பை வழக்கு இவ்வளவு வேகமாக தூக்குமேடையை நோக்கித் தாவியதைப் பற்றி என்ன சொல்வது ? இதற்கு இரண்டு பதில்கள் உள்ளன. ஒன்று, அந்த வழக்கிற்குக் காரணமான பயங்கரவாத நோக்கம், இரண்டு, கொல்லப்பட்டோரின் பெரும் எண்ணிக்கை. ஆனாலும் இந்த பதில்கள், நமது சட்ட அமைப்பின் வழக்கமான நடைமுறைகளில் இருந்து விலகாத மற்ற பல கொலை வழக்குகளில் இருந்து மும்பை வழக்கைப் பிரித்துக் காட்டவில்லை. 2008ல் நடந்த அந்தத் தாக்குதல் சுத்தமான பயங்கரவாதம்தான் என்பது உறுதி. ஆனால், 1984ல் இந்திராகாந்தி கொல்லப்பட்டதைத் தொடர்ந்து

சீக்கியர்கள் படுகொலை செய்யப்பட்டதும், 2002ல் குஜராத்தில் ஏராளமான முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டதும், 2001ல் இந்திய நாடாளுமன்றம் தாக்கப்பட்டதும் இதேபோன்றவைதான். இதேபோல் வேறு பல வழக்குகளும் உள்ளன. மேலும், 2008ல் 166 பேர் கொல்லப்பட்டார்கள் என்பது ஒரு பெரிய எண்ணிக்கைதான். ஆனால், 1984ல் கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கானோரை விட இது ஒரு சிறிய எண்ணிக்கையே. குஜராத்தில் கொல்லப்பட்ட ஆயிரம் பேர் அல்லது அதற்கும் மேற்பட்டோரைவிட இது குறைவான எண்ணிக்கைதான். அது மட்டுமல்ல, மும்பையிலேயே இதற்கு முன்னர் நடந்த பயங்கரவாதத் தாக்குதல்களில் உயிரிழந்தோரின் எண்ணிக்கையை விட இது குறைவுதான். 1993ல் மும்பையில் நடந்த தாக்குதலில் 251 பேர் கொல்லப்பட்டனர், 2006ல் நிகழ்த்தப்பட்ட குண்டு வெடிப்புகளில் 209 பேர் உயிரிழந்தனர். அந்த வழக்கில் 2 தூக்குத்தண்டனைகள் தீர்ப்பளிக்கப்பட்டன. ஆனால் இவ்வளவு வேகமாக நிறைவேற்றப்படவில்லை.

முந்தைய தாக்குதல்களில் இருந்து 2008ஆம் ஆண்டின் தாக்குதல்களை வேறுபடுத்திக் காட்டுகிற அம்சங்களின் பெரும்பகுதி எதுவென்றால், அந்த வன்முறை உள்நாட்டில் ஏற்பட்ட ஒரு அதிருப்தி வெளிப்பாடாகப் பார்க்கப்படவில்லை. மாறாக, பாகிஸ்தானின் திடீர் தாக்குதலாகப் பார்க்கப்பட்டது. இந்திய உச்சநீதிமன்றத்தின் 2 நீதிபதிகள் கசாப் குற்றத்தின் இரண்டு முக்கிய அம்சங்களைச் சுட்டிக்காட்டியபோது இவ்வாறு குறிப்பிட்டார்கள்: “ ..கசாபின் குற்றம் எவ்வளவு ஆழமானது என்பதும் இந்தியாவிற்கு எதிராக யுத்தம் தொடுப்பதில் அவர் பங்கேற்றார் என்பதும்..” கசாப் தூக்கிலிடப்படவேண்டும் என்று கோரிய, அவர் தூக்கிலிடப்பட்டதைக் கொண்டாடிய இந்தியக் குடிமக்களைப் பொறுத்தவரையில் கசாப் அவர்களுக்கு லஸ்கர் – இ– தொய்பா பயங்கரவாத அமைப்பின் ஒரு பிரதிநிதியாக, ஒருவேளை பாகிஸ்தானின் பிரதிநிதியாகவே கூட தென்பட்டார்.

இந்த அம்சங்கள் மும்பை வழக்கைத் தனித்துவமான ஒன்றாகக் காட்டுகின்றன. இவைகள் இந்தியாவில் மரணதண்டனையின் எதிர்காலத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும்? கிட்டத்தட்ட 10 ஆண்டு காலத்தில் முதல்முறையாக நிறைவேற்றப்பட்டுள்ள இந்தத் தூக்குதண்டனை, நாடு முழுவதும் அடுத்தடுத்த தூக்குதண்டனை நிறைவேற்றப்படுவதற்கான தொடக்கமாக இருக்குமா, அல்லது சிறைச்சாலைகளில் தூக்குப்போடும் வேலையைச் செய்வோருக்கு நிரந்தரமாக ஓய்வு கொடுப்பதை நோக்கி நாடு நகர்ந்து கொண்டிருக்கிறபோது, இது ஒரு விதிவிலக்காக இருக்குமா?

கசாப் தூக்கிலிடப்பட்டதைத் தொடர்ந்து அதை வலியுறுத்தியவர்கள் மேலும் பல தூக்குத்தண்டனைகளை நிறைவேற்றக் கோருவார்கள் என்ற ஒரு வாதம் வைக்கப்படுகிறது. ஆனால், அதற்கான வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை. இந்திய தேசத்திற்கு எதிராக யுத்தம் தொடுத்ததாக இந்தக் குற்றவாளியின் மீது நீதிமன்றம் கூறியுள்ள குற்றச்சாட்டு, மற்ற மரணதண்டனைக்கான வழக்குகளிலிருந்து இதனை வித்தியாசப்படுத்துகிறதேயன்றி, ஒரு பொதுவான கொள்கை மாற்றத்தை வலியுறுத்தவில்லை. கசாப் வழக்கைப் பொறுத்தவரையில் பொதுமக்களின் அச்சமும் ஆத்திரமும் பிரதானமாக, பாகிஸ்தானின் யுத்த முயற்சிக்கு வேரானதாக இருந்தன. இதற்கு மாறாக, கசாப் வழக்கை அடுத்து தண்டனைக்காகக் காத்திருக்கிற அப்சல் குரு மீதான தூக்குத் தண்டனை விவகாரமோ உள்நாட்டு எதிர்வாதி சம்பந்தப்பட்டது. இதனால், அவரை தூக்கிலிட்டாக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் குறைகிறது, அவர் தூக்கிலிடப்படுவது உள்நாட்டு அதிருப்தியைக் கிளறி விடக்கூடும் என்ற அபாயம் அதிகரிக்கிறது.

இவ்வாறாக, இந்தியாவின் மரணதண்டனை நிலவரங்களை வழக்கமானதாக வைத்திருக்கிற நூற்றுக்கணக்கான கொலைகளிலிருந்து கசாப் வழக்கு மாறுபட்டு தனித்து விளங்குகிறது. இந்தியாவில் நிகழும் இதர குற்றங்கள் மற்றும் தண்டனைகளிலிருந்து மாறுபடுகிற கசாப் வழக்கானது, 2001ல் இந்திய நாடாளுமன்றம் தாக்கப்பட்ட வழக்கு, அதேபோல் அதற்கு 10 ஆண்டுகளுக்கு முன்பாக முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொல்லப்பட்ட வழக்கு ஆகியவற்றின் தன்மை, சட்டப்பூர்வ நிலை ஆகியவற்றில் இருந்தும் வேறுபடுகிறது. மும்பை தாக்குதல் ஏற்படுத்திய அச்சத்தோடும் ஆத்திரத்தோடும் வேறு எந்த மரணதண்டனைக் குற்றவாளியையும் சமமாகப் பார்க்க இயலாது என்ற நிலையில், கண்டிப்பாக தூக்குத்தண்டனையை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்ற கட்டாயம் வேறு எந்த வழக்கிற்கும் இல்லை. மும்பைத் தாக்குதலின் தனித்துவமான பயங்கரத் தன்மை, தூக்கு தண்டனைக்குரிய குற்றச் செயல்கள் என்பதற்கான வரம்பை உயர்த்தவும் கூடும்.

அமெரிக்காவில் டிமோதி மெக்வேய் தூக்கிலப்பட்டதைத் தொடர்ந்து அந்த நாட்டின் நீதி அமைப்பு சார்ந்த அனுபவம் இங்கே கவனிக்கத் தக்கது. 1995ல் ஒக்லஹோமா சிட்டி நகரில் உள்ள அரசுக் கட்டிடத்திற்கு மெக்வேய் குண்டு வைத்த சம்பவம், 2008ல் மும்பை நகரம் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு இணையானதுதான். தனது செயல் அமெரிக்க அரசுக்கு எதிரானது என்று கருதினார் மெக்வேய். அவரது தாக்குதலில், ராணுவமோ காவல்துறையோ சாராத 168 பேர் கொல்லப்பட்டனர். அந்த படுகொலைகளுக்கான சதித் திட்டத்தை தீட்டியதும் அதை

நிறைவேற்றியதும் மெக்வேய்தான். ஆகவே, மெக்வேயின் செயல் கசாபின் செயலைவிடவும், மரண தண்டனைக்குரிய ஒரு குற்றம்தான். 1988ல் ஒரு புதிய மரணதண்டனைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து 2001ல் முதல் முறையாக மெக்வேய்க்கான மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. அன்றைய அதிபராக இருந்த ஜார்ஜ்டபிள்யூ புஷ், அமெரிக்க அரசின் தலைமை வழக்குரைஞர் ஜான் அஷ்கிராப்ட் இருவருமே, மெக்வேயின் மரண தண்டனையைத் தொடர்ந்து மேலும் பல மரண தண்டனைகளுக்கான தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டிய சூழல் வரும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால், அப்படி நடக்கவில்லை. மெக்வேய் கொல்லப்பட்ட 8 நாட்களுக்குப் பிறகு இன்னொருவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. 2003 மார்ச் மாதத்தில் 3வது நபருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. 2001 செப்டம்பரில் அல் கொய்தா நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து ''பயங்கரவாதத்திற்கு எதிரான போர்'' அறிவிக்கப்பட்டது. எனினும், 9 ஆண்டுகளுக்கும் மேலாக, அரசுக்கு எதிரான குற்றம் தொடர்பான ஒரு மரண தண்டனை கூட நிறைவேற்றப்படவில்லை.

அதிபரும், அரசுத் தலைமை வழக்குரைஞரும் மரண தண்டனைக்கு வலுவான ஆதரவு தெரிவித்த அமெரிக்காவில் மரண தண்டனைக்கு ஆதரவான சூழல் உள்ள அந்த நாட்டில், மரண தண்டனைகள் நிறைவேற்றப்படுவது அதிகரிக்கவில்லை என்கிறபோது, இந்தியாவில் 2013ம் ஆண்டில் தூக்கு மேடைப் பணியாளர்கள் நேரம் காலமின்றி வேலை செய்ய வேண்டி வரும் என்பதற்கான வாய்ப்பு மிகக் குறைவாகவே இருக்கிறது. சொல்லப்போனால் கசாப் இவ்வளவு விரைவாக தூக்கிலிடப்பட்டது, இந்தியாவில் மரண தண்டனையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான முயற்சிகள் மேலும் முன்னேறக்கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்று கூறலாம். கசாபின் தூக்கு தண்டனை இன்னும் பல ஆண்டுகளுக்கு இழுத்தடிக்கப்பட்டிருக்குமானால் அந்த வழக்கு ஒரு வீரியம் உள்ள ஆத்திரமூட்டியாக நீடித்திருக்கும். மரண தண்டனையை ஒழிப்புக்கு எதிரான ஒரு வலுவான வாதமாகவும் இருந்திருக்கும். கசாப் தூக்கிலிடப்பட்டதன் மூலம் மரண தண்டனை தேவை என்பதற்கு நமது நாடு முன்வைக்கக்கூடிய ஒரு அதிகபட்சவாதத்திற்கான வாய்ப்பு நீங்கியுள்ளது எனலாம். ஐரோப்பாவில் உள்ள ஒவ்வொரு ஜனநாயக நாட்டிலும் ஏற்கெனவே மரண தண்டனை ஒழிக்கப்பட்டுவிட்டதைப் போல இந்தியாவிலும் அது ஒழிக்கப்படுவதை நோக்கி நாடு கவனத்துடன் நடைபோட முடியும்.

**நடைமுறைப்படியா ? சட்டப்படியா ?**

எதையும் காலவரையின்றி இழுத்தடிக்கும் அதிகாரப்பூர்வமற்ற, அடிப்படையில் சட்டம் செயல்படாத நடைமுறையின் காரணமாகத்தான், தூக்குப் பணியாளர்கள் செயல்படாமல் வைக்கப்பட்டிருக்கிறார்கள். கசாபை தூக்கிலிட்டாக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் முடிவுக்கு வந்துவிட்டதால், மரண தண்டனைகளை நிறைவேற்றுவதற்கு முறைப்படி தடைவிதிப்பதற்கான ஒரு காலம் கனிந்திருக்கிறது எனலாம். மரண தண்டனையை முற்றாக ஒழிப்பதற்கான இந்த முதல் நடவடிக்கையை வேறு பல நாடுகள் விரிவான முறையில் பயன்படுத்தி உள்ளன. அண்மையில் இப்படி ஒரு தடையை விதித்தது அமெரிக்காவின் இல்லினாய்ஸ் மாநிலம். அதேபோல் ஆசிய நாடுகளில் தென்கொரியா இந்த முடிவு எடுத்திருக்கிறது. பிரிட்டனை எடுத்துக்கொண்டால் முதலில் 1965ல் அங்கு மரண தண்டனைகளை நிறுத்தி வைப்பதற்கான தடையாணை பிறப்பிக்கப்பட்டது. பிறகு 1969ல் அங்கு மரண தண்டனை நிரந்தரமாக கைவிடப்பட்டது.

மரண தண்டனைக் கொள்கையில் முன்னால் நின்று வழிகாட்டுவது என்பது பொதுவாக பொது மக்களின் எதிர்ப்பிற்கு உள்ளாகக் கூடும். இந்தியாவிலும் நிச்சயமாக அப்படி நடக்கும்தான். ஆனால், மரண தண்டனையை நிறுத்தி வைப்பதால் பெரும்பாலான இந்திய மக்களிடையே ஒரே ஒரு அச்சம் ஏற்படக்கூடிய அபாயம் இருக்கிறது: அதாவது இன்னொரு முறை பயங்கரவாதிகள் ஊடுருவினால், இன்னொரு மும்பைப் படுகொலைகள் நடந்தால் என்ன செய்வது என்பதே அந்த அச்சம்.

மரண தண்டனைச் சட்டத்தில் சீர்திருத்தங்கள் தேவை என வலியுறுத்தப்பட்டு வருவதன் வரலாற்றில் இந்த அச்சத்தைப் போக்கக்கூடிய ஒரு ஆலோசனை முன் வைக்கப்பட்டிருக்கிறது. பல நாடுகளில், போர் அல்லது போர் போன்ற செயல்களில் மரண தண்டனையை அனுமதிப்பதற்கான சிறப்பு சட்டவிதிகளை வைத்துக்கொண்டே, ''சாதாரண குற்றங்களுக்கு'' மரண தண்டனை அளிப்பது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய ஒரு ஏற்பாடு இந்தியாவிலும், பாதுகாப்பும் தொடர்பாக பெரிதும் அஞ்சுகிறவர்களுக்கு ஒரு பாதுகாப்பு உணர்வை வழங்கும், அதே நேரத்தில் இந்தியாவின் மரண தண்டனை தொடர்பான மிதமிஞ்சிய முரண்பாடுகளுக்கு ஒரு முற்றுப்புள்ளியையும் வைக்கக்கூடும்.

**(ஃப்ராங்க்ளின் இ ஜிம்ரிங், கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் சட்ட ஆசிரியராக இருக்கிறார். டேவிட் டி ஜான்சன், ஹவாய் பல்கலைக் கழகத்தில் சமூகவியல் ஆசிரியராகப் பணியாற்றுகிறார்.)**

**ஆதாரம்: DECEMBER 29, 2012 VOL XLVII NO 52**
**EPW Economic & Political WEEKLY**

# Amnesty International Report-2012
# இந்தியா

**இந்தியக் குடியரசு:**

**இந்திய ஜனாதிபதி:** பிரதிபாபாட்டீல்

**இந்தியப் பிரதமர் :** மன்மோகன் சிங்

**மரண தண்டனை:** தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது

**மக்கள் தொகை : 124105** இலட்சங்கள்

**சராசரி வயது:** 65.4 வருடங்கள்

**5 வயதுகளுக்கு கீழ் உள்ள குழந்தைகளின் இறப்பு விகிதம் –** ஆயிரம் குழந்தைகளுக்கு 65.6

**வயது வந்தோர் கல்வி: 62.8 சதவீதம்**

இந்தியா உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மனித உரிமைகளைப் பாதுகாப்பது, மேம்படுத்துவதை விலையாகக் கொடுத்து சில நேரங்களில் பொருளாதார வளர்ச்சியை நிலைநிறுத்தியுள்ளது. நாட்டின் மத்திய மற்றும் கிழக்குப் பகுதிகளிலுள்ள மாநிலங்களில் மாவோயிஸ்டுகள் மற்றும் பாதுகாப்பு படைக்கும் இடையில் நடக்கும் சண்டை சச்சரவுகளின்போது சுமார் 250 மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். டில்லி மற்றும் மும்பை குண்டுவெடிப்புகளில் ஏறத்தாழ 40 நபர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். லஞ்சத்துக்கு எதிராக இயற்றப்பட வேண்டிய ஒருங்கிணைந்த சட்டம் குறித்த அன்னா அசாரேயின் பிரச்சாரத்துக்கு ஆரம்ப வெற்றி கிடைத்தாலும் பாராளுமன்றத்தில் அது சட்டமாக்கப்படாமல் தோல்வி அடைந்தது. தொழில் நிறுவனங்கள் தங்கள் நிலங்களை முன்னறிவிப்பின்றி இலவசமாக கையகப்படுத்துவதை எதிர்த்து ஆதிவாசிகள் (பூர்வகுடிகள்) நடத்திய போராட்டங்களால் சில தொழில் திட்டங்கள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டன. அதிகாரிகள், புதிய நிலச்சீரமைப்பு, சுரங்க வேலைகள், மறுவாழ்வு ஆகியவற்றிற்கான சட்டத் திருத்தங்களை அறிமுகப்படுத்தினர். மனித உரிமைப் போராளிகளில் சிலர் மாநில அரசு மற்றும் அரசுசாரா அமைப்புகளின் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகினர். இதில் பலர் துன்புறுத்துதல், அச்சுறுத்தல் போன்ற குற்றச்சாட்டுகளுக்கு ஆளானதோடு சுமார் நான்கு செயல்பாட்டாளர்கள் கொல்லப்பட்டனர்.

அதிகாரிகள், ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புப் பிரதிநிதிகளுக்கு எப்போது வேண்டுமானாலும் வருகை தர அழைப்பு விடுத்தனர். இருந்த போதிலும் சித்ரவதை, நீதிமன்ற உத்தரவில்லா தண்டனை, கைது மற்றும் சிறைத் தண்டனை, காவலில் சாவு போன்றவை பல மாநிலங்களில் நிகழ்ந்துள்ளன. சித்ரவதையை சட்ட வரம்புக்கு மீறிய செயலாக அறிவிக்கும் நிலை இன்னும் உருவாகவில்லை. மனித உரிமையைப் பாதுகாப்பதற்கான நிறுவன ரீதியான நடைமுறைகள் இன்னும் பலவீனமாகவே இருக்கின்றது. ஏற்கெனவே நிகழ்ந்த கூட்டமாய் கொலை செய்தல், நீதிமன்ற ஆணையின்றி நிகழ்த்தப்பட்ட மரண தண்டனை போன்ற வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கச் செய்யும் செயலாக்கம் மிக மெதுவாக நகர்ந்து வருகின்றது. முன்னர் நடைபெற்ற மதக் கலவரங்களால் பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வு மற்றும் நிதியை உறுதிப்படுத்த அறிமுகப்படுத்தப்பட்ட புதிய சட்டத்திற்குப் பிறகும் இந்த நிலை. நாகாலாந்து மற்றும் அசாம் மாநிலங்களில் முந்தைய வன்முறைகள் மற்றும் தொந்தரவுகள் தொடர்ந்து நடைபெற்றுவரும் அமைதிக்கான முன் முயற்சிகளின் வட்டத்திற்கு வெளியில் இருக்கின்றன. ஏறத்தாழ 110 நபர்கள் மீது நீதிமன்றங்கள் மரணதண்டனை விதித்துள்ளது. ஆனால், ஏழாவது வருடமாக மரண தண்டனை நிறைவேற்றப்படவில்லை.

**பின்னணி:** அதிகரித்து வரும் பணவீக்கம் மற்றும் உலக அளவில் பொருளாதார பின்னடைவின் விளைவாக முக்கிய நகர்ப்புறங்களில் வேகமான பொருளாதார வளர்ச்சி குறைந்துவிட்டது. சமீபத்திய வளர்ச்சிப் பணிகள் என்பது கிராமப் புறங்களை பொறுத்தவரை ஒரு துளி கூட எட்டிப் பார்க்கவில்லை. எனவே, வறுமைப் பிணிகளில் சிக்கிய சமூகங்கள் எல்லாம் முடங்கிப் போன விவசாயப் பணிகள் காரணமாக உணவுப் பாதுகாப்பு இல்லாமல் இருக்கின்றனர். இந்தியாவின் ஏழைகள் என்போரின் சதவீதம் இந்திய ஜனத்தொகையில் 30 முதல் 50 சதவீதம் என்று சொல்லப்படுகிறது. இதில் குறைந்தபட்சம் 15 சதவீத மக்கள் நகரின் சேரிப் பகுதிகளில் முறையான சுகாதார கவனிப்பு, தண்ணீர், உணவு, கல்வி போன்றவையின்றி அவதிப்படுகின்றனர்.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபை மற்றும் ஐக்கிய நாட்டு மனித உரிமை சபை போன்றவற்றில் இந்தியா தேர்வு செய்யப்பட்டிருப்பது இந்தியாவின் பன்னாட்டு அந்தஸ்து மற்றும் மண்டல அந்தஸ்து போன்றவைகளை குறைத்து மதிப்பிட வைத்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் சிறப்பு நடைமுறைகளோடு ஒத்துழைக்க நேர்மறையான வழிமுறைகளை இந்திய நாடு எடுத்துள்ளது. ஜனவரி மாதத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித

உரிமைக்கான சிறப்பு குழுவினர் மனித உரிமைப் பாதுகாவலர்களின் நிலை பற்றி பார்வையிட இந்தியாவிற்கு அலுவலக அழைப்பின் பேரில் வந்தனர். செப்டம்பர் மாதத்தில் எதிர்பாராத விதமாக அதிகாரிகள் நிரந்தர அழைப்பு ஒன்றினை ஐக்கிய நாடுகளின் சபையின் சிறப்பு நடவடிக்கை குழுவிற்கு அனுப்பி வைத்தனர்.

**சத்தீஸ்கரில் மட்டும் ஏறத்தாழ 3000 மக்கள் இந்த மோதல்களில் 2005ஆம் ஆண்டுகளில் துவங்கி இதுவரை கொல்லப்பட்டுள்ளனர். ஏறத்தாழ 25,000 மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். மேலும், 5000க்கும் மேற்பட்டோர் முகாம்களில் வசிக்கின்றனர் மற்றும் 20,000ற்கும் மேற்பட்ட மக்கள் அண்டை மாநிலங்களான ஆந்திரா மற்றும் ஒடிசாவில் சிதறுண்டுள்ளனர்.**

அந்த அதிகாரிகள் மனித உரிமைகள் குறித்தான நெருக்கடிகள் நாடுகளின் பல பகுதிகளில் இருந்துள்ளதை வெளிப்படையாகப் பேசத் தயக்கம் காட்டினர். மத்திய கிழக்கு, வட ஆப்ரிக்க நாடுகளில் மற்றும் பக்கத்து நாடான மியான்மரில் நிகழ்ந்த மனித உரிமை மீறல் செயல்கள் நடந்தபோது இந்தியா மௌனம் காத்து வந்தது. இலங்கையில் 2009 இறுதியில் நிகழ்ந்த போரின் போதும் எழுந்த தேவையை ஆதரிக்கவும் தவறிவிட்டது.

### பாதுகாப்பு படையினர், இராணுவம் மற்றும் மாவோயிஸ்டுகளுக்கிடையேயான வன்முறைகள்:

சத்தீஸ்கர் மாவட்டத்தில் ஆயுதமேந்திய மாவோயிஸ்டுகள், பாதுகாப்பு படையினர் மற்றும் மாநில அரசின் உதகி பெறும் சல்வா ஜிடும் எனும் அமைப்பிற்கிடையேயான மோதல்கள் தொடர்கதையாகவே உள்ளது. இரண்டு தரப்பிலும் சாதாரண குடிமக்களே இலக்காக உள்ளனர். குறிப்பாக ஆதிவாசி மக்கள் கொலை செய்யப்படுவது, கடத்தப்படுவது, தீ வைக்கப்படுவது என பல்வேறு வன்கொடுமைகளுக்கு ஆளாகின்றனர். சத்தீஸ்கரில் மட்டும் ஏறத்தாழ 3000 மக்கள் இந்த மோதல்களில் 2005ஆம் ஆண்டுகளில் துவங்கி இதுவரை கொல்லப்பட்டுள்ளனர். ஏறத்தாழ 25,000 மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். மேலும், 5000க்கும் மேற்பட்டோர் முகாம்களில் வசிக்கின்றனர் மற்றும் 20,000ற்கும் மேற்பட்ட மக்கள் அண்டை மாநிலங்களான ஆந்திரா மற்றும் ஒடிசாவில் சிதறுண்டுள்ளனர்.

மாவோயிஸ்டுகள் மற்றும் பாதுகாப்பு படையினருக்கிடையேயான மோதல்கள் பழங்குடியினர் அதிகமாக வசிக்கும் ஒடிசா, ஜார்க்கண்ட் மற்றும் மேற்கு வங்கம் போன்ற பகுதிகளில் அடிக்கடி நிகழ்கிறது.

மேற்கு வங்கத்தில் மே மாதம் துவங்கி நடத்தப்பட்ட மாவோயிஸ்டுகளுக்கெதிரான நடவடிக்கைகள் அரசியல் சார்ந்த வன்முறைக்கும் கைதுகளுக்கும் அழைத்துச் சென்றுள்ளன. நவம்பரில் ''கிஷன்ஜி'' என அழைக்கப்படும் கோட்டீஸ்வர ராவ் என்பவர் போலி மோதல் கொலையினால் சொல்லப்பட்டது அமைதிப் பேச்சுவார்த்தைக்கு மிகப்பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது.

இந்திய உச்சநீதிமன்றத்தின் பிரசித்தி பெற்ற தீர்ப்பினால் மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட, மாநில அரசின் உதவியோடு இயங்கிய மாவோயிஸ்டுகளுக்கு எதிரான படையை களைத்துவிட்டு 6000 நபர்கள் உள்ள பலமான துணைப்படையை உருவாக்கியதோடு சில வன்முறைகளில் அவர்களுக்கு இருந்து பங்களிப்பையும் மறுத்தது.

- ஜனவரி மாதத்தல் ஒரிசா காவல்துறையும் ராணுவமும் சேர்ந்து மாவோயிஸ்டுகளாகக் கருதப்பட்ட 25 நபர்களை வெவ்வேறு 6 சம்பவங்களில் கொன்றது. ஆனால், மனித உரிமை செயல்பாட்டாளர்கள் இதுபற்றி கூறுவதென்னவென்றால் இருவர் சுரங்க வேலைகளுக்கு எதிராகப் போராடியவர்கள் என்றும் மற்றும் நால்வர் மாவோயிஸ்டுகளின் ஆதரவாளர்கள் என்றும் கூறுகின்றனர். இவர்கள் நீதிமன்ற தீர்ப்புகளின்றிக் கொல்லப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டினர்.

- பிப்ரவரி மாதத்தில் மாவட்ட அதிகாரிகள் இருவரை ஒன்பது நாட்களாக ஒரிசாவிலுள்ள மால்ஹாங்கிரி என்னுமிடத்தில் அடைத்து வைத்து அவர்களை பின்னர் கைது செய்து வைக்கப்பட்டிருந்த ஐந்து மாவோயிஸ்டுகளை ஜாமீனில் விடுதலை செய்தபின் வெளியில்விட்டனர்.

- மார்ச் மாதத்தில் காவல்துறையும் சல்வாஜீடும் அமைப்பைச் சார்ந்த 300 நபர்கள் மாவோயிஸ்டுளுக்கு எதிராக தாக்குதலில் ஈடுபட்டனர். பார்பள்ளி, திம்மபுரம் மற்றும் தாடிமிட்லா எனும் கிராமங்களில் (சத்தீஸ்கர் மாநிலத்தில்) இது நிகழ்ந்தது. இது காரணமாக மூன்று கிராம மக்கள் கொல்லப்பட்டனர். மேலும் மூன்று பெண்கள் பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாயினர்.

மேலும் 295 வீடுகள் தீக்கு இரையாக்கப்பட்டன. இதற்கு பதிலடியாக மாவோயிஸ்டுகள் நான்கு சிறப்பு அதிகாரிகளை கொன்றதோடு ஐந்து நபர்களை காயப்படுத்தினர். ஆதிவாசி செயல்பாட்டாளரான லிங்கராம் இவைகளை வெளிச்சத்துக்கு கொண்டு வந்ததால் இவரும் பிறிதொரு செயல்பாட்டாளரான சோனிசோரி என்பவரும் கைது செய்யப்பட்டனர். இதற்கு சொல்லப்பட்ட காரணம் எஸ்ஸார் ஸ்டீல்ஸ் என்னும் வியாபார நிறுவனம் ஆயுதம் தாங்கிய மாவோயிஸ்டுகளுக்கு பணம் தர ஏற்பாடு செய்ததாக சொல்லப்பட்டது. இந்த இருவரையும் காவல்துறை சித்ரவதை செய்தது. இந்த இருவரும் மனசாட்சியின்றி கைது செய்யப்பட்டனர் எனலாம்.

- மார்ச் மாதத்தில் ஜார்க்கண்ட் மாநிலத்தில் நியாமட் அன்சாரியை கொன்றதோடு மற்றும் அவருடன் பணியாற்றும் புக்கன்சிங் என்பவரை மிரட்டலுக்கு உட்படுத்தியது. ஏனெனில், இவர்களுக்கு மாவோயிஸ்டுகள், உள்ளூர் ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வனத்துறையினரோடு ஊழலில் பங்குண்டு என்று வெளிப்படுத்தினர். ஜுலை மாதத்தில் மிரட்டல் ஒன்றினை நன்கு புகழ்பெற்ற நான்கு சமூக செயல்பாட்டாளர்களான ஜுன் டிரேஸ் மற்றும் அருணா ராய் உட்பட நால்வருக்கு வெளியிட்டனர். பின்பு அதனை திரும்ப பெற்றுக் கொண்டனர்.

- செப்டம்பர் மாதத்தில் ஆயுதந்தாங்கிய மாவோயிஸ்டுகள் ஜெக பந்து மஜ்ஹி என்னும் ஆளுங்கட்சியான பிஜு ஜனதாதள சட்டமன்ற உறுப்பினர் ஒருவரை கொன்றனர். அவருடைய பாதுகாப்பு அதிகாரியையும் கொன்றனர். இது நிகழ்ந்தது ஒடிசாவிலுள்ள நப்ரங்பூர் மாவட்டத்திலாகும். இந்த சட்டமன்ற உறுபபினர் ஊழலில் ஈடுபட்டவர் என்று சொல்லி இந்த கொலையை நியாயப்படுத்தினர்.

- அக்டோபர் மாதத்தில் ராணுவத்தினர். மாவோயிஸ்டுகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டு 29 வயதான ஷிபானி என்பவரை பாலியல் பலாத்காரம் செய்தனர். இது நிகழ்ந்தது மேற்கு வங்காளத்திலுள்ள மிட்நாப்பூர் மாவட்டத்தில் அப்பெண்ணின் கணவர் ஜாமீனில் வெளிவந்திருந்தார். அவரையும் மீண்டும் கைது செய்ய முற்பட்டனர்.

**கார்ப்பரேட் அக்கவுண்டபிலிட்டி:**

பல மாநிலங்களின் ஆதிவாசி மக்கள் மற்றும் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட சமூகத்தினரின் எழுச்சி தொடர்ந்து நடந்து வந்த மற்றும் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த திட்ட வரைவுகள் உதாரணமாக பெரிய அணைகள் போன்றவைகளுக்கு தங்கள் நிலம் மீதான உரிமைக்காக போராடியது மேற்கொண்டு நடைபெற முடியாமல் தடையாக அமைந்தது. அதற்கு பதிலாக அதிகாரிகள் நாட்பட்டு போன நில உரிமைச்சட்டங்கள் போன்றவற்றை மாற்றி அமைக்கும் தற்காலிக திருத்தங்களை கொண்டு வந்து சுரங்கப்பணியை தொடர முனைந்தனர். அதன் மூலம் கண்காணிப்பு பணி மற்றும் மக்களுக்கான மறு சீரமைப்பு பணிகளை துவங்கினர். இருந்தபோதும் போராட்டங்கள் தொடர்ந்தது. சமீபத்திய சட்டத் திருத்தங்கள் காடு அது தொடர்ந்த நிலம் போன்றவற்றில் மக்களுக்கான உரிமைகளை உத்தரவாதம் தரவில்லை என்பதை மக்கள் தெரிவித்தனர். திட்ட வரைவுகளின்போது மக்களின் சம்மதம் பெறப்படவில்லை என்பதை அது தெளிவாக்கியது.

- ஜுன், ஜுலை மற்றும் நவம்பர் மாதங்களில் விவசாயிகளால் நடத்தப்பட்ட அமைதிப் போராட்டத்தைக் கலைக்க காவல் துறையால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவும் தோல்வியில் முடிந்தன. இந்தப் போராட்டமானது விவசாயிகளால் பொது நிலங்களை வலுக்கட்டாயமாக தெற்கு கொரியன் போஸ்கோ ஸ்டீல் கம்பெனிக்கு வழங்குவதற்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டமாகும். ஜகத்சிங்பூர் மாவட்டத்தில் (ஒடிசா) திட்ட வேலைகளை துவங்க மேற்சொன்ன தென்கொரிய கம்பெனி திட்டமிட்டிருந்தது. அமைதிப் போராட்டத்தின் இரு தலைவர்கள் அபெய்சாகூ மற்றும் நாராயண ரெட்டி என்பவர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர்.

- ஜுலையில் ஒரிசா உயர்நீதிமன்றம் இந்திய அதிகாரிகள் 2010ல் பிறப்பித்த உத்தரவை நிறுத்தி வைத்தது. வேதாந்தா அலுமினியம் என்னும் நிறுவனம் (இது வேதாந்தா ஆதாரங்கள் என்னும் நிறுவனத்தின் ஒரு கிளை) தன் லான்ஜிகார் அலுமினிய சுத்திகரிப்பு நிறுவன விரிவாக்கத்திற்காக கேட்டிருந்தது. அதுதான் நிறுத்தப்பட்டது. இந்திய அதிகாரிகள் இதுபோன்ற முடிவெடுக்க காரணம் ஆம்னெஸ்டி இண்டர்நேஷனலின் அறிக்கை வெளியானதற்கு பின்புதான். அவ்வறிக்கையில் விரிவாக்கத்துக்கு உடன்படுவது ஆதிவாசி மக்களின் அடிப்படை உரிமைகளான தண்ணீர், ஆரோக்கியம், சுற்றுச்சூழல் போன்றவை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது என்று கண்டறியப்பட்டுள்ளதோடு விரிவாக்கம் என்பது நிலையை இன்னும் மோசமாக்கிவிடும் என்று சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. எனவே, நீதிமன்றம் அந்த கம்பெனிகள் மீண்டும் விண்ணப்பிக்க சொல்லியதோடு கட்டாய விதிகளுக்கு உட்பட்டு விண்ணப்பம் செய்ய உத்தரவிட்டது. ஆனால், அந்தக் கம்பெனியோ நீதிமன்ற முடிவை சவால்விட்டிருக்கிறது.

**அதிகப்படியான பலப் பிரயோகம்:**

பல சந்தர்ப்பங்களில் காவல்துறை தன் வரம்புக்கு மீறிய பலத்தை உபயோகப்படுத்தி குறு விவசாயிகள், ஆதிவாசிகள் மற்றும் தலித்துகளின் போராட்டத்தை அடக்க முற்பட்டிருக்கிறது. அதிகாரிகளும் இதுபோன்ற சம்பவங்களில் நடுநிலையாக அமையாமல் ஒருதலைப்பட்சமாக செயல்பட்டிருக்கின்றனர். செப்டம்பர் மாதத்தில் ஏழு தலித்துகள் காவல்துறையினரால் கொல்லப்பட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் பரமக்குடிக்குச் சென்றுகொண்டிருந்த தலித் தலைவர் ஜான் பாண்டியனை கைது செய்ததை எதிர்த்து விடுதலை செய்ய சொன்ன கும்பலை சுட்டதால் வந்ததுதான் இந்த ஏழு மரணங்களும். ஏற்கெனவே இதுபோன்ற நிகழ்வு ஒன்றில் கொல்லப்பட்ட தலித் தலைவர் இம்மானுவேல் சேகரனின் மறைவு தினத்தை அனுசரிக்கச் சென்ற ஜான் பாண்டியன் கைது செய்யப்பட்டார்.

- செப்டம்பரில் 8 முஸ்லிம் மக்கள் காவல்துறையால் கொல்லப்பட்டனர். ராஜஸ்தானிலுள்ள பரத்பூர் அருகிலுள்ள கோபால்கார் என்னும் கிராமத்தில் மசூதிக்குள் துப்பாக்கிச் சூடு நடந்ததால் விளைந்தது இது.

- பிப்ரவரி மாதத்தில் ''தெர்மல் பவர் பிளான்ட்''க்காக ஈஸ்ட் கோஸ்ட் எனர்ஜி கம்பெனி நிலம் கையகப்படுத்தப்பட்டதை எதிர்த்துப் போராடியவர்களை காவல்துறை சுட்டதால் இருவர் கொல்லப்பட்டு ஐவர் காயமுற்றனர். ஆந்திராவிலுள்ள வதித்தாந்தரா கிராமத்தில் நிகழ்ந்தது இது.

- ஏப்ரலில் மகாராஷ்டிராவில் ஜெய்தாபூரில் அணு உலை அமைக்கப்பட இருந்ததை எதிர்த்தவர்களில் ஒருவர் கொல்லப்பட்டார். ஒருவர் படுகாயமுற்றார். இது பிரெஞ்சு அரிவா என்னும் கம்பெனியால் துவக்குவதாக இருந்த அணுஉலைக்களமாகும். மும்பையிலிருந்து அமைதியாய் நடை பயணம் மேற்கொண்டவர்கள் மீது ஏவப்பட்டது இது.

- மே மாதத்தில் இரண்டு போராளிகளும் இரண்டு காவலர்களும் கொல்லப்பட்டனர். இது பாட்டா பார்சௌல் என்னும் கிராமத்தில் விவசாயிகளை நோக்கிச் சுட்டதால் நேர்ந்தது. விவசாயிகளின் நிலங்களை கட்டாயப்படுத்தி கையகப்படுத்தியதால் விவசாயிகள் 3 அதிகாரிகளைக் கடத்தி சென்றனர். டில்லிக்கு அருகிலுள்ள நொய்டா விரைவுப் பாதையில் சென்றபோது கடத்தப்பட்டனர். காவலர்கள் ஏழு பெண்களை பாலியல் வன்முறை செய்து கிராமத்தில் கொள்ளையடித்தனர். நொய்டாவிலுள்ள நீதிமன்றம் 30 காவல் அதிகாரிகள் மீது பலாத்காரம் மற்றும் கொள்ளை எனும் குற்றப்பதிவை செய்தது. உச்சநீதிமன்றமும் நிலம் கையகப்படுத்தியது. சட்டத்துக்கு புறம்பானதென்று தீர்ப்பளித்தது.

- மே மாதத்தில் இருவர் போலீஸ் சுட்டதில் மாண்டா ஜார்க்கண்ட் மாநிலத்தில் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டதை எதிர்த்து மக்கள் நடத்திய போராட்டத்தை நோக்கி காவல்துறை சுட்டதில் இருவர் மாண்டனர். ஏறத்தாழ ஒரு லட்சம் மக்கள் ஜாம்ஜெட்பூர், ரான்சி மற்றும் பொக்காரௌ நகரங்களில் இருந்து கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர்.

**மனித உரிமைப் பாதுகாவலர்கள்:** ஆதிவாசி மக்கள் மற்றும் விளிம்பு நிலை மக்களின் மனித உரிமைகளுக்காக தகவல் பெறும் உரிமைச் சட்டத்தை பயன்படுத்துபவர்கள் அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகளாலும் குறி வைத்துத் தாக்கப்பட்டார்கள். செயல்பாட்டாளர்கள் சிறப்புச் சட்டம் ஒன்றை இவ்வித தாக்குதல்களிடமிருந்து பாதுகாத்து கொள்வதற்காக வேண்டினர்.

  – இது ஜனவரி மாத அறிக்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் வழி கோரப்பட்டிருந்தது.

- ஏப்ரலில் டாக்டர் பினாயக் சென் அவர்களை உள்ளூர் நீதிமன்றம் ஒன்று அதாவது சட்டீஸ்கர் மாவட்ட நீதிமன்றம் ஆயுள் தண்டனை வழங்கி தீர்ப்பளித்தது 2010ம் ஆண்டு ஆயுத மேந்திய மாவோயிஸ்டுகளுடன் தொடர்புகொண்டிருந்தார் என்பது அவர் மீதான குற்றச்சாட்டு பலத்த தேசிய மற்றும் பன்னாட்டு பிரச்சாரங்கள் முயற்சி செய்ததன் பேரில் உச்சநீதிமன்றம் அவரை ஜாமீனில் விட்டது.

- ஜூன் மாதத்தில் சுற்றுச்சூழல் செயல்பாட்டாளர்களான ரமேஷ் அகர்வால் மற்றும் ஹரிஹர் பட்டேல் பொய் குற்றங்களின் பேரில் கைது. செய்யப்பட்டனர். சட்டீஸ்கரிலுள்ள நாய்கா மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி காரணமாக எழுந்த சுற்றுச்சூழல் மாசு பற்றி வெளியிட்டதுதான் உண்மையான காரணம்.

- ஆகஸ்டு மாதத்தில் சுற்றுச்சூழல் செயல்பாட்டாளர் ஷெகா மசூடு போபால் நகரத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார். மத்தியப் பிரதேசத்தில் நகர கட்டமைப்பு மேம்பாடுகள் என்னும் பெயரால் எப்படி சுற்றுச்சூழல் விதிகள் மீறப்படுகிறது என்பதை வெளி உலகுக்கு கொண்டு வந்தார். மேலும் இதில் மத்திய பிரதேச சுரங்க வேலைகளையும் சவாலுக்கு உட்படுத்தினார் என்பதை கவனிக்க வேண்டும்.

- 2002ம் வருடம் குஜராத்தில் நவம்பரில் நாபீ சையது என்னும் முக்கிய சாட்சி ஒருவர் கத்தியால் குத்தப்பட்டு

இறந்தார். நரோதா பாட்டியா கொலை வழக்கின் முக்கிய சாட்சியாவார். அவர் ஒரு கோர்ட் வாய்தாவில் சாட்சி சொல்லிவிட்டு வெளியே வந்தபோதுதான் இது நிகழ்ந்தது.

- நவம்பர் மாதத்தில் ஜார்க்கண்ட்டிற்கு வெளியே வல்சா ஜான் என்னும் ஒரு சமூக செயல்பாட்டாளரான கிறிஸ்துவ பெண் துறவி (nun) ஒருவர் கொலை செய்யப்பட்டார். இவர் ஆதிவாசிகளின் உரிமை பாதுகாப்புகளுக்காக வேலை செய்து வந்தார். சட்டத்துக்குப் புறம்பாக சுரங்க வேலைகளில் ஈடுபட்டவர்கள் மரணமிரட்டலுக்கு உள்ளானதாக சொல்லப்படுகிறது.

### தண்டனை விலக்கம்:

சட்டத்தை தவறுதலாகவே பயன்படுத்தல் மற்றும் விதிமீறல்கள் அல்லது உரிமை மீறல்கள் என்பது ஒரு தலைப்பட்சமாகவே இருக்கின்றது. வடகிழக்கு மற்றும் ஜம்மு காஷ்மீர் பகுதிகளில் தொடர்ந்த போராட்டங்கள் ராணுவத்திற்கான சிறப்பு அதிகாரங்களை (சட்டம் 1958) திரும்பப் பெற வேண்டுமென்பதாக நடந்தபோதும் அதிகாரிகள் அசட்டையாய்தான் இருக்கிறார்கள். மிக பயங்கரமான நிலவரங்களில் சுட்டுக்கொல்ல இச்சட்டங்கள் அனுமதியளிப்பதால் அப்படியில்லா போதும் சுட்டுக்கொல்வது நிகழ்கிறது.

சட்டத்தின் வழி அல்லாமல் கொன்று போடுவது, காணாமல் செய்வதுவிடுவது ஆகியவற்றை கடந்த காலத்தில் செய்தவர்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள்களை பஞ்சாபில் செய்தவர்கள் (1984 மற்றும் 1994களில்) அசாமில் (1998 மற்றும் 2001ல்) நாகாலாந்து மற்றும் மணிப்பூரில் இவ்வித செயல்கள் புரிந்தவர்கள் தொடர்ந்து நீதி முறையின் வழி தண்டிக்கப்படாமல் தப்பித்துக் கொண்டுதானிக்கிறார்கள். தலித் சமூகத்தினர் பல மாநிலங்களில் தாக்குதலுக்கு உள்ளாகத்தான் செய்கிறார்கள். பாகுபாடு காட்டப்படுகிறார்கள். இருக்கின்ற சிறப்புச் சட்டங்களைப் பயன்படுத்தி இதுபோன்ற வன்முறையாளர்களை தண்டிக்கப் போதுமான அரசியல் வலு இல்லாமல்தான் இருக்கிறது.

### இன மற்றும் ஜாதிய வன்முறை:

ஏறத்தாழ பத்தாண்டுகளுக்குப்பின் 2002ல் குஜராத்தில் சுமார் 2000 மக்கள் கொல்லப்பட்டபின் தற்போது குற்றவாளிகளென நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

- மார்ச் மாதத்தில் குஜராத் சிறப்பு நீதிமன்றம் 11 நபர்களை மரணதண்டனைக்கும் பிறிதொரு 20 நபர்களை ஆயுள் தண்டனையும் வழங்கப் பட்டிருக்கிறது. இது சபர்மதி விரைவு இரயில் பெட்டிகளில் 59 இந்து ஆன்மீக யாத்திரையாளர்களை தீ வைத்து கொன்ற தாக்குதல்களுக்காகவும் அதன்பின் நிகழ்ந்த கலகங்களுக்காகவும் ஆகும்.

- நவம்பர் மாதத்தில் குஜராத் சிறப்பு நீதிமன்றம் சர்தகார்புரா படுகொலையில் குற்றஞ்சாட்டப்பட்ட 73 நபர்களில் 31 நபர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்கியது. 33 முஸ்லீம்கள்தான் அந்த சர்தார் படுகொலையில் கொல்லப்பட்டிருந்தனர். இதுதான் 10 பெரும் வழக்குகளில் உச்சநீதிமன்றமே நேரடியாக வழக்கு போக்கை கண்காணித்தது.

  குஜராத்தில் நடந்த உரிமை மீறல்களுக்காக தற்போது வேலை செய்பவர்களும் தற்போது கொடுமைப்படுத்தப் (நெருக்கடிக்கு உள்ளாக்கு)படுகிறார்கள்.

- ஜனவரி மாதத்தில் டீஸ்டா செதால்வட் என்பவர் நீதி மற்றும் அமைதிக்கான மையம் (Centre for justice and peace) மற்றும் வழக்கறிஞர் குழு இவர்கள் குஜராத் கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தை சேர்ந்தவர்களின் உரிமைப் பாதுகாப்புக்காக பாடுபட்டவர்கள். இவர்களை குஜராத் காவல்துறை சாட்சியங்களை சாக்கு போக்கு கண்டு பிடித்து அழித்ததாக குற்றஞ்சாட்டியுள்ளது.

### ஜம்மு மற்றும் காஷ்மீர்:

காஷ்மீரில் நடந்த சட்டத்திற்கு மீறிய கொலைகள் மற்றும் உரிமை மீறல்களை செய்தவர்களின் செயல்களுக்கான தண்டனை விலக்கு தொடர்கிறது. மேலும் 1989 முதல் ராணுவத்தினரின் கலகத்தை ஒட்டி ஆயிரக்கணக்கான மக்கள் காணாமல் போவதின் காரணமாக இருந்தவர்கள் தண்டிக்கப்படாமல் போவதும் நடந்துள்ளது. நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்களை பாதுகாப்புப் படையினர் 2010ம் போராட்டத்தின்போது கொன்றதும் தண்டிக்கப்படாமல் போயுள்ளது.

- மார்ச் மாதத்தில் மனித உரிமை வழக்கறிஞரான ஜலீல் அன்ரபி கொலையுண்ட 15 ஆண்டுகளுக்குப் பின்பு கொலையில் சம்பந்தமிருப்பதாக கூறி மாநில அதிகாரிகள் மேஜர் அவதார சிங்கை அமெரிக்கா ஒப்படைப்பு செய்யுமாறு வலியுறுத்தினர். அமெரிக்காவிடமிருந்து பதில் வரவில்லை.

- செப்டம்பர் மாதத்தில் காஷ்மீரில் மாநில மனித உரிமைக் கமிசன் 2700 அடையாளம் தெரியாத கல்லறைகள் வடமாநில காஷ்மீரில் உள்ளதாக கண்டறிந்துள்ளனர். உள்ளூர் காவல் துறையினர் எவ்வளவு வலுவாய்

அடையாளம் தெரியாத தீவிரவாதிகள்" என்று வாதிட்ட போதிலும் மனித உரிமைக் கமிஷன் 574 உடல்களை காணாமல் போன உள்ளூர் வாசிகள் என்று DNA டெஸ்ட்–டில் கண்டறிந்துள்ளனர். அதிகாரிகளோ இந்த சிபாரிசின் பேரில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை

மார்ச் மாதத்தில் ஆம்னஸ்டி இண்டர்நேஷனல் ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தது. அதில் ஸ்ரீநகரில் நிர்வாகம் தானே கைது செய்து அடைத்து வைப்பதை நிறுத்தும்படியும் பொது பாதுகாப்பு சட்டம் தனை திரும்பப் பெறும்படியும் 18 வயதுக்குக்கு கீழ்பட்டவர்களை கைது செய்யும் செயலை தடுக்கும் வண்ணம் ஜுவெனைல் எனப்படும் இளஞ்சிறார் நீதிச் சட்டத்தை திருத்தி அமைக்க கேட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து மாநில அதிகாரிகள் PSA –ஐ திருத்தி, அடைத்து வைக்கும் காலத்தை குறைத்து, 18 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களை அடைத்து வைப்பதை தடுக்க உத்தேசித்தனர். இருந்த போதிலும் PSA –ன் கீழ் அடைத்து வைக்கும் காலம் குறைக்கப்படாமலும் பல அரசியல் தலைவர்கள் மற்றும் செயல்பாட்டாளர்கள் விசாரணை இன்றி அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். பல குழந்தைகள் ஆம்னெஸ்டி இன்டர்நேஷனல் அறிக்கைக்குப் பின் அடைத்து வைக்கப்பட்டதிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

- மே மாதத்தில் 17 வயதான முர்டாசா மன்சூர் என்பவர் இரண்டாவது முறையாக கைது செய்து அடைத்து வைக்கப்பட்டுள்ளார். இதற்கு முன்பு ஒரு மாதத்தில் ஜம்மு மற்றும் காஷ்மீர் உயர் நீதிமன்றம் நான்கு மாதமாக அடைத்து வைத்திருந்ததை குலைத்து ஆணையிட்டது.

**தன்னிச்சையான கைதுகள் மற்றும் சிறையிலடைத்தல்:–**

மும்பை மற்றும் டெல்லியில் நடந்த குண்டு வெடிப்புகள் தொடர்பாக 50 நபர்கள் குற்றப்பத்திரிகை தயாரிக்கப்படாமல் ஒரு வாரம் தொட்டு ஒரு மாதம் வரையிலான சிறையிருப்பில் இருக்கிறார்கள். பாதுகாப்பு சட்டங்கள் மும்பையில் நவம்பர் 2008 தாக்குதலுக்கு பின்பு இறுக்கப்பட்டு சந்தேகத்தின் பேரில் பலர் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இருந்தபோதிலும், முந்தைய வழக்குகள் பற்றிய விசாரணை நடவடிக்கைகள் மிகக் குறைந்த அளவிலேயே முன்னேற்றம் கண்டுள்ளன.

- நவம்பர் மாதத்தில் ஏழு முஸ்லிம் ஆண்கள் மகாராஷ்டிராவிலுள்ள மாலேகான் நகரம் மற்றும் மும்பை தாக்குதல் 2006 ஒட்டி குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் ஜாமீனில் விடுதலை ஆகியுள்ளார்கள். இந்த விடுவிப்பு இந்து தலைவர் அசீமானந்தா ஆயுதம் ஏந்திய வலதுசாரிகள் காரணமென்று ஒத்துக்கொண்டதால் நிகழ்ந்துள்ளது.

**மரண தண்டனை:–**

குறைந்தது 100 மக்கள் மீது மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் தொடர்ந்து ஏழாவது ஆண்டாக தண்டனை நிறைவேற்றப்படவில்லை. ஆனால் மரணங்கள் நிகழக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. ஏனென்றால் அதிகாரிகள் மரண தண்டனை வரிசையிலிருக்கும் ஐவரின் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டதால் இவற்றில் மூவர் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு நிரூபிக்கப்பட்டவர்கள்.

புதிய சட்டங்கள் டிசம்பர் மாதத்தில் வந்துள்ளன. அதன்படி ''பயங்கரவாதிகள்'' என்று எண்ணெய் மற்றும் வாயுக் குழாய்களின் வழி சாவு நேர்ந்த வழக்கிலும் குற்றம் நிரூபிக்கப்பட்டவர்கள் மற்றும் குஜராத் மாநிலத்தில் சட்டத்துக்குப் புறம்பாக சாராயம் காய்ச்சி விற்றவர்கள் மீதும் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

## Amnesty International Visits / Reports

- “A lawest law”: Detentions under the Jammu and Kashmir Public Safety Act (ASA 20/001/2011)
- Open letter to India's Minister of Environment and Forests on the threat of leakage from Vedanta Aluminium's red mud mud pond in Orissa (ASA 20/032/2011)
- Generalisations, omissions, assumption: The failings of Vedanta's Environment Impact Assessments for iths bauxite mine and alumina refinery in India's state of Orissa (ASA 20/036/2011)
- An open letter from Amnesty International to Members of the Jammu and Kashmir Legislative assembly (ASA 20/046/2011)
- Indian executions would be blow to human rights (PRE01/274/2011)
- India urged to implement court ban of anti-Maoist militias (PRE01/340/2011)

**Source: Amnesty International Report 2012**

## சிறைக்கைதிகளின் உரிமைகள்

# மனித உரிமை மீறல்கள் மற்றும் இழப்பீடுகள்

– A. சிராஜுதீன், வழக்கறிஞர்

**முன்னுரை:** மனித உரிமைகள் என்பது மனித மாண்பு என்பதிலிருந்து பெறப்படுவதோடு மனித உயிர்களோடு இணைந்து அல்லது உள்ளுறையாய் இருப்பதாகும். மனித உரிமைகள் என்பது இயற்கையாகவே மனித உயிர் எடுத்ததாலேயே அதாவது சொல்லப்போனால் பிறப்பிலேயே வருவது அதுதான் மனிதவாழ்வுக்கு அடிப்படையானது. மனிதனிடமிருந்து பிரிக்க, மாற்ற முடியாதது. மற்றும் அன்னியப்படுத்தக் கூடாதது. உரத்து கூறுவதென்றால் மனித உரிமைகள் என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் அடிப்படையான உரிமைகள். அப்படிப்பட்ட உரிமைகள் இயல்பாக அமைந்துள்ள காரணத்தால் ஒவ்வொரு மனிதனும் சிவில் மற்றும் அரசியல் சமூகத்தில் மாண்புடன் வாழ்வதற்கு குறைந்தபட்ச அடிப்படைத் தேவையாய் அமைந்து வருகிறது எனலாம்.[1]

சட்டமும் அதன் செயல்பாடுகளும் அவ்வப்போது சோதனைக்குட்பட்டுவிடுகின்றது. எங்கெல்லாம் எனில் ஓயாது தெருவில் ஒலிக்கும் ஓலங்கள், மனித கூட்டத்தில் அதிலும் குறிப்பாக தம் பாதுகாப்புக்கென இருக்கும் சட்டப்பிரிவுகளை அறியாத நுகர்வோராக இனிய காரணகாரியங்களை உணராதிருக்கும்போது எனலாம்[2]. ஒரு தனிநபர் சுதந்திரத்தை காட்டிலும் அடைபட்டு கிடக்கும் குற்றவாளிகளை கைது செய்யப்பட்டு விசாரணை தேதிக்கு காத்திருப்பவர்களை நாட்டின் நலன் மற்றும் பாதுகாப்பு கருதி விசாரித்து சேகரித்த செய்திகளை வெளிக்கொணர்வதுதான் மிக முக்கியமானதும் முதலில் நடக்க வேண்டியதும் கூட, “பொது மக்களின் பாதுகாப்பு தான் சட்டத்தின் உச்சநிலை” என்பது லத்தீனில் ஒரு வழக்கு “நாட்டின் பாதுகாப்புதான் உச்சநிலைச் சட்டம்” என்றும் அதுவே கூறுகிறது. எனவே, தனி மனிதனின் ஒட்டுமொத்த சமூகத்தின் நலனே மேலானது[3].

காவல் அதிகாரிகள் சட்டம் மற்றும் ஒழுங்கிற்கு பொறுப்பானவர்கள் குடிமக்களின் தனிமனித சுதந்திரத்திற்கு பாடுபடும் மதிப்பளிக்க கடமைப்பட்டவர்கள் சட்டத்தை தம் பக்கம் திருப்பிக் கொண்டு அடாவடித் தனமான சட்ட எதிர் நடவடிக்கையில் ஈடுபட்டுவிடலாகாது. சட்டம் மற்றும் ஒழுங்குக்கான காவலர்களே குடிமக்கள் சுதந்திரத்தை கெடுப்பவர்கள் ஆகக் கூடாது. அவர் தம் பொறுப்பும் கடமையும் காப்பதுதான் அன்றி குலைப்பது அல்ல[4]. அதுபோல அரசு என்பது சரியான நீதியான மற்றும் நேர்மையானதாக இருக்க வேண்டும். சட்ட வழி ஆட்சி நடக்கும் பண்பட்ட நாட்டில் காவலில் சாவு என்பது மிக மோசமான குற்றங்களில் ஒன்றாகும்.[5] செய்திகளை தகவல்களைப் பெற வேண்டும் என்பதற்காக எந்தவிதமான சித்ரவதையையும் கையாள்வதென்பது சரியானதும் அல்ல நீதியும் நேர்மையானதுமல்ல. எனவே, அதை பொறுத்துக் கொள்ளவோ அனுமதிக்கவோ முடியாது. இந்திய அரசியல் சாசனம் பிரிவு 21ன்படி அது குற்றமும் ஆகும்.[6]

### 2) நாடு என்பது தம் குடிமக்களின் தோற்கடிக்கப்படக் கூடாத உரிமைகளை காப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறது.

குடிமக்களின் வெல்லக்கூடாத உரிமைகளை உயிர் வாழ்தலை உறுதிப்படுத்துவது ஒரு அரசின் கடமையாகும். இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் பிரிவு 21 உறுதியளிக்கும் மதிப்புமிக்க உரிமைகளை கைதி, குற்றவாளி, விசாரணைக் கைதி என்பதற்காக மறுக்கப்படக்கூடாது. அவர்களுக்கு சட்டம் மறுக்கும் உரிமைகள் தவிர மற்றவைகளுக்கு உரிமையுண்டு. எனவே, சிறை மற்றும் காவல் அதிகாரிகள் தம் பொறுப்பில் உள்ளவர்களின் “உயிர் வாழும் உரிமையை” மறுக்கக்கூடாது. அவர்களின் சில உரிமைகள் அடைபட்டிருப்பதாலேயே தடுக்கப்பட்டிருக்கிறதே தவிர மீதமுள்ளவைகள் மிகவும் உயர்ந்தவைகள்தான். அதே கடமை அரசிற்கும் உண்டு. அதில் விதிவிலக்கு இல்லை. தவறு செய்பவர் அதற்கு பதில் சொல்லியாக வேண்டும். அதில் அரசுக்கும் பொறுப்புண்டு. நாட்டிற்கு சிலவற்றிலிருந்து விடுபடும். “இறையாண்மை கவசம்” என்பது இதற்கு கிடையாது.[7]

### 3) அரசுப் பணியாளர்கள் செய்யும் தவறான செயல்கள்:

அரசு பணியாளர்கள் சட்டத்தை மீறுபவர்களாக இருக்கும்போது அரசியலமைப்பு சட்டத்தின் குரலாகவும் நாட்டின் உணர்ச்சியை அறியும் தன்மையுடையதாகவும் இருக்கின்ற நீதிமன்றம் சட்டமீறல் செயல்களில் ஈடுபடுபவர்களை ரிட் மூலம் தண்டித்தும் மனித உரிமையை மதித்து மீட்டுத்தருவதாகவும் இருக்கிறது.[8]

“அரசின் செயல்பாடாக இல்லாதபட்சத்தில்[9] அரசின் அலுவலர்கள் அவர்கள் செய்த தவறுக்காக இழப்பீடு தர வேண்டியிருக்கும். பொது அலுவலகத்தில் பணி செய்யும் மக்களுக்காக பணியாற்றும் அரசு அதிகாரி தன் வேலை தவறானது என்று தெரிந்தே தவறு செய்யும்போது அதற்கான இழப்பீடை தர வேண்டியவர் ஆகிறார்.[10] சிவில்

மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்பாடு (International Covenant on Civil and Political Rights) **1966** பிரிவு **9(5)** இப்படிச் சொல்கின்றது:–

“சட்டமுறைப்படி அல்லாது எவரொருவர் கைது செய்யப்பட்டாலோ அல்லது சட்டமுறைப்படி அல்லாது அடைத்து வைக்கப்பட்டாலோ அமல்படுத்தத் தக்கதான இழப்பீடு பெற உரிமை உடையவர்”.

'Tort' என்னும் சொல் லத்தீன் வார்த்தையான 'tortious' என்னும் வார்த்தையிலிருந்து மருவி உருவானது. அப்படி என்றால் திரித்தது அல்லது நேராக இல்லாமல் வளைத்தது என்று பொருள். பொதுவாக tort என்றால் “தவறு” என்று பொருள் தரும்.[11] அது தரும் பொருள் அல்லது அர்த்தம் என்னவென்றால் ஒரு சொல் செயல் வடிவம் பெறும்போது உரிமை அல்லது சரியான செயல்பாடு ஆகுவதற்கு பதிலாக தவறான செயல்பாடாகவும் உரிமையைப் பாதிக்கின்ற விதமாகவும் ஆகிவிடுவதை குறிக்கின்றது. Torts அல்லது தவறுகள் மூன்று வகையானவை. சட்டப்படி ஒருவர் மற்றொருவருக்குச் செய்ய வேண்டிய கடமையை செய்யாமல் இருப்பதும் அல்லது ஒருவர் சட்டப்படியான தன் கடமையை பொது மக்களுக்கு செய்யாமல் தவறுவதும் ஆகும். முதல் வகை தவறுகளானவை:–

(a) ஒரு நபருடைய உடலுக்கு செய்யும் தீங்கு உதாரணமாக பலத்தகாயம் அல்லது அவருடைய மதிப்புக்கு, சுதந்திரத்திற்கு செய்யும் அவமானம் கேடு அல்லது தவறாக சிறையிலோ காவலிலோ அடைத்து விடுதல் போன்றன.

(b) சொத்துக்கு விளைவிக்கும் கேடு, உதாரணமாக அதனின்று வெளியேற்றுதல், அத்துமீறி பிரவேசித்தல், தொந்தரவு தருதல், வீணாக்குவது, குறைத்துவிடுவது, தொல்லை தருவது போன்றன.

(c) தனிநபர் சொத்துக்கு கேடு விளைவிப்பது உதாரணமாக (i) சட்டத்துக்கு புறம்பாக தூக்கி செல்லுதல், எடுத்து வைத்துக் கொள்ளுதல், சேதம் விளைவித்தல் (ii) காப்புரிமையை அழித்தல், தொழில் அடையாளத்தை அழித்தல் போன்றன.

(d) பெயருக்கு அவதூறு இழைத்தல்.

(e) சேவையை நிறுத்திவிடுதல். இரண்டாம் வகையானது செய்யாமல் ஏமாற்றிவிடுவது மற்றும் செய்யாமல் விடுவது ஆகியன. மூன்றாம் வகையில் பொது மக்களுக்கு செய்ய வேண்டிய கடமைகள் செய்யாததால் தனி நபருக்கு ஏற்படும் இழப்பு சம்மந்தமான வழக்குகள் இதனுள் அடங்கும்.[12] சட்டத்தால் செய்யக் கடமைப்பட்டு செய்யாமல் தவறவிட்ட கடமையினால் ஏற்பட்ட தவறுக்காக பொறுப்பு இப்படி நேர்ந்த தவறினால் ஏற்பட்ட பாதிப்புக்கு ஆன இழப்பிற்கு ஈடுசெய்வது ஆகும்.[13]

**சிறை அல்லது காவல் நிலையத்தில் இறப்பதென்பது சட்டத்தின் வழி ஆட்சி நடைபெறும் ஒரு பண்பட்ட சமூகத்தில் நிகழக் கூடிய மிக மோசமான குற்றமாகும்.**

நிர்வாகச் செயல்கள் சட்டத்தால் பெறப்பட்ட அதிகாரத்திற்குப் புறம்பானதாக இருக்கும்போது, அது செய்ய வேண்டியதை செய்யாமல்விட்டதற்கு மட்டுமல்லாமல் பிறவற்றுக்கும் இழப்பீடு பெறத் தக்கதாகும். கீழ்கண்ட சூழ்நிலை உருவாகும்போது,

(a) ஒத்துக் கொள்ளப்பட்ட ஒரு தவறான செயல், உதாரணமாக அத்துமீறி நுழைதல், தவறாக கைது செய்து காவலில் வைத்தல், கவனக்குறைவால் தவறு செய்துவிடுவது

(b) தவறான நோக்கத்தோடு செய்யப்பட்டிருந்தால், உதாரணமாக காயமேற்படுத்தும் ஆசை, பொருந்தாத காரணங்களுக்காக தாக்குதல் போன்றன.

(c) அந்த செயல் செய்வதற்கு தமக்கு அதிகாரமில்லை என்று தெரிந்தும் கேள்விக்குரிய ஒரு செயலை செய்வது தெரிந்தும் தெரியாதது போல் பாரா முகமாய் இருப்பது.

(d) பொதுச் சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட்ட செயல் சட்டமே அச்செயலுக்கு இழப்பீடு உள்ளதாய் அறிவித்தல் போன்றன.[14]

### 4) அரசியலமைப்பு சட்டத்திற்கான நீதிமன்றங்களே பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு வழங்க பணிக்க வேண்டும்:

இந்த நீதிமன்றமும் உயர்நீதிமன்றங்களும் குடிமக்களின் சிவில் உரிமைகள் பாதுகாவலர்களாக இருப்பதனால் தாமே இழப்பீடு வழங்க அரசைப் பணிப்பதற்கு அதிகாரங்கள் இருக்கிறது. தங்கள் அதிகார வரம்பு எல்லையிலேயே அரசியலமைப்புச் சட்டப் பிரிவு **32** மற்றும் **226**ன்படி பாதிக்கப்பட்டவருக்கோ அல்லது அவரின் வாரிசுதாரருக்கோ பிரிவு **21**ன் கீழ் அரசு மற்றும் அரசு அதிகாரிகளால் நேர்ந்த அடிப்படை உரிமை மீறல்களுக்கு சிவில் மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் வழி இருந்தாலும் இல்லையென்றாலும் இழப்பீடு வழங்க

ஆணையிடலாம். அரசு தம் அதிகாரிகளால் நேர்ந்த தவறுக்கு இழப்பீடு வழங்கும் கடமை அரசுக்கு உண்டு. பிரிவு 32 அல்லது 226ன் கீழ் இழப்பீடு ஒரே ஒருமுறைதான் வழங்க முடியும் அதுவும் வேறெந்த சட்டத்தின் வழியாகவும் நிவாரணம் பெற வழியில்லை என்ற சந்தர்ப்ப சூழ்நிலைகளில்.[15]

**5) சிறை அல்லது காவல் நிலையத்தினுள் நிகழ்ந்த சித்ரவதை என்பது மாறுபாடில்லாத வகையில் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.**

இழப்பீட்டிற்கு ஆணையிடுவதற்கு முன் நீதிமன்றம் பின்வரும் கேள்விகளை ஆய்ந்தறிந்து முடிவு செய்ய வேண்டும்.

(a) பிரிவு 21ன்படி உரிமை மீறல் நிகழ்ந்தது என்பது தெளிவாகவும் வெளிப்படையாகவும் தெரிவதோடு மாற்றுக் கருத்துக்கு இடமில்லாமல் இருக்க வேண்டும்.

(b) உரிமை மீறல் பெரிய அளவிலும் நீதிமன்றத்தின் மனசாட்சியை உலுக்கும் விதத்திலும் இருக்க வேண்டும்.

(c) உள்ளே நடந்த சித்ரவதையால் சாவு நிகழ்ந்தது அல்லது மருத்துவ அறிக்கையின் ஆதாரத்துடனும் காயங்கள் அல்லது வடுக்கள் வெளியே தெரியும்படியும் அல்லது ஊமை காயம் ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

இதுபோன்ற எந்த சாட்சியங்களும் தடயங்களும் இல்லாமல் ஒரு நபரின் வாய்மொழி அறிக்கை மூலம் மற்றும் மருத்துவ ஆய்வறிக்கை ஆதாரமின்றி மிகைப்படுத்தப்பட்ட விதத்தில் அமைந்திருக்கிறது என்று நீதிமன்றங்கள் கருதினால் பொதுச் சட்ட நிவாரணத்தின் பிரிவு 32 அல்லது 226ன் கீழ் இழப்பீட்டுக்கு உத்தரவிடாமலிருக்கலாம். ஆனால், பாதிக்கப்பட்ட நபரை வேறு ஏதேனும் பொருத்தமான சட்டத்தின் கீழ் இழப்பீடு பெற மனு செய்யுமாறு (சிவில் அல்லது குற்றவியல் நடைமுறைச் சட்டம்) கேட்டுக் கொள்ளலாம்.[16]

**6) சிறை அல்லது காவல் நிலையத்தில் இறப்பு:**

சிறை அல்லது காவல் நிலையத்தில் இறப்பதென்பது சட்டத்தின் வழி ஆட்சி நடைபெறும் ஒரு பண்பட்ட சமூகத்தில் நிகழக் கூடிய மிக மோசமான குற்றமாகும்.[17] காவல் நிலைய சித்ரவதை மற்றும் இறப்புகளில் நேரடியான சாட்சியங்கள் கிடைப்பது கடினம். மேலும் அவர்களிடம் இருந்தபோது எப்படி இறக்க நேர்ந்தது என்பதை அவர்களேதான் தெரிவிக்க இயலும்.[18] காவல் நிலைய சித்ரவதை மற்றும் சிறையில் நடக்கும் சாவு இவற்றில் மற்ற காவலர்களின் கூற்றும் கிடைக்காது. இங்கு மிகையான சாட்சிகளை தேடி அலையாமல் முடிவுக்கு வரலாம்.[19]

இது தற்கொலையாக இருக்கும்பட்சத்தில் பொதுச் சட்டத்தின் அடிப்படையில் அரசாங்கம்தான் இழப்பிடுதன்னை இறந்தவரின் வாரிசுதாரர்களுக்கு கொடுக்க வேண்டும். காவலரின் அசட்டையான செயல் மற்றும் கவனக்குறைவுதான். தற்கொலைக்கு தூண்டுதல் என்று சொல்லி தண்டிக்க முடியாது. பொதுச் சட்டத்தின் அடிப்படையில் முடிவு வேறானதாயிருக்கும்.[20] விசாரணைக் கைதி சிறைக்காவலில் இருக்கும்போது அவரின் உயிர் வாழும் உரிமையை காப்பது காவல் அதிகாரிகளின் அத்தியாவசிய கடமையாகும். அக்கடமை தவறும்போது அவர்கள் இழப்பீடு தரவேண்டும். எனவே, ரூ.2,50,000 அவர் வாரிசுதாரர்களுக்கு வழங்குமாறு ஆணை பிறப்பிக்கப்படும்.[21]

மாநில அரசு சிறைக்குள் இருக்கும் கைதிகளின் பாதுகாப்பு மற்றும் உயிருக்கு பொறுபேற்க வேண்டும். ஏனெனில் மாநில அரசு அதிகாரிகளே பொறுப்பில் உள்ளனர். ஒரு 30 வயதுக்கு மேற்பட்ட கைதி ஒருவரை தலைமை வார்டன் தலையில் அடிக்க கைதி சிறையில் இறந்ததால் மாநில அரசு இறந்தவரின் மனைவிக்கு ரூ.2,50,000 இழப்பீடு கொடுக்க பணித்தது. ஒரு வழக்கில் காவல்துறை ஏழைகளை காவல் நிலையத்துக்கு கூட்டமாய் அழைத்து வந்து வேலைகள் இலவசமாகச் செய்ய சொன்னது. ஊதியம் கேட்டபோது அவர்களை அடிக்க துவங்கியதில் ஒருவர் உயிரிழந்தார். உடல் அவர்கள் வசம் வழங்கப்பட்டது. உச்சநீதிமன்றம் காவல்துறை ஆணையம் ரூ.50,000 வழங்குமாறு பணித்தது.

**7) சட்டத்திற்கு புறம்பாக அடைத்து வைத்தல்:**

ஒரு நபர் சட்டத்துக்குப் புறம்பாக காவல் நிலையத்தில் அடைக்கப்படும்போது பிரிவுகள் 21 மற்றும் 22(2) படி உச்சநீதிமன்றம் பண இழப்பீட்டிற்கு மாநில அரசை பணிக்கலாம்; பிரிவு 32ன் கீழும்,[24] உரிமை மீறல் நிச்சயமாகும்போது அடைத்து வைக்கப்பட்டவருக்கு இழப்பீடு பெற உரிமையுண்டு.[25]

**8) கையில் விலங்கு போடுதல்:**

ஒரு விசாரணைக் கைதி கையில் விலங்கிடப்பட்டு வீதிகளில் ஊர்வலமாக காவல் துறையினரால் அழைத்துச் செல்லப்பட்டதால் நீதிமன்றம் இழப்பீடு அவருக்கு தர உத்தரவிட்டது.[26]

**9) சிறைக் கைதியை சித்ரவதை செய்வது பிரிவு 21ன் படி உரிமைமீறல்:**

அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 21ன்கீழ் உள்ள உரிமைகளை, குற்றவாளி விசாரணை கைதி, சிறைக் கைதி என்னும் காரணத்துக்காக மறுக்கப்படக்கூடாது. அவ்வாறு மறுக்கப்படும்போது சட்டத்தின்படி இருக்க வேண்டும். எந்த வடிவத்தில் நிகழ்ந்தாலும் சித்ரவதை, இழிவுப்படுத்துதல் மற்றும் மனித தன்மையற்ற நடவடிக்கைகள் யாவும் விசாரணையின்போது நிகழ அனுமதியில்லை.[27] குற்றம் நடந்ததாகச் சந்தேகம் எழும்போது அறிவியல் அடிப்படையிலான விசாரணை நடக்க வேண்டுமேயல்லாது பிற வழிகள் கூடாது. தகவலைப் பெறும் நோக்கத்திற்காக கொடுமைப்படுத்துதல், மூன்றாந்தர நடவடிக்கைகளை அனுமதிக்க முடியாது. சாதாரண குற்றவாளிபோல நடத்த முடியாத போதும் சட்டத்தால் ஏற்றுக்கொள்ள முடியாத செயல்களின் வழி மூலம் தகவல்களைப் பெற முடியாது.[28]

அப்பாவிப் பொதுமக்களின் அடிப்படை மனித உரிமை மீறல்களுக்கு காரணமான பயங்கரவாதிகள் சட்டத்தின்படி தண்டிப்பட வேண்டியவர்கள். அதற்காக அவர்கள் மீதான மனித உரிமை மீறல்களை சட்டம் அனுமதித்த வகையில் அல்லாமல் நியாயப்படுத்த முடியாது.[29]

## 10) புதிய கருவிகளை உருவாக்க மற்றும் புதிய நிவாரணங்கள் வழங்க நீதிமன்றங்கள் முயற்சிக்க வேண்டும்:

தனிநபர் சுதந்திரத்தை உத்தரவாதப்படுத்துவதில் நம் நடவடிக்கைகள் சிறப்பாக இருக்கின்ற போதிலும் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தாமல் தடுக்கும் நடவடிக்கைகள் அப்படி இல்லை. செயலுறுத்து நீதிப் பேராணை (Mandamus) நெறிமுறை உணர்த்தும் நீதிப் பேராணை போன்றவைகள் அவரின் செயல் முறைகள் போன்றன. நம் புதுயுகத்துக்கு சுதந்திரம் பெற போதுமானதாக இல்லை. அரசு பணிகள், தடுப்பாணை போன்றவைகளுக்கு ஏற்ப அவைகள் காலத்திற்கு ஏற்ப சரி செய்யப்பட வேண்டும். இது நாடாளுமன்றத்தின் வேலை அல்ல. நீதிமன்றங்களின் வேலை. செய்ய வேண்டியுள்ள மிகப்பல பெரிய வேலைகளில் இதுதான் மிக முக்கியமானது.[30] சட்டம் என்பது வளர்ச்சிப் போக்கில் நிகழும் மாற்றங்களுக்கு ஏற்ப வளர வேண்டியது பொது சட்ட முறையின் கொள்கைகளில் அவ்வளர்ச்சி கொண்டுவரப்பட வேண்டும்.[31] உயிர் வாழ்தல் மற்றும் தனிநபர் சுதந்திரம் ஆகிய அடிப்படை உரிமைகள் பறிக்கப்படும்போது நீதிமன்றம் ஏதும் செய்ய முடியாத நிலையிலில்லை. புதிய கருவிகளை உருவாக்கிடவும் புதிய நிவாரணங்களை வழங்க அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும்போது முயற்சிக்க வேண்டும். பொருத்தமான நடவடிக்கைகள் நிவாரணம் அளிக்கத் தேவையான விசயங்கள் போன்றவை அடிப்படை உரிமைகளை காத்திட பயன்பட வேண்டும்.[32] மிகுந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ள உச்சநீதிமன்றம் பிரிவு 32ன்படி முழுமையான நீதி கிடைத்திட பண இழப்பீடு அதிலும் வேறு நீதிமன்ற துணை இல்லை எனும்போது புதிய வடிவில் முயற்சிக்க வேண்டும்.[33]

## 11) இழப்பீடு வழங்க நிதிமன்றம் ஆணை பிறப்பித்தல்:

இழப்பீடு வழங்குவதற்கான பொது விதிகளை பொதுச் சட்டத்திலிருந்து எடுத்துக் கொள்ளலாம். அவைகள் பிரிவு 21, அரசியலமைப்புச் சட்டம் சொல்வது போல உரிமை மீறல் வெளிப்படையாகத் தெரியும் வண்ணம் இருப்பது; பெரிய அளவிலானதும் நீதிமன்றத்தின் மனசாட்சியை உலுக்குவதாகவும், இவையெல்லாவற்றோடு உரிமை மீறல் தெளிவாகவும் மாற்றுக் கருத்து தோன்றாத விதத்திலும் இருத்தல்.[34] ஒரு நீதிமன்றம் யதார்த்தத்தை கண்டும் காணாதது போலவும் மனசாட்சியை மூடிக்கொண்டு விடவும் முடியாது. தவறு செய்தவரை தண்டித்துவிடுவதால் மட்டும் பாதிக்கப்பட்டவரின் குடும்பத்துக்கு ஆறுதல் கிடைத்துவிடாது; இழப்பீட்டிற்கான சிவில் நடவடிக்கை நீண்ட காலமாகும்; சிக்கல் நிறைந்ததும் கூட. எனவே, பணமாக விரைவில் இழப்பீடு கிடைக்கச் செய்வதுதான் உபயோகமாய் இருக்கும். அதிலும் இறந்துவிட்டவர்தான் குடும்பத்தில் உணவளிப்பவராய் இருந்தால்[35] பிரிவு 21–ன் கீழ் 'உயிர் வாழ்தல்' எனும் அடிப்படை உரிமை மீறலுக்கு எதுவும் இழப்பீடு இல்லை. பொதுவாய்க் கூறிவிட முடியாது. புதிய வழிகள் கண்டுபிடிக்கப்படத்தான் வேண்டும். சூழ்நிலைக்கு ஒப்ப சட்டத்தின் வழியிலான ஆட்சியை நிறுவ முயற்சிகள் தேவை.[36]

இழப்பீடு வழங்கப்படுவதன் நோக்கம் பாதிக்கப்பட்டவரின் இழப்பீட்டை சமன் செய்ய மட்டுமல்ல தவறு செய்ய காரணமாய் இருந்தவரை தண்டிக்க அதற்கு பொறுப்பேற்க அரசை நிர்பந்திக்க எனப்பலவாகும். உரிமை பாதுகாப்பை உறுதிபடுத்த வேண்டிய அரசே தவறியதற்காக[37] விரிவான அதிகாரங்கள் இருந்தும் உரிமை பறிபோனதை "ஈடு செய்யக்" கோர தனி நபருக்கு உரிமையுண்டு. ஆணை வழங்க, வழிகாட்டி நீதிமன்றம் நெறிப்படுத்தப்பட வேண்டும்.[38] பொதுச் சட்டத்தில் இழப்பீடு என்பது அடிப்படை உரிமை மீறலுக்கு வழங்க ஆணையிடப்படுவது உரிமையை அங்கீகரித்தாலும் காக்கத் தவறிய கடமையை வலியுறுத்தவும் ஆகும். இது சிவில் உரிமையை நிலைநாட்ட உள்ள தனிச் சட்டத்திலிருந்து வேறுபட்டது (TORTS)

## 12) இது பொதுச் சட்டம் வழங்கும் நிவாரணம்:

பொதுச் சட்டத்தின் நோக்கம் பொது மக்கள் அதிகாரத்தை நெறிப்படுத்துவது மட்டுமல்ல குடிமக்களுக்கு அவர்கள் ஒரு சட்ட அமைப்பின்கீழ் அதாவது அவர்களின் நலமும் உரிமையை காக்கும் அமைப்பின் கீழ் வாழ்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்காகவும்தான். எனவே, நீதிமன்றம் நிவாரணத்தை வடிவமைப்பது "இழப்பீடு"

எனும்போது பிரிவு 32 அல்லது 26 ஆகிய அரசியலமைப்பு சட்டத்தில் அடிப்படை உரிமைகள் காப்பதற்காக பொதுச் சட்டத்தின் வழி தவறிழைத்தவரினை தண்டிக்கும் முறையிலும் கடமை தவறிய அரசை அத்தவறுக்கு பொறுப்பேற்க வைப்பதற்கும் தான்.[40]

தனிச்சட்ட நடவடிக்கையைவிட பொதுச் சட்ட நடவடிக்கையின் நோக்கம் வேறானது. பணமாகக் கொடுக்கப்படும் நிவாரணமானது மாதிரியாகக் கொள்ளதக்க இழப்பீடாக பிரிவு 32ன் கீழ் உச்சநீதிமன்றமும் அல்லது பிரிவு 226ன் கீழ் உச்சநீதிமன்றமும் வழங்கும் ஆணையாகும். இது அரசியல் அமைப்புச் சட்டம் வழங்கும் பொதுச் சட்ட நிவாரணம் மேலும் அடிப்படை உரிமைப் பாதுகாப்பு வழங்கப் பொறுப்பளிக்கும் விதமாக வழங்கப்படுவது.[41] இது தனிச் சட்டத்தின்கீழ் தவறாக கைது செய்து அடைக்கப்பட்ட குற்றத்திற்காக கேட்கப்படும் உரிமைக் கோரிக்கை அல்லது அதன்படி கிடைக்கும் இழப்பீடு பெரிய அளவிலும் சமூக கௌரவத்தை மதிப்பை இழந்ததற்காகவும் இருப்பது பொதுச் சட்ட பிரிவில் வழங்கப்படும் இழப்பீடு அடிப்படை உரிமையான தனி மனித சுதந்திரத்தை இழந்ததற்காக மட்டும்தான்.[42]

### 13) ரிட் நீதிமன்றம் இழப்பீடு வழங்க உத்தரவிடலாம்:

ஒரு நபர் நீதிமன்றத்துக்கு உரிமைக் கோரிக்கையுடன் வந்து தான் தவறாகக் கைது செய்யப்பட்டதன் மூலம் அரசியலமைப்புச் சட்டம் மற்றும் சட்ட உரிமைகள் அத்து மீறலாய் நடந்தது என்று சட்ட உரிமை விண்ணப்பம் வைக்கும்போது அவரை விடுதலை செய்தால் மட்டும் ஆக்கிரமிப்பு செய்தது சரியாகிவிடாது. சரியான வழக்குகளில் பணமாக இழப்பீடு வழங்கித்தான் ஆக வேண்டும். பாதிப்படைந்தவருக்கு[43] அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டதற்கு அரசின் நடவடிக்கை காரணமாகும்போது பொதுச் சட்டத்தின் கீழ் இழப்பீடு வழங்கப்பட மேல் நீதிமன்றங்களால் முடியும்பிரிவு 32 மற்றும் 226 அரசியல் அமைப்புச் சட்டத்தின்கீழ் இதற்கு சிவில் சட்டத்தில் வழக்குப் பதியவோ பதியாமலோ இருப்பது என்பது அவசியமான ஒன்றல்ல.[44]

பாதிக்கப்பட்ட ஒரு நபர் உயர்நீதிமன்றத்தை பிரிவு 226–ன் கீழ் இழப்பீடு கோரி அணுகும்போது, மாற்றுக் கருத்தில்லாத வகையில் உண்மைகள் எதிர்மனுதாரர் மீது வைக்கப்படும்போது இழப்பீடை அளவிட்டு நிவாரணத்துக்கு கட்டளையிட முடியும்[45] பிரிவு 32ன்கீழ் உச்சநீதிமன்றத்திலும் பிரிவு 226ன் கீழ் உயர்நீதிமன்றத்திலும் இழப்பீடு பெறுவதென்பது அடிப்படை உரிமை இழப்பிற்காக முக்கியப் பொறுப்பாளியாக அரசு ஆக்கப்படுவது பொதுச் சட்டத்தின்படியாகும். எனவே, இச்சட்டத்தின் கீழ் அரசாங்கம் விலக்கு பெற முடியாது. எனினும் தனிச் சட்டமான தவறு (TORT) என்பதன் கீழ் அரசு விலக்கு (தற்காப்பு) பெற முடியாது.[46]

பிரிவு 21ன்படி உயிர் வாழ்தல் மற்றும் தனிநபர் சுதந்திரம் என்பது பாதிக்கப்பட்டால் அதாவது சட்டப்படி அல்லாமல் கைது செய்து அடைக்கப்பட்டதிலிருந்து விடுதலை செய்யப்படுவது மட்டும் எனில் நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கலாம். அதைச் சொல்லும் வழி என்னவெனில் இழைக்கப்பட்ட தவறுக்கு பணமாக இழப்பீடு வழங்கப்பணிப்பதாகும். நாகரீகம், பண்பாடு என்பவை இந்நாட்டிலிருந்து அழிந்துவிடவில்லை என்பதற்கு அடையாளமாய் தனிநபர் உரிமைகள் மதிக்கப்படுவது. அது ஜனநாயகத்திற்கு அடித்தளமாகும். எனவே, அரசாங்கம் அதன் அதிகாரிகளால் விளைவித்த தீங்குக்கு இழப்பீடு தருவது. அவ்வதிகாரிகளுக்கு இவ்வாறு தஞ்சம் தருவதை எதிர்க்கவும் அரசு செய்யலாம்.[47]

எனினும் அரசுப் பணியாள் செய்யும் தவறுக்கு அரசைப் பொறுப்பாளி ஆக்குவது பிரிவு 21ன் கீழ் என்றாலும் எவ்வளவு இழப்பீடு தருவது என்பது வழக்குகளின் தன்மை மற்றும் சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்ததாகும்.[48] அடிப்படை உரிமைகளை கட்டிக் காப்பாற்ற வேண்டிய அரசு அதிகாரிகளை தட்டிக் கேட்பது மற்றும் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதென்பது செய்ய வேண்டிய கடமையைச் செய்யத் தவறியமைக்காவும் கூட.[49]

ஒரு வழக்கில் இரண்டு பெண்களை அவர்கள் குடியிருக்கும் வீட்டின் சொந்தக்காரர் காவல் அதிகாரியின் உதவியோடு (காவல் நிலையத்தின் தலைமை) அதிகாரி அடித்துவிட்டார். இந்த வழக்கில் உச்சநீதிமன்றமானது தவறான பணியைச் செய்த அரசு பணியாளரின் குற்றத்துக்கு அரசாங்கம்தான் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டது.[50]

### 14) அரசுப் பணியாளர் எப்போது பொறுப்பாளியாக்கப் படுவதிலிருந்து விளக்கி வைக்கப்படுவார்:

அரசு பணியாளர் அரசியலமைப்பு சட்டத்தின்படி அரசு சட்டப்படி கட்டளையிட்ட ஒரு பணியை நிறைவேற்றும்போது ஏற்படும் தனிநபர் பாதிப்புகளுக்கு பொறுப்பேற்க முடியாது. ஆனால், அதே சமயத்தில் எல்லா வகையான செயல்பாடுகளுக்குமோ அதுபோன்று கவசம் இருப்பதாகவோ அல்லது செய்யத் தவறிய கடமைகளுக்காகவோ நீதிமன்ற பார்வைக்கு கொண்டுவரப்படும்போது இந்தப் பாதுகாப்பு கிடைக்க வேண்டும் என்று சொல்ல முடியாது. இதில் கவனத்தில் கொள்ள வேண்டிய விசயம் என்னவென்றால் ஒரு அரசாங்கப் பிரதிநிதி பணியாற்றும்போது எடுத்துக் கொள்ள வேண்டிய சட்டத்தின் கட்டளைப்படி அதிகாரத்தை செலுத்தினாரா இல்லையா என்பதுதான்.

இல்லையென்னும்போது தவறிழைத்தற்கான பொறுப்பாக கருதப்படும்.[51]

**அரசியலமைப்புச் சட்டம் 21ன் அடிப்படையில் காப்பது அரசு அதிகாரிகளின் கடமை ஆகும். அதில் அவர்கள் தவறும்போது அவர்களுக்காக அரசு பொறுப்பேற்க வேண்டும்.**

### 15) அரசாங்க அதிகாரம் என்பது விதி விலக்காகாது:

அரசன் எந்தத் தவறும் செய்ய முடியாது என்னும் ஆங்கிலப் பழமொழி வந்ததன் அடிப்படையில் வந்தது இது. ஆனால், அதே இங்கிலாந்தில் கூட இந்த பாதுகாப்புக் கவசம் கூட முடியரசின் நடவடிக்கைகள் சட்டம் 1947ல் மாறத் தொடங்கியது. இங்கிலாந்தின் அரசன் இப்போது முன்பு போல் முழு பாதுகாப்புப் பெற முடியாது என்பதோடு அரசின் அதிகாரிகள் பணியாளர்கள் செய்யும் தவறுக்கு அரசே பொறுப்பாளியாகின்றது.[52] அரசு பொறுப்பில்லை எனும் தற்காப்பு என்பது அடிப்படை உரிமைகள் உத்தரவாதத்திற்கு பொருந்தாது, அன்னியமானது என்பதால் அரசியலமைப்புச் சட்ட நிவாரணத்தில் அத்தகைய தற்காப்பு சாத்தியமானதல்ல[53] பரம்பரை அரசு அதிகாரங்களான சட்டம் இயற்றுதல், நிதி நிர்வாகம், சட்ட ஒழுங்கை பராமரித்தல், குற்றங்கடிதல், போருக்கு செல்லுதல், அமைதி உடன்படிக்கை மற்றும் அது சம்மந்தமானவைகள் ஆகும். அரசின் அதிகாரங்கள் அல்லாதவைகள் என்பதிலான வேறுபாடு தெளிவாக இல்லாதிருந்தது. எனவே, நீதி பரிபாலனம், சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரித்தல் குற்றங்கடிதல் போன்ற அடிப்படை விசயங்களாததால் அரசு இவைகளுக்கு பாதுகாப்பு இல்லை.[55]

அரசன் தப்பு செய்ய முடியாது அல்லது தவறுகளுக்கு அரசு பொறுப்பேற்காது என்பது இந்திய நீதித்துறையில் இடமில்லை. ஏனெனில், அதிகாரம் அரசனிடமில்லை மக்களிடமிருக்கிறது. அவர்கள் தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து அரசாள அனுப்புகின்ற காரணத்தால் அவர்கள் அரசியலமைப்பு முறைப்படி செயலாற்ற வேண்டும். இல்லையென்றால் மீறலுக்கு அவர்கள் பதில் சொல்லியாக வேண்டும்.[56]

நாகரீகமான சமுதாய அமைப்பில் ஒரு நிர்வாகியாக இருப்பவர் மக்களிடம் விளையாட்டுத்தனமாக நடந்துகொண்டுவிட்டு அரசனின் பிரதிநிதிபோல் ஆட்சியாளன்போல் நடந்ததால் இழப்பீடு பொறுப்பில்லை என்று சொல்ல முடியாது. பொது நலம் என்பது சமூக கட்டமைப்பின் மாற்றத்துக்குப்பின் மாறிப் போயிருக்கிறது. எந்தசட்ட அமைப்பும் அல்லது அரசியலமைப்பும் இன்று அரசாங்கம் சட்டத்துக்கு அப்பாற்பட்டது என்று கூறி தனிநபரின் சொத்துக்கு சேதம் விளைவிக்கவோ அதிகாரி அசட்டையாய் இருந்ததால் நேர்ந்த இழப்புக்கோ நிவாரணம் இல்லையென்று சொல்லிவிட முடியாது. உண்மை, திறமை மற்றும் கண்ணியம் ஆகிய அரசுக் கொள்கைகள் இப்போது சமூகச் சுழற்சியின் காரணமாக இப்போது சுதந்திரம், சமத்துவம் மற்றும் சட்டத்தின் வழி ஆட்சி என்றாகியிருக்கின்றன.

நவீன சமூகச் சிந்தனை முற்போக்குச் சமூகத்தினில் நீதியின் போக்கு சர்வாதிகாரப் போக்குக்கு எதிராக திரும்பி அரசுக்கடமையை வலியுறுத்தத் தவறும்போது அதற்கும் நிவாரணம் வழங்க கோருகிறது. எனவே, அரசின் துறைகளை மிகக் கடுமையாகப் பிரித்து ஆட்சியாளர் அல்லது ஆட்சியாளர் அல்லாதோர் என்றோ அரசாங்கம் அல்லது அரசாங்கமற்றது என்றோ சொல்லிவிட முடியாது. அது இப்போதைய சட்ட இயலுக்கு மாறானது. அரசாள்வதன் காரணமாக அரசாங்கத்திற்கு அசாதாரண அதிகாரம் தேவை என்பதில் சந்தேகமில்லை. இருந்தபோதிலும் அரசு அதிகாரி தங்களிஷ்டப்படி நடந்து கொள்ளவோ சாதாரண மனிதனை துச்சமாக மதிக்கவோ அதிகாரி என்று சாக்கு வைத்து அதிகார துஷ்பிரயோகமாகவோ சட்டத்துக்கு எதிராக நடந்து கொண்டுவிட முடியாது.

அரசின் அதிகாரங்கள், அதிகாரிகளின் கடமைகள் மற்றும் குடிமக்களின் உரிமைகள் ஆகிய எல்லாமும் சமரசம் செய்து கொள்ள வேண்டியதொன்றாகும். அப்போதுதான் சட்டத்தின் ஆட்சி என்பது ஆட்சியின் நலத்தில் ஆட்டங்காணாமல் இருக்கும். அமெரிக்காவில் கூட ஆட்சியின் இறையாண்மை என்பது அமெரிக்க கூட்டு அரசாங்கத்தின் பொருளாதார நன்மை கருதியோ நடைமுறை வசதி கருதியோ அரசின் பொறுப்பற்ற தன்மையைவிட அரசின் பொறுப்புடைமைக்கே முக்கியம் தரப் பெற்றிருக்கின்றது.

நல்ல அரசு என்பது நாட்டின் எல்லைப் பாதுகாப்பு மட்டுமல்ல சட்ட ஒழுங்கை பராமரிப்பது என்பது மட்டுமல்ல எல்லா மட்டத்திலும் அதாவது கல்வி, வணிகம், சமூகம், பொருளாதார அரசியல் மற்றும் திருமண உறவில் கூட சட்ட ஒழுங்கை மக்களிடம் வலியுறுத்துவதுதான். அரசாங்கம் மற்றும் அரசாங்கமில்லாதது என்ற வேறுபடுத்துதல் அல்லது பிரித்துக்காட்டும் கோடு அழிக்கப்பட்டுவிட்டது. எனவே நீதி பரிபாலனம், சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரித்தல், குற்றத்தடுப்பு நடவடிக்கை போன்ற அடிப்படை கூறுகளில் அரசுக்கு இழப்பீடு அற்ற பாதுகாப்பு என்பதைக் கோரிப் பெற

முடியாது.[57]

ஆட்சியாளர் என்ற முறையில் அரசு அதிகாரிகள் அல்லது பணியாளர்கள் செய்யும் தவறுக்கு ஆட்சி பொறுப்பேற்க முடியாது என்னும் கோரிக்கை அரசின் எல்லாப் பொறுப்புகளினின்றும் இருக்க முடியாது. சிறு தவறு என்ற முறையில் பொருந்துமே தவிர அடிப்படை உரிமைகள் மீறல்களுக்கும் பொருந்தாது. எனவே, அரசியலமைப்புச் சட்ட நிவாரணங்களுக்கு அதிலும் பிரிவுகள் 32 மற்றும் 226க்கு பொருந்தாது.[58] எனவே, ஒரு நபரின் உயிர் மற்றும் சுதந்திரம் என்னும் அடிப்படை உரிமை அரசின் செயலால் பாதிப்படையும்போது நீதிமன்றம் இழப்பீடு வழங்கிட ஆணையிடல் வேண்டும். இங்கு அரசியலமைப்புச் சட்டவிதி மீறல் அடிப்படையில்தான் புதிய பொறுப்பு அரசுக்கு தரப்படுகிறதேயன்றி "அரசாள்பவன் பொறுப்பாளியாக முடியாது" என்னும் தத்துவத்தின் அடிப்படையிலல்ல.[59]

### 16) உரிமைக்கு மாறாக அரசின் செயல்பாடுகள் இருந்தாலோ அல்லது செயல்படத்தவறியதால் உரிமை இழந்தால்தான் இழப்பீடு:

ஒருவரின் உரிமை அரசியலமைப்புச் சட்டத்தின்படி ஒருவரின் அடிப்படை உரிமையாகும். அந்த உரிமை இழப்புக்கு அரசின் செயல்பாடு காரணமாக அமைந்திருக்க வேண்டும் அல்லது அரசு செய்யத் தவறிய ஒரு கடமையினால் ஒரு நபருக்கு அடிப்படை உரிமை பறிபோயிருக்க வேண்டும். இந்த சூழ்நிலைகளில்தான் பொதுச் சட்டப்பிரிவுகளின் கீழ் இழப்பீட்டுக்கு நீதிமன்றம் ஆணையிட முடியும்.[60]

### 17) இந்தியக் குடிமகன் அல்லாதவர்களும் இழப்பீட்டுக்கு உரிமையுடையவர்கள் ஆவர்:

நம் நாட்டின் குடிமக்கள் அல்லாதவர்களும் அதாவது அன்னியர்களுக்கும் அதிகாரிகள் தவறாக செய்த பணிகளுக்காகவும் அல்லது செய்ய தவறிய கடமைகளுக்காகவும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் 21ன் கீழ் இழப்பீடு பெறலாம்.[61]

### 18) மற்றவர்களுக்காக அரசாங்கம்தான் பொறுப்பேற்க வேண்டும்:

உயிர் வாழ்தல் மற்றும் தனிநபர் சுதந்திரத்தை பாதுகாப்பது அரசின் முக்கியக் கடமையாகும். அக்கடமையினின்று ஏதேனும் சாக்குபோக்குச் சொல்லி தப்பித்துக் கொள்வது கூடாது. குடிமக்களுக்கான அடிப்படை உரிமைகளை அரசியலமைப்புச் சட்டம் 21ன் அடிப்படையில் காப்பது அரசு அதிகாரிகளின் கடமை ஆகும். அதில் அவர்கள் தவறும்போது அவர்களுக்காக அரசு பொறுப்பேற்க வேண்டும். எனவே, மக்கள் நலம் பேணும் அரசு தன் அதிகாரிகள் கடமை தவறாது பணியாற்றிட பொறுப்பேற்க வேண்டும். எப்படியோ போகட்டும் என்று அதிகாரிகள் கடமையாற்றினால் அரசு பொறுப்பேற்க வேண்டும்.[62] மேலும் கடமையற்ற வேண்டிய அதிகாரிகள் கடமை தவறும்போது அரசு பொறுப்பேற்க வேண்டும். சட்டத்தை தம் கையில் எடுத்துக் கொள்வதன் மூலம் குடிமக்கள் அல்லது தனி நபர் தம் சுதந்திரத்தை இழக்கக் காரணமாகக் கூடாது.[63]

அரசுப் பணிகளில் பணியாளர்களால் தவறு நேரும்போது அரசுதான் அவர்கள் பணியில் நேரும் தவறுகளுக்குப் பொறுப்பேற்க வேண்டும் என்பது சட்டமாகியிருக்கிறது.[64] வேறெந்த பணிநியமனர் எப்படி ஒரு தவறுக்கு பொறுப்பாவாரோ அதேபோல்தான் அரசும் அரசுப் பணியாளரின் பணி நியமனர் என்ற முறையில் தவறுக்குப் பொறுப்பேற்க வேண்டும். இங்கிலாந்தில் அரசன் பொறுப்பேற்க முடியாது என்னும் கருத்து பழைய அடிமைச் சமுதாய அமைப்பில் அரசன் தவறு செய்ய முடியாது என்ற நோக்கில் எழுந்ததாகும்.

எனவே, அரசனின் அரசவையிலேயே அரசனைத் தண்டிக்க முடியாது. இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனி காலந்தொட்டு தவறுகளின் போதோ அல்லது ஒப்பந்த வேலை குறைப்பாடுகளின் போதோ அரசாள்பவர் மேல் வழக்குபோட வழியுண்டு எனவே, இந்தியாவில் அது (அரசன் பொறுப்பேற்க முடியாது) நடைமுறையில் இல்லை.[65]

குற்றம் நிகழ்வதை தடுக்கும் விதத்தில் கைது செய்யப்பட்டு குற்றவியல் நடைமுறைச் சட்டம் 151ன் கீழ் அரசின் காவலில் ஒரு நபர் இருக்கும்போது அடைக்கப்பட்ட நபரை கவனித்துக் கொள்வது அவருக்கு தேவையான வசதிகள் செய்யப்பட வேண்டியதிலிருந்து அரசு தவறி அந்நபரை தவறாக நடத்தியதற்காகவோ அல்லது அந்நபரின் உயிரிழப்பிற்கோ அதற்கு காரணங்கள் மற்றும் சாட்சியங்கள் தெளிவாக தெரியும்போது மற்றவர்களுக்காக (அரசு அதிகாரி அல்லது அரசுப் பணியாளர்) அவரின் தவறுக்கு அரசுதான் பொறுப்பேற்க வேண்டும்.[66]

### 19) தவறு செய்ததற்கான நிவாரணம் என்பதுதான் நோக்கம்:

இழப்பீடு என்பதை அளவிடுவதற்காக அன்றியும் நிவாரணம் மற்றும் இழப்பீடு என்பது பொதுச் சட்டத்தின் அடிப்படையில் இருப்பதற்குக் காரணம் அடிப்படை உரிமைகள் தடுக்கப்படும்போது அதற்கான இழப்பீடு கிடைக்க வேண்டும்.[67]

### 20) இழப்பீடு வழங்கப்பட்ட ஆணை பிறப்பிக்கப்பட்ட காரணத்துக்காக பாதிக்கப்பட்டவர் உரிமையியல் நீதிமன்றத்தை அணுகுவதை தடுக்க முடியாது:

இழப்பீடு வழங்க ஆணை பிறப்பிப்பது (பொதுச் சட்ட நிவாரணத்தின் கீழ்) என்பது உரிமை இயல் நீதிமன்றத்தில் மேற்கொண்டு நிவாரணம் பெறுவதை தனிநபர் உரிமை நிவாரணத்தின் கீழ் தடை செய்யாது, மேலும் குற்றவியல் நீதிமன்றம் உரிமையியல் நீதிசட்ட நடவடிக்கை மூலம் பிரிவு **357**ன் கீழ் இழப்பீடு ஆணை வழங்குவதையும் தடை செய்யாது.[68]

## Reference:


1. Justice D. Murugesan in Tamil Sakthi v. State of T.N. & Ors., 2010 CIJ 245 Mad(1)
2. Smt. Nandhini Satpathy Vs. PIL. Dani & Anr., AIR 1978 SC-1025, 1978-SCC-2-424
3. D.K.Basu v. State of West Bengal, AIR 1997 SC 610:1997 Cri LJ 743
4. BhimSingh v.State of Jammu & Kashmir, 1985 (4) SCC 677 : 1986 Cri LJ 192
5. D.K. Basu Vs. State of W.B., AIR 1997 SC – 610, 1997-SCC-1-416
6. D.K. Basu Vs.State of West Bengal, AIR 1997 SC 610 : 1997 Cri LJ 743
7. Smt. Nilabati Behera alias Lalita Behera, Vs. State of Orissa and others, AIR 1993 SC-1960 1993-SCC-2-746
8. Sunil Batra Vs. Delhi Administration, AIR 1980 SC1579 1980-SCC-3-488
9. P. Viswanathan Vs. Dr.A.K. Burman And Another, 2003-Cr.L.J-949-Cal
10. Administration Law by Sir William Wade, 8th Edn. (page 768)
11. P. Viswanathan Vs Dr. A.K. Burman And Another, 2003-Cr.L.J-949-Cal
12. Jowitt's Dictionary of English Law
13. Winfield
14. Administration Law by Sir William Wade, 8th Edn.
15. Smt, Nilabati Behera@Lalitha Behera, Vs. State of Orissa & Ors. AIR 1993 SC-1960; 1993-SCC-2-746
16. Sube Singh Vs. State of Haryana & Ors. AIR 2006 SC 1117.
17. D.K.Basu Vs. State of West Bengal, AIR 1997 SC 610 : 1997 Cri LJ 743
18. Munshi Singh Gautam Vs. State of M.P., AIR 2005 SC 402, (2005) 9 SCC 631.
19. Dalbir Singh v. State of U.P., 2009 Cr.L.J. 1543 SC
20. B. Ammu v. State of T.N. and another, 2009 Cr.L.J. 866 Mad.
21. Murti Devi Vs. State of Delhi, 1998-SCC-9-604.
22. Sankari Masomat and another v. State of Jharkhand and Others, 2009 Cr.L.J. 1445 Jhar.
23. Peoples Union for Democratic Rights Vs. Police Commissioner, Delhi Police Headquarters, 1989-SCC-4-730.
24. Bhim Singh v. State of J. & K. (1985) 4 SCC 677: AIR 1986 SC 494
25. S.Srinidhi Vs. State of Karnataka & Anr. AIR 2007(NOC) 1641 (Kar)
26. State of Maharashtra Vs. Ravikant S. Patil, (1991)2 SCC 373: 1991 AIR SCW 871
27. D.K. Basu Vs. State of West Bengal, AIR 1997 SC 610: 1997 Cri LJ 743
28. D.K. Basu Vs. State of West Bengal, AIR 1997 SC 610: 1997 Cri LJ 743
29. D.K. Basu Vs. State of West Bengal, AIR 1997 SC 610: 1997 Cri LJ 743
30. “Freedom under the Law” Hamlyn Lecture in 1949 by Lord Denning
31. Smt. Nilabati Behera @Lalitha Behera, Vs. State of Orissa & Ors. AIR 1993 SC-1960 1993-SCC-2-746
32. Bhagalpur Blinding cases: Khatri (II) v.State of Bihar (198) 1 SCC 627 : AIR 1981 SC 928; Khatri (IV) v. State of Bihar (1981) 2 SCC 493: AIR 1981 SC 1068; Union Carbide Corporation v. Union of India (1991) 4 SCC 584: AIR 1992 SC 248
33. Smt. Nilabati Behera @ Lalitha Behera, Vs. State of Orissa & Ors, AIR: 1993 SC-1960, 1993-SCC-2-746
34. Justice D.Murugesan in Tamil Sakthi v. State of T.N. & Ors., 2010 CIJ 245 Mad (1)
35. D.K. Basu Vs. State of West Bengal, AIR 1997 SC 610, 1997-SCC-1-416
36. Smt. Nilabati Behera @ Lalitha Behera, Vs. State of Orissa & Ors, AIR: 1993 SC-1960, 1993-SCC-2-746

37. M.A.Meeran & Ors. v. Govt. of T.N. & Ors., 2009 Cr.L.J. (NOC) 1080 Mad.
38. Maharaj v. Attorney-General of Trinidad and Tobago (No.2), (1978) (2) ALL ER670
39. Smt. Nilabati Behera @ Lalitha Behera, Vs. State of Orissa & Ors, AIR: 1993 SC-1960, 1993-SCC-2-746
40. Dino DG Dympep Vs. State of Meghalaya, AIR 2007 Gau, 155, Smt. Nilabati Behera @ Lalitha Behera, Vs. State of Orissa & Ors, AIR: 1993 SC-1960, 1993-SCC-2-746
41. Smt. Nilabati Behera @ Lalitha Behera, Vs. State of Orissa & Ors, AIR: 1993 SC-1960, 1993-SCC-2-746
42. Maharaj v. Attorney-General of Trinidad and Tobago (No.2), (1978) (2) ALL ER670
43. Bhim Singh v. State of Jammu & Kashmir, 1985 (4) SCC 677 : 1986 Cri LJ 192
44. P. Viswanathan Vs. Dr. A.K. Burman And Another, 2003-Cr-L.J.-949-Cal
45. M.A. Meeran & Ors. v. Govt of T.N. & Ors., 2009 Cr.L.J. (NOC) 1080 Mad. (DB)
46. Smt. Nilabati Behera @ Lalitha Behera, Vs. State of Orissa & Ors, AIR: 1993 SC-1960, 1993-SCC-2-746
47. Rudul Sah v. State of Bihar, AIR 1983 SC 1086 : 1983 Cri LJ 1644
48. Sube Singh Vs. State of Haryana & Ors 2006-Cr.L.J – 1242-SC
49. Abdul Rashid Beigh Vs. State, 2004-Cr.L.J-1706-J&K, Dino DG Dympep Vs. State of Meghalaya, AIR 2007 Gau, 155
50. Saheli, A Women's Resources Centre Vs. Commr. Of Police, Delhi, AIR 1990 SC 513
51. P. Viswanathan Vs. Dr. A. K. Burman And Another, 2003-Cr.L.J.-949-Cal
52. State of A.P., Vs. Challa Ramakrishna Reddy and others, AIR 2000 SC-2083, 2000-SCC-5-712
53. Smt. Nilabati Behera @ Lalitha Behera, Vs. State of Orissa & Ors, AIR: 1993 SC-1960, 1993-SCC-2-746
54. Lord Watson in Richard Coomber v. Justices of the Country Berks, (1883-84) 9 AC 61, State of Bombay Vs. Hospital Mazdoor Sabha, AIR 1960 SC 610, Corpn. Of the City of Nagpur Vs. Its Employees, AIR 1960 SC 675
55. R.M. Sahai in N. Nagendra Rao & Co. v. State of A.P., AIR 1994 SC 2663
56. State of A.P., Vs. Challa Ramakrishna Reddy and others, AIR 2000 SC-2083, 2000-SCC-5-712
57. N. Nagendra Rao & Co. Vs. State of A.P., AIR 1994 SC 2663: (1994)6 SCC 205: 1994 AIR SCW 3753
58. M/s. Kasturi Lal Ralia Ram Jain Vs. The State of U.P., AIR 1965 SC 1039
59. P. Viswanathan Vs. Dr. A. K. Burman And Another, 2003-Cr.L.J.-949-Cal
60. Common Cause. A Registered Society Vs. Union of India (1999) 6 SCC 667: AIR 1999 SC 2979
61. Chairman, Railway Board v. Chandrima Das, (2000) 2 SCC 465 : 2000 Cri LJ 1473
62. Abdul Rashid Beigh Vs. State, 2004-Cr.L.J-1706 – J&K
63. Mrs. Meera Nireshwalia v. The Stae of T.N., (1990) 2 LW 621 : 1991 Cri LJ 2395
64. Joginder kaur v. The Punjab State, 1968 Acc CJ 28: (1969) Lab IC 501 (Punj)
65. State of Rajasthan v. Mst. Vidhyawati, 1962 Supp (2) SCR 989 : AIR 1962 SC 933
66. Premilaben R. Jaishwal & Ors. Vs. B.M. Jadeja & Ors.2007 Cr.L.J. 4165 Guj.
67. Abdul Rashid Beigh Vs. State, 2004-Cr.L.J-1706 – J&K
68. Sube Singh Vs. State of Haryana 2006-Cr.L.J – 1242-SC

**Source: Law and Practice of**
**Rights of Prisoners**
**2nd Edition March 2010**
**By council of Indian Jurisprudence**
**152, Broadway, Chennai**

# இந்தியாவின் பிரகாசமான சட்டத்தைப் பாதுகாத்தல்

– சைலேஷ் காந்தி

இந்தியாவின் தகவல் உரிமைச் சட்டம் உலகிலேயே இரண்டாவது சிறந்த தகவல் உரிமைச் சட்டம் என்று உலகளாவிய அமைப்புகளால் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இந்தச் சட்டத்தின் உண்மையான நடைமுறை, நம்மை இன்னும் நிறைய யோசிக்க வைக்கிறது. நாட்டின் பல இடங்களில் இந்தச் சட்டத்தை பயன்படுத்துபவர்கள் இதன் செயல்பாடுகளில் முன்னேற்றத்தை உறுதிப்படுத்த முயன்று வருகிறார்கள். அவர்கள் இந்தச் சட்டத்தை தங்களது சொந்தச் சட்டமாக கருதி, திருத்தங்களின் மூலம் பலவீனப்படுத்த அரசு மேற்கொண்ட அனைத்து முயற்சிகளையும் தடுத்துள்ளனர். பொதுவாக சட்டங்களை நடைமுறைப்படுத்துவது அரசின் வேலை, ஆனால் இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது குடிமக்கள்தான். இந்தச் சட்டம் முறையாக வேலை செய்வதை உறுதிப்படுத்த மக்கள், பொதுத் தகவல் அதிகாரிகள் முதல் மேல்முறையீட்டாளர்கள் மற்றும் ஆணையர்கள் ஆகியோரை நச்சரித்துக்கொண்டே இருக்கின்றனர். செய்தித்தாள்களின் தலைப்புச் செய்திகளில் அடிபட்டப் பல ஊழல்களை வெளிக் கொணர்வதில் தகவல் உரிமைச் சட்டத்திற்குப் பெரும் பங்கு உண்டு. ஆனால், சமீபத்தில் நடந்த இரண்டு நிகழ்வுகள் இந்தச் சட்டத்தின் எதிர்காலம் பற்றி கவலையை நமக்கு அளிக்கிறது.

**கவலைக்கிடமான நிகழ்வுகள்**

முதலாவதாக நமித் ஷர்மா எதிர் இந்திய யூனியன் வழக்கு எண் 210, 2012 என்ற வழக்கில் செப்டம்பர் 13 அன்று உச்சநீதிமன்றம், தகவல் ஆணையங்கள் அனைத்து மேல்முறையீடுகள் மற்றும் புகார்களை இரண்டு நபர் கொண்ட பெஞ்சில் விசாரிக்க வேண்டும், அதில் ஒருவர் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியாக இருக்க வேண்டும் என்று தனது தீர்ப்பில் கூறியுள்ளது. தகவல் உரிமைச் சட்டம் அதிகபட்சமாக 11 ஆணையர்களைக் கொண்டது (எனவே 11 பெஞ்சுகள்). உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு, இதை 5 பெஞ்சுகளாக குறைத்துள்ளது.

அக்டோபர் 12 அன்று மத்திய தகவல் ஆணையத்தின் வருடாந்திர மாநாட்டில் பிரதம மந்திரி பேசியது அடுத்த கவலைக்கிடமான நிகழ்வாகும். அற்பத்தனமான மற்றும் எரிச்சலூட்டுகிற தகவல் உரிமைச் சட்ட விண்ணப்பங்கள் குறித்து பிரதம மந்திரி தனது கருத்தை வெளியிட்டுள்ளார். நடைபெற்ற தவறுகளை வெளிச்சத்திற்கு கொண்டு வர குடிமக்கள் தகவல்களை கேட்பது, பொதுத் தகவல் அதிகாரிகளின் நேரத்தை அதிகமான அளவில் செலவிட வைப்பதாக பிரதம மந்திரி குறிப்பிட்டுள்ளார். பொது மற்றும் தனியாரின் கூட்டு நிறுவனங்களிடம் தகவல் அளிக்கக் கோருவது தனியார் முதலீட்டை பாதிக்கும் என்று பிரதமரும் தனது கருத்தை வெளியிட்டார்.

இந்த இரண்டு நிகழ்வுகளும் தனித்தனியானது, ஒரு மாதத்திற்குள் அடுத்தடுத்து நிகழ்கிறது. அவை சம்பந்தப்பட்ட குடிமக்களுக்கு எச்சரிக்கை செய்வதாக இருக்க வேண்டும். தகவல் உரிமைச் சட்டம் பற்றி கடந்த ஒரு ஆண்டில், உச்ச நீதிமன்றத்தின் நான்கு தீர்ப்புகளை பார்வையிட நான் முடிவு செய்தேன். நமித் ஷர்மா வழக்கில், உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பில், தகவல் உரிமைச் சட்ட நடைமுறை பாதிக்கும் சில முக்கியக் கருத்துக்களை நான் பட்டியலிடுகிறேன்.

(1) ஆணையர்கள் வழக்குகளை விசாரிக்கும் பெஞ்சுகளை அதிகபட்சம் 5ஆக இந்தத் தீர்ப்பு குறைத்துள்ளது, (முன்னதாக 11). இது பற்றி நீதிமன்றம் யோசித்ததாகத் தெரியவில்லை.

(2) குறைக்கப்பட்ட பெஞ்சுகள் என்றால், ஒரு பெஞ்ச் மூலமாக 3,000 வழக்குகளை விசாரிப்பார்கள், அதாவது ஒரு ஆண்டில் ஒரு ஆணையம் மூலமாக 15,000 வழக்குகள், மத்திய ஆணையம், மகாராஷ்டிர மாநில ஆணையம் மற்றும் உத்திரப் பிரதேச மாநில ஆணையம் ஆகியவற்றிற்கு ஒவ்வொரு ஆண்டும் 20,000 வழக்குகள் வருகின்றது. மேலும் இந்த எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இந்தச் சட்டம் யாருக்கானது என்று நாம் சொல்கிற சாதாரண குடிமகன்/ள், நுகர்வோர் அமைப்புகள் மற்றும் நீதித்துறையை விட்டு விலகி வந்ததுபோல, இந்தச் சட்டத்தையும் பயன்படுத்த மாட்டார்கள். அவ்வாறு நடந்தால், இந்திய ஜனநாயகத்தின் முகத்தை மாற்றக்கூடிய, தகவல் உரிமைச் சட்டத்தின் திறன் தொலைந்து போகும். தகவல் உரிமைச் சட்டக் கேள்விகளுக்கு பதில் அளிக்க குறைந்த பொது ஊழியர்கள் இருக்கும் நிலை வரும்.

(3) உலக அளவில், சுமார் 90 நாடுகள் சட்டங்களைப் பெற்றுள்ளன. அதில் 35 நாடுகளில் தகவல் ஆணையம் உள்ளது. அதில் ஒன்றிற்குக் கூட, நீதித்துறை உறுப்பினர்கள் தேவைப்படவில்லை, பலவற்றிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர் அடங்கிய பெஞ்சுகள் தேவைப்படவில்லை.

(4) இந்தியா மற்றும் உலகின் பல இடங்களில் பெரும்பாலும் நீதிமன்றம் போன்ற அமைப்புகளில் நீதித்துறை உறுப்பினர்கள் இல்லை. தகவல் உரிமைச் சட்டத்தின் பிரிவுகளுக்கு முரணாக உள்ளதால், தகவல் ஆணையத்தை தீர்ப்பு அதிகாரம் உடைய அமைப்பு என்று நீதிமன்றம் அறிவித்தது தவறாகும்.

(5) ஓய்வு பெற்ற நீதிபதிகள் தேவை என்று ஆணையிட சட்டரீதியான விளக்கங்கள் மற்றும் மூன்றாம் நபர் சார்ந்த பிரச்சனைகள் பற்றி நீதிமன்றம் பேசியுள்ளது.

இதில், தகவல் அளிப்பதைவிட, விலக்கு அளிக்கவே அதிக அக்கறை கொண்டுள்ளதாகத் தெரிகிறது. 2012 ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான காலத்தில் மத்திய தகவல் ஆணையங்களின் முடிவுகள் பற்றிய ஆய்வில், சுமார் 15% வழக்குகளில் மட்டும் தான் சட்ட விளக்கங்கள் கையாளப்படுவது தெரியவந்துள்ளது.

(6) பாராளுமன்றம் மற்றும் நிர்வாகத்தின் ஆளுகைக்குள் உள்ளவை பற்றி இந்தத் தீர்ப்பு முடிவு செய்தது. நீதித்துறை சட்டங்களை இயற்றினால் அரசியல் சாசனத்தில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரம் சமமாக இல்லாமல் போய்விடும், அத்தகைய விஷயங்களில் பொதுமக்கள் விவாதித்து கருத்து தெரிவிக்க வாய்ப்பில்லாமல் போகும். இது அரசியல் சாசனப் பிரிவுகளோடு ஒத்ததாக இல்லை.

(7) நீதிமன்ற வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதன் விளைவு, ஓரளவிற்கு முறையாக வேலை செய்யும் எளிமையான நடைமுறைகளை, விஷயங்களை தாமதப்படுத்தும் நீதிமன்ற அமைப்பாக மாற்றுவதில் முடியும். தற்போது, சுமார் 99% க்கும் அதிகமான குடிமக்கள், இரண்டாவது மேல் முறையீட்டில் அவர்களது வழக்குகளில் அவர்களே வாதாடுகிறார்கள். இந்த நீதிமன்ற தலையீட்டின் தாக்கத்தால், பலர் தனது முறையீட்டிற்காக வழக்கறிஞர்களை அமர்த்த வேண்டும். இதனால், ஆணையத்தை அணுகும் ஏழை மக்களின் வழியில் பல்வேறு தடைகள் ஏற்படும்.

> *இத்தனை ஆண்டுகளாக, ஆணையங்களின் அணுகுமுறை, விளையாட்டுக் களத்தில் மேடையில் அமர்ந்து அருளுரை வழங்காமல் விளையாட்டு வீரர்களோடு நிற்கும் நடுவரைப் போன்று இருந்தது. திறந்த அணுகுமுறை, எளிமையான நடைமுறைகள் போன்ற குணங்களைக் கொண்டதாக ஆணையங்களின் செயல்பாடு இருந்தது. வழக்கறிஞர்கள், உதவியாளர்கள் யாரும் இல்லாமல், எந்த ஒரு தீவிர நடைமுறையும் இல்லாமல் இருந்தது. தகவல் ஆணையங்களை அதிகமான நீதித்துறை நடைமுறைகளுக்கு உள்ளாக்குவது அவற்றின் நெகிழ்வுத் தன்மையைப் போக்கி விடும். இதுதான் சரியான பாதையா என்று சமூகம் முடிவு செய்ய வேண்டும்.*

## கண்காணிப்பு தேவை:

குடிமக்களுக்கு பாராளுமன்றத்தில் அவர்களது பிரதிநிதிகள் வாயிலாக வழங்கப்பட்ட அடிப்படை உரிமையில் இந்தத் தீர்ப்பு தலையிடுவதால், அதுபற்றி விவாதித்து அதைத் தள்ளுபடி செய்ய அவர்கள் உச்சநீதிமன்றத்தைக் கேட்டுக்கொள்ள வேண்டும். தகவல் உரிமைச்சட்டம் ஒப்பீட்டு அளவில் முறையாக வேலை செய்கிறது, அந்தச் சட்டத்தில் எந்தத் திருத்தத்தையும் காண விரும்பவில்லை என்று மக்கள், பாராளுமன்றம் மற்றும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளனர். குடிமக்களுக்கு ஓரளவிற்கு அடிப்படை உரிமையை வழங்கிக் கொண்டிருக்கும் ஒரு நடைமுறையை இந்தத் தீர்ப்பு நிலை குலைய வைக்கிறது.

தற்போதைய ஆணையர்கள் பலரும் தேவைப்படும் தகுதிகளோடு இல்லை என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். முறையான நடைமுறைகள் இல்லாமல் நியமிக்கப்பட்ட அனைத்து ஆணையர்களுககு எதிராக புகார் உள்ளது. ஆணையர்களைத் தேர்ந்தெடுப்பதில் வெளிப்படைத் தன்மையையும், அவர்களை பொறுப்புடையவர்களாக ஆக்குவதை உறுதிப்படுத்துவதிலும்தான் இதற்குத் தீர்வு இருக்கிறது. தகவல் உரிமைச் சட்டத்தின் எதிர்காலத்தை குறுக்கும் பிற 3 தீர்ப்புகள் உள்ளன.

2011, 10787 – 10788 என்ற சிவில் மேல்முறையீட்டில், நீதிமன்றம் இந்தச் சட்டத்தை, நோக்கங்களின் அடிப்படையில் புரிந்து கொள்ளாமல், அப்படியே வார்த்தைகளின்படி புரிந்து கொண்டதால் பிரிவு 18ன் கீழ் வரும் ஒரு புகாரில் தகவல் அளிக்கும்படி ஆணையங்கள் ஆணை பிறப்பிக்க முடியாது என்று அறிவித்தது. இந்தத் தீர்ப்பு சட்டத்தின் அடிப்படை நோக்கத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. அலகாபாத் உயர்நீதிமன்றத் தீர்ப்பிற்கு (A 3262 (178) of 2008) இது எதிரானதாகும். அந்த வழக்கில்,

> *ஆணையம், பிரிவு 18ன் கீழ் வரும் புகார்களை விசாரிக்கும்போது கேட்கப்பட்ட தகவலை அளிக்க, தகவல் தவறுதலாக வழங்காமல் நிறுத்தப்பட்டுள்ளது அல்லது முழுவதுமாக அளிக்கப்படவில்லை அல்லது தவறான தகவல் அளிக்கப்பட்டுள்ளது என்று ஆணையம் கருதினால் தேவைப்படும் வழிகாட்டுதல்களை வழங்கலாம்.*

உச்ச நீதிமன்றத்தின் ஆணையைத் தொடர்ந்து, ஆணையங்களால், சட்டத்தின் முக்கிய நோக்கமான புகார்களுக்கு தகவல்களை அளிப்பதை செய்ய முடியவில்லை. வழக்கு எண் 27734 / 2012 என்ற வழக்கில் பொது ஊழியர்கள், அவர்களது சொத்துகள், அவர்களது பணி சார்ந்த செயல்திறன் பற்றிய அறிக்கை, அவர்களால் பெறப்பட்ட அன்பளிப்புகள் குறித்த விபரங்கள் ஆகியவை தகவல் உரிமைச் சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்படுவதாக உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இது நீதிமன்றம் முன்னர் அளித்த ஆணைக்கு எதிராக உள்ளது.

> *பேச்சு சுதந்திரத்தின் விளைவான, குடிமக்களுக்கு தகவல் பெறும் உரிமையை அளிக்கும் பிரிவு 3-க்கு தகவல் உரிமைச் சட்டத்தின் பிரிவு 8 விதிவிலக்காக இருக்கிறது. எனவே, பிரிவு 8*

*குறுகிய கண்ணோட்டத்தில் அப்படியே புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்று சில உயர்நீதிமன்றங்கள் குறிப்பிட்டுள்ளன. இது சரியான அணுகுமுறை அல்ல.*

## சட்டத்தை அதிகாரத்துவப்படுத்துவது:

குடிமகனின் தெரிந்து கொள்ளும் உரிமையை அங்கீகரிப்பதால். உயர் நீதிமன்றங்களின் அணுகுமுறை சரி என்று நான் கருதுகிறேன். இந்த உரிமை 1975 முதல் உச்ச நீதிமன்றத்தால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

*தகவல் உரிமை சட்டத்தின் கீழ், அனைத்துத் தகவல்களையும் (பொது அதிகாரிகளின் வெளிப்படைத் தன்மை, பொறுப்புடைத் தன்மை, ஊழல் ஒழிப்பு ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டு) அளிப்பதற்காக பாகுபாடற்ற மற்றும் நடைமுறைக்கு அப்பாற்பட்ட கோரிக்கைகள் அல்லது வழிகாட்டுதல்கள் அளிக்கப்பட்டால் அவை மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். இந்தச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவதை நாம் அனுமதிக்கக் கூடாது. தேச வளர்ச்சி மற்றும் ஒருமைப்பாடு அல்லது அமைதிக்கு எதிரான ஒரு கருவியாக இந்தச் சட்டம் பயன்படுத்தப்படக் கூடாது. அதேபோல், நேர்மையாக செயல்படும் அதிகாரிகளை மிரட்டுவதற்கும் ஒடுக்குவதற்கும் கூட ஒரு கருவியாக இது மாறக்கூடாது.*

தகவல் உரிமைச் சட்டம், பொது ஊழியர்களை அடிமைப்படுத்த, பயமுறுத்த பொதுமக்களை வலிமையாக்கியிருக்கிருக்கிறது என்பதை அறிந்தால் அவர்கள் ஆச்சரியப்படுவார்கள். 6454 என்ற வழக்கின்மேல் முறையீட்டில், உச்ச நீதிமன்றம், மேலும் அதில்,

*பொது ஊழியர்களில் 75ஐ பேர் அவர்களது 75ஐ நேரத்தை அவர்களின் வழக்கமான கடமையைச் செய்யாமல் தகவல் சேகரிக்க, அளிக்க பயன்படுத்தும் நிலை ஒரு தேசத்திற்குத் தேவையில்லை என்று கூறுகிறது.*

உண்மை என்னவென்றால், 4.6% அரசாங்க ஊழியர்கள்தான் அவர்களது வேலை நேரத்தில் 4.6%க்கும் கூடுதலான நேரத்தை தகவல் உரிமைச் சட்டம் தொடர்பான விஷயங்களில் செலவிடுகிறார்கள் என்று மத்திய அரசு தெரிவிக்கிறது. ஏப்ரல் 2012ல் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, தகவல் உரிமைச் சட்டக் கேள்விகள் நீதிபதிகளின் வேலையில் குறுக்கிடுவதால் தகவல் பெறும் உரிமைக்கு எல்லை வேண்டும் என்று கூறியிருக்கிறார். இந்தத் தகவல் எதற்கும் ஆதாரம் இல்லை என்று நான் கூறுகிறேன். மேலும், அடிப்படை உரிமைக்கு எல்லை என்பது பாராளுமன்றத்தால் மட்டுமே வழங்கப்படும். பாராளுமன்றம் 10 விதிவிலக்குகளை அறிவித்துள்ளது. இந்தச் சட்டத்தில் விதிவிலக்குகளின் எல்லையை விரிவுபடுத்தினால், மெல்ல இந்தச் சட்டம் தகவல் அளிக்க முடியாததற்கான உரிமைச் சட்டம் என்று மாறிவிடும்.

## சுதந்திரம் சார்ந்த பிரச்சனை

தகவல் உரிமைச்சட்டம் தொடர்பான கேள்விகளுக்கு பதில் அளிப்பதில் அதிகமான நேரம் செலவிடப்படுவதாக பிரதம மந்திரி குறிப்பிட்டுள்ளார். முன்னாள் தலைமை நீதிபதியும் இதுபற்றி தனது அக்கறையை வெளிப்படுத்தியுள்ளார். பொது ஊழியர் எனப்படுபவர் பற்றிய தகவலைத் தெரிந்து கொள்ளுவது குடிமக்களின் உரிமை. ஆனால், அதுவே அவரது சுதந்திரத்தில் தலையிடுவதாகும் என்று தற்போது கூறப்படுவது விந்தையாகும். அடிப்படையில், இந்தச் சட்டப்பிரிவு 4ல் குறிப்பிட்டுள்ளவற்றை நிறைவேற்றாததன் விளைவுதான் இது. பிரிவு 4ல் குடிமக்களுக்கு பாராளுமன்றம் உறுதி செய்தது என்னவென்றால் (i) பெரும்பாலான நடவடிக்கைகள் / பதிவுருக்கள் கணினிமயமாக்கப்படும், வலைப்பின்னல் மூலம் தொடர்புபடுத்தப்படும், ஆவணங்கள் முறையாக தொகுப்பிலிடப்படும், அகர வரிசையில் அட்டவணைப்படுத்தப்படும். (ii) அனைத்து பொது அதிகார அமைப்பினரால் தகவல்கள் தாமாகவே முன்வந்து தரப்படும். (iii) முக்கியக் கொள்கைகள் வகுக்கப்படும்போது அது தொடர்பான உண்மைகள் வெளியிடப்படும். (iv) பாதிக்கப்பட்டவர்களுக்கு அதன் நிர்வாக அல்லது நீதிமுறை சார்புடைய முடிவுகளுக்கான காரணங்கள் தெரிவிக்கப்படும். இந்த உறுதிமொழியும் நம்பிக்கையும் காப்பாற்றப்படவில்லை. சட்டத்தின் இந்த கட்டாயமான கடமையை நிறைவேற்ற எந்த ஒரு தீவிர முயற்சியும் எடுக்கப்படவில்லை. பொது ஊழியர் எனப்படுபவர் பற்றிய தகவலைத் தெரிந்து கொள்ளுவது குடிமகனின் உரிமை. ஆனால் அதுவே அவரது சுதந்திரத்தில் தலையிடுவதாகும் என்ற தற்போது கூறப்படுவது விந்தையாகும். பொது மற்றும் தனியாரின் கூட்டு நிறுவனங்களிடம் தகவல் அளிக்கக் கோருவது தனியார் முதலீட்டைப் பாதிக்கும் என்று பிரதமரும் தனது கருத்தை வெளியிட்டார்.

குடிமக்கள், சமீபத்திய உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் பிரதம மந்திரியின் உரையையும் அதன் விளைவுகள் பற்றியும் பொதுக் கூட்டங்கள் மற்றும் விவாதங்கள் நடத்தி மறுபரிசீலனை செய்ய வேண்டும். இவை மக்களின் தகவல் பெறும் உரிமைக்குப் பாதகமாக இருக்கும் என்று நினைத்தால், அவர்கள் இந்தத் தீர்ப்பைத் திரும்பப் பெற்று வெளிப்படைத் தன்மைக்கு சாதகமான ஒரு தீர்ப்பை வழங்குமாறு நீதிமன்றத்தைக் கேட்டுக் கொள்ள வேண்டும். குடிமக்கள் விழிப்புணர்வு இல்லாமல் இருந்தால் இந்தத் தகவல் பெறும் உரிமைச் சட்டம் இன்னும் பலவீனப்படுத்தப்படும். ஒளிமயமான இந்தச் சட்டம் இருண்டு போகும்.

**ஆதாரம்: Economic & Political Weekly, November 3, 2012**

For Private Circulation Only



Source: www.firstpost.com

*Education Material Published on behalf of*

*Campaign for Custodial Justice & Abolition of Torture by*

***Human Rights Advocacy and Research Foundation (HRF)***

*# 10, LDG Road, Little Mount, Saidapet, Chennai - 600 015, INDIA.*
*☎ 044 22353503, 044 22351919 Fax : 044 22355905,*
*E-mail : humanrightsadvocacyandresearch@gmail.com*
*website : www.humanrightsadvocacyandresearchfoundation.org*